

கல்கி
KALKI 22.11.1964
30
காசு




# அமிர்தாஞ்சனம்

## தடவி விரைவில் நிவாரணம் பெறுங்கள்

உடலில் ஒரு பகுதியை மட்டும் பாதிக்கும் வலிக்காக உள்ளுக்கு மருந்து சாப்பிடுவானேன்? வலிக்கும் இடத்தின் மேல் மட்டும் அமிர்தாஞ்சனம் தடவி விரைவாக வலி நிவாரணம் அடையுங்கள். பத்து மருந்துகள் கொண்டு விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்டுள்ள அமிர்தாஞ்சனம் தசைவலி, தலைவலி, சுளுக்கு மற்றும் மூட்டு வலிகளுக்கு சிறந்த வகையில் நல்ல நிவாரணமளிக்கும். மற்றும் மார்ப்புச்சளி, ஜலதோஷம் போன்றவைக்கும் ஏற்ற மருந்து அமிர்தாஞ்சனம். ஒரு சமயத்தில் தேவையானதெல்லாம் மிகச் சிறு அளவே; ஆதலால், ஒரு பாட்டில் உங்கள் குடும்பத்திற்கு மாதக் கணக்கில் வரும்.

அமிர்தாஞ்சனம் 70 வருடங்களாகக் குடும்பங்களில் பயன்படுவரும் கைகண்ட நிவாரணி.

பத்து மருந்துப் பொருள் ஒருங்கே சேர்ந்த அமிர்தாஞ்சனம் வலிகளுக்கும் ஜலதோஷத்திற்கும் ஏற்ற சிறந்த நிவாரணி




அமிர்தாஞ்சன் லிமிடெட், மதராஸ்-பம்பாய்-கல்கத்தா-டெல்லி

## என் மகள் இவளோ !

ன்ஒரு பரிசோ! இறைவனின் அருளோ!
  எந்தனின் பேரழகோ!
ழுந்திடும் எழிலும் தத்திடும் மொழியும்
  தலைவன் தந்தவையோ!

றிடும் முத்தோ! சிந்தனைக் கோத்தோ!
  சிறுநகைப் புதுமுகமோ!
தழ்களின் ஓரம் இழைந்திடும் ஒலியில்
  எந்தனின் இசையலையோ!

றவுக்குத் தடையோ! துன்பத்தின் பகையோ!
  தொட்டிலில் கிடப்பவளோ!
றவுக்குப் பரிசோ! உள்ளத்தின் நினைவோ!
  உணர்ச்சியைப் படைப்பவளோ!

ஞ்சேனும் உடலோ! பைங்கிளி முகமோ!
  பஞ்சணை தந்ததுவோ!
ஞ்சணை வாழ்க! பைங்கிளி வாழ்க!
  படைத்தவன் அருள்வாழ்க!


—செல்ல கணபதி

# கல்கி
## பொருளடக்கம்

குரோதி கார்த்திகை 7 — நவம்பர் 22



''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



திறமையற்ற அதிகாரவர்க்கம்
மண்டலக் கட்டுப்பாடுகள்
பயிர் எங்கே எஜமானே?
கடன் வசதித் தடை
கண்ட்ரோல்கள்
சுபிட்சபுரிக்கு நேரு காட்டிய மார்க்கம்
உணவு நெருக்கடி
சர்க்கார்
அரிசி வியாபாரம்
PK



மலர் 28 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 17

# சோஷலிஸ மோசம்

**ராஜாஜி**

எல்லா மக்களையும் ஒரே மட்டமாக்க வேண்டும் என்பது சோஷலிஸத்தின் இலட்சியம். ஒவ்வொரு மனிதனும் தனக்குள்ள விசேஷப் பண்புகளை வளர்த்துக் கொள்ள ஊக்கமும் உதவியும் அளிக்க வேண்டும் என்பது சுதந்திரக் கட்சியின் விருப்பம். சோஷலிஸ்டுகள் தடை செய்யவும் நிர்ப்பந்தப்படுத்தவும் விரும்புகிறார்கள். சுதந்திரக் கட்சியினர் செயற்கைத் தடைகளை அழித்து, முன்னேற்றமும் சுபிட்சமும் காண வேண்டுமென்கிறார்கள்.

நாட்டிலுள்ள செல்வத்தை யெல்லாம் எல்லோருக்கும் சமமாக விநியோகிக்க வேண்டும் என்கிற சோஷலிஸக் கொள்கையால் ஒருபோதும் உற்பத்திப் பெருக்கம் செய்ய இயலாது. சம விநியோகத்தால் எல்லோருக்கும் சமமான வறுமையைத் தான் பங்கிட முடியும்; பணக்காரரை ஏழையாக்க முடியும்; அவ்வளவே. தேசத்தின் உற்பத்தியைப் பெருக்குவதொன்றால்தான் ஏழைகளின் வாழ்க்கை நிலையை உயர்த்த முடியும். அதை சோஷலிஸம் தடை செய்கிறது.

உற்பத்தியைப் பெருக்குவதற்கு மூலதனம் அவசியம். நம் நாட்டிலேயே உள்ள தனவந்தர்களின் சேமிப்பிலிருந்தோ, நம் நாட்டில் முதலீடு செய்யக்கூடிய அயல்நாட்டுச் செல்வந்தர்களின் சேமிப்பிலிருந்தோதான் இந்த மூலதனத்தைப் பெறமுடியும். இரண்டுமே தாராளமாகக் கிடைக்க வழி உண்டு. ஆனால், எல்லாத் தொழில்களையும் சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டும். தனி முதலாளிகளின் லாபத்தையெல்லாம் சர்க்கார் பறிமுதல் செய்ய வேண்டும் என்று பகிரங்கமாகவும் மறைமுகமாகவும் பயமுறுத்துவதால் தனவந்தர்கள் தங்கள் சேமிப்பை உற்பத்திக்காக வெளிக் கொண்டுவர அஞ்சுகிறார்கள். இதனாலேயே செல்வம் பதுக்கப்படுகிறது.

அரசாங்கம் பல துறைகளில் பிரவேசித்திருப்பதால் இப்போது பலருக்கு உத்தியோகம் கிடைப்பது உண்மை. எனினும் சர்க்கார் ஊழியர்களைப் பெருக்குவதால் உற்பத்திக்கு எவ்வித அபிவிருத்தியும் இல்லை. சர்க்காரின் ஊழியர் பட்டாளத்துக்குப் பிறர் ரத்தத்தை உறிஞ்சித் தரவேண்டியதாகிறது. வேலை கிடைக்காத நிலைமை நல்ல முறையில் தீரவேண்டுமானால் தனியார் தொழில் வளர்ந்து பெருக வழி காண வேண்டும்.

சோஷலிஸ முறையில் சர்க்காரால் நாட்டின் பொருளாதாரம் இயக்கப்படுகிறது. பெர்மிட், லைசென்ஸ், கோட்டா இவற்றைக் கொண்டு பொருளாதாரத்தைச் சர்க்கார் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. மந்திரிகளும், மந்திரிகளின் உத்தரவுப்படி ஊழியம் செய்யும் அதிகாரிகளும் லைசென்ஸ், பெர்மிட்களை வழங்க அதிகாரம் பெற்றிருக்கும்போது — அவர்கள் அதிகார துஷ்பிரயோகம் செய்யாமல் கண்காணிப்பதற்குத் தகுந்த நீதிமன்றமோ, ஆணையாளரோ இல்லாதபடியால் — லஞ்ச ஊழல் சர்வ வியாபகமாகப் பரவுகிறது. நீண்ட காலமாகத் தருமத்துக்கு அந்தரங்கமாக மதிப்புத் தந்து, அதன்படி நடந்து வந்த நம் மக்கள் — பணம் பெரிதல்ல, அது சமூக நலனுக்காக ஆண்டவன் தங்களிடம் அளித்த காப்பு நிதி என்று கருதிய நம் மக்கள் — காங்கிரஸின் பதினேழாண்டு ஆட்சியில் ஏற்பட்டுள்ள கட்டுப்பாடுகளாலும், நிர்ப்

பந்தங்களாலும், லஞ்சத்துக்கு ஆதரவான சூழ்நிலையாலும் தங்களுடைய பழைய நற்பண்பை இழந்து விட்டார்கள். காங்கிரஸ் ஆட்சி அவர்களை மனச்சாட்சியற்றவர்களாக மாற்றிவிட்டிருக்கிறது. சோஷலிஸ ஆயுதமான ஏகபோக்கியத் தொழில் உரிமைகளைப் பெறும் வழி என்ன, ஆளும் கட்சியின் எந்தத் தலைவரை வசப்படுத்திக்கொண்டு லைசென்ஸ் பெறலாம், அல்லது வேறு எந்த லஞ்சத்தினால் வியாபாரச் சலுகை பெறலாம் என்றே இப்போது தொழில் துறை மக்கள் யாவரும் பகல் முழுதும் சிந்திக்கிறார்கள்; இரவில் அவர்கள் காணும் கனவும் இதுவே. பலபேரிடையே ஒருசிலர் சலுகை பெறவேண்டுமெனில் மற்றவர்களின் தரும நியாயமான உரிமைகளை அந்த ஒருசிலர் பறித்தே ஆகவேண்டும். அவ்வாறு பறிப்பதற்குக் கூசாமல், மனிதரை மனிதர் மாய்த்து முன்னேற வேண்டிய முறையை அரசாங்கம் உண்டாக்கியுள்ளது. ஏழைகளுக்கு நன்மை செய்வதாக ஒரு பொய்ப் பந்தல் போட்டு, பிறரைக் கெடுத்தால்தான் ஒருவர் முன்னேற முடியும் என்ற இந்த நிலையைப் பொய் தோரணையால் மூடி மறைத்துச் சிங்காரிக்கிறார்கள். ஏழை மக்களின் வாழ்நிலையை உயர்த்துவதற்கே பணக்காரர்களை அழிப்பதாக ஏமாற்று வித்தை செய்கிறார்கள். மூலதனமுள்ளவர்களை லஞ்சத்தில் ஏவிவிடுவது போலவே, ஏழை மக்களைத் துவேஷத்துக்கும் அசூயைக்கும் ஆட்படுத்துகிறார்கள். அவர்களும் நம்பிக் கெடுகிறார்கள். தாங்கள் நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்துச் சம்பாதிக்கும் காகித நோட்டு சர்க்காரின் கொள்கையால்தான் ரூபாய்க்கு பதினேழு பைசாவாக மதிப்புக் குன்றிவிட்டது என்பதை நடைமுறையில் அநுபவிக்கும்போதே, ஏழை மக்கள் அதை மறந்து, தங்களுக்காகத்தான் சர்க்கார் பணக்காரர்களை ஏழைகளாக்கியிருக்கிறது என்று மகிழ்கிறார்கள். தங்களுக்கு எந்த லாபமும் இல்லாமல், மனிதரை மனிதர் மாய்ப்பதிலேயே மகிழும் முறை இது.

உண்மையில் இன்று மக்களின் பெரிய கஷ்டம் ரூபாயின் மதிப்புக் குறைந்து போய், அதனால் எல்லாப் பண்டங்களின் விலையும் உயர்ந்திருப்பதுதான். இதற்குக் காரணம் சர்க்காரின் நேர்முக — மறைமுக வரிகளும், பண வீக்கமும்தான். முட்டாள்தனமான ஐந்தாண்டுத் திட்டங்களுக்காகத்தான் இவ்வளவு வரிகளும், காகிதப் பணப் பெருக்கமும். தனது தவறுகளை மறைப்பதற்காக வியாபார சமூகத்தை அரசாங்கம் 'காவு'ப் பகையாக்கியிருக்கிறது. சர்க்காரால் சிருஷ்டிக்கப்பட்ட இனல்களால் மக்களுக்கு ஏற்படக் கூடி சீற்றத்துக்கு வியாபார சமூகத்தை ஆளாக்கி அவர்களை வேட்டையா வருகிறது. வியாபாரிகளின் கையிருப்பெல்லாமே பதுக்கல் என்று குற்ற சாட்டுகிறது. நிலச் சட்டத்தினு தானிய உற்பத்தி குறைந்து, அ சமயத்தில் வரி உயர்வால் விலையு உயர்ந்திருப்பதால் உண்டாகியுள்ள உணவு நெருக்கடியை 'வியாபாரிகளி சதித் திட்டம்' என்கிறது. ஏழைக எளிதில் ஏமாந்து போவார்கள். அவ களை ஆட்சியாளர்கள் ஏமாற்றிப் பஞ்ச, துன்பத்தோடு அசூயை விஷத்தையும் வெறுப்புவாத நச்சையும் கலக்கிறார்கள்.

நிகழ்காலக் கொடுமைகளுக்கெல்லா தெய்வ நம்பிக்கை இல்லாததே மூல காரணம். ஆண்டவனை மறந்து போய் ஏகாதிபத்தியம் செலுத்த எண்ணுபவ களை ஆட்சியிலிருந்து அகற்ற வேண்டும் என்று சுதந்திரக் கட்சி மக்களுக்கு முறையிடுகிறது.

எது கொடுங்கோன்மை, எது நல்லாட்சி என்றறிய வேண்டுமானால் 1949ம் ஆண்டில் நிறைவேறிய மூல அரசியல் சாஸனம் அளிக்கும் சுதந்திர உரிமைகளைக் கொண்டு சர்க்காரின் நடவடிக்கைகளை உரைத்துப் பார்க்க வேண்டும். நாகரிக உலகத்தின் உரிமைப் பத்திரமாக அமைந்தது முன்பு நிறைவேறிய மூல அரசியல் சாஸனம். அந்தச் சாஸனத்தின் மூன்றாம் அத்தியாயத்தில் மக்களின் சுதந்திரங்களை உறுதிப்படுத்தும் ஷரத்துக்கள் வகுக்கப்பட்டன. அவையே சுதந்திரக் கட்சியின் கொள்கைகள் எனலாம். மூன்றாம் அத்தியாயத்தில் அளிக்கப்பட்ட சுதந்திர உரிமைகளை மீறாமலே சமூக நலன் உண்டாக்குவதற்காக சாஸனத்தின் நாலாம் அத்தியாயம் வகுக்கப்பட்டது. 'சட்டத் திருத்தம்' என்ற மோசப் பெயரில் மூன்றாம் அத்தியாயத்து ஷரத்துக்களை ஆள்கிற கட்சி அழித்துவிட்டது.

அரசியல் சாஸனம் மக்களுக்கு அளித்த உரிமைகளை அழிப்பவர்களே பார்லிமெண்டில் பெரும்பான்மை ஸ்தானம் பெற்றுவிட்டு வோட்டு செய்வதால் கொடுங்கோன்மை நல்லாட்சி ஆகிவிடாது. கட்சிக் கொறடாவிற்கிணங்க, ஆள்கிற கூட்டத்தைத் தவிர மற்றவர்களின் ஜன்ம உரிமையை நாசமாக்குவது பார்லிமெண்டு விதிகளின்படி செல்லுபடியானாலும், இதனால் கொடுங்கோன்மை' நல்லாட்சியாகிவிடாது.

பெரும்பான்மை அபிப்பிராயம் ன்ற போர்வையின் கீழ்தான் எல்லா துக்களும் நடக்கின்றன. அதனால் ான் ஆளும் கட்சியின் ஆதரவாளர் ளுக்கு மட்டுமே எல்லாச் சலுகைகளும் ளிக்கும் விதத்தில் பொருளாதார திகாரத்தைச் சர்க்காரிடம் குவித்துக் ாங்கிரஸ் கொடியின் கீழ் கூடியுள்ள ர்கள் யாரையும் எவ்விதத்திலும் காடுமைப்படுத்த முடிகிறது. பல ள்ள பெரும்பான்மைக் கட்சி ஆளும் பாறுப்புப் பெற்றாலும் மக்களின் ரிமைகளை அழிக்கக் கூடாது என்பதே தந்திர மக்களின் சாஸனமாகும். ளும் கட்சியின் சர்வாதிகார ஆட்சிக்கு ாஸனத்தில் இடமில்லை. கட்சியின் ஆட்சிக்கு மேலாக சாஸனத்தின் ஆட்சி லைநாட்டப்பட வேண்டும். சிறுபான்மை யாருக்கும் பெரும்பான்மையோருக் நம் சாஸனம் அளிக்கும் உரிமைகள் க்காலும் மதிக்கப்பட வேண்டும்.

சமீப காலத்தில் மக்களின் அடிப்படை உரிமைகளின் மீது ஆளும் கட்சி படையெடுத்துச் செய்த உற்பாதங்களை நிவர்த்தி செய்து, பெருமதிப்புக்குரிய ராஜன் பாபு முதலியவர்களின் கையொப்பத்துடன் நிறைவேறிய மூல சாஸனத்தை மீண்டும் அமுல் செய்வதே சுதந்திரக் கட்சியின் இலட்சியம்.

அரசாங்க மந்திரி வர்க்கம், உத்தியோகஸ்தர் இவர்களின் அதிகாரம் அதமபட்சமாகும்போதுதான் மக்களுக்கு உண்மையான சுதந்திரம் கிடைக்கும். காந்திஜி விரும்பியது இதுதான். அவர் போதனையை அடியோடு மறந்து அரசாங்கத்தின் ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்தும் நூதன சித்தாந்தத்தைக் காங்கிரஸ் கட்சி அமுல் செய்கிறது. காந்தியவர்களின் கொள்கையை நாம் மீண்டும் நிலைநாட்ட வேண்டும். நமது தினசரி நடவடிக்கைகளில் சர்க்கார் தலையீட்டைக் குறைத்து, நமக்குத் தேவை ஏற்படும் போது மட்டுமே அதன் துணையைக் கோரும் சுதந்திர வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும்.

# என்ன சேதி?

## ஊழலுக்கு ஓர் ஒரிஸ்ஸா

ஒரிஸ்ஸாவில் நடக்கும் மாணவர் ரகளைக்காகத் தேசமே வெட்கப்பட வேண்டும் என்பது ஒருபுறமிருக்க, ஆட்சியாளர்கள் இதற்கெல்லாம் தாங்கள்தான் பொறுப்பு என்பதை முதலில் உணர வேண்டும். 'அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி' என்ற வாக்குக்கு ஏற்ப, ஒரிஸ்ஸா அரசாட்சியின் பயங்கரமான ஊழல் போக்குதான் அந்த ராஜ்யத்தில் பல விதங்களில் பல உருவங்கள் எடுத்திருக்கிறது எனலாம்.

ஒரிஸ்ஸாவில் மாணவர்களின் ஊழலை எவ்வளவுக்குப்பெரிதுபடுத்துகிறார்களோ அவ்வளவுக்கு நிர்வாக ஊழலை மறைப்பதில் அரசாங்கமும், ஆளும் கட்சியும் கவனமாயுள்ளன. இந்நிலையில்தான் ஒரிஸ்ஸா ராஜ்ய சுதந்திரக் கட்சித் தலைவர் ஸ்ரீ ஆர். என். ஸிங் அவர்கள் எஸ். எஸ். பி. தலைவர் ஸ்ரீ பிரஸன்ன குமார் தாஸ் அவர்களின் ஒத்துழைப்பைப் பெற்று, இருவரும் கூட்டாக, ஒரிஸ்ஸா மந்திரி சபையைப் பதவியிலிருந்து இறக்க வேண்டுமென்று மத்ய சர்க்காருக்குக் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். மந்திரிகளைப் பற்றிய ஊழல்களைக் குறித்து விசாரிக்கக் கமிஷன் நியமிக்க வேண்டும் என்றும் கோரியுள்ளனர். காங்கிரஸ் மேலிடம் தவியாய்த் தவிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஊழல் விசாரணை என்று ஏற்பட்டால், காங்கிரஸ் மாளிகையின் ஒரு பிரதான ஸ்தம்பமாகிய விஜய பட்நாயகரின் கதி என்னவாகுமோ?

## வேஷம் கலைகிறது!

இலங்கை வாழ் இந்தியரிடம் தமக்குள்ள நல்லெண்ணம் காரணமாகவே பாரத சர்க்காருடன் ஒப்பந்தம் செய்து கொண்டதாக ஸ்ரீமதி சிரிமாவோ அம்மையார் இந்தியாவில் போட்ட வேஷம் இலங்கைக்கு அவர் சென்றவுடன் கலைந்து, சுய ரூபம் வெளியாகியிருக்கிறது! 'இலங்கையில் பிரஜா உரிமையைப் பெறவிருக்கும் இந்திய வமிசாவளியினர் மற்ற வாக்காளர்களுடன் இலங்கைத் தேர்தல்களில் வோட்டுப் போடும் உரிமை பெற மாட்டார்கள் தனிப்பட்டியலில் தாக்கலாவார்கள்' என்று அம்மையார் ஸெனேட்டில் கூறியதாக 'ஸ்டேட்ஸ்மன்' நிருபர் எழுதியிருக்கிறார். இந்த ஏற்பாடு சிங்களவர்கள் நலனைப் பாதுகாக்கும் என்றும் சிரிமாவோ கூறி, 'இந்திய சமூகத்தை அதிர்ச்சியுறச் செய்தார்' என்கிறார் அந்த நிருபர். இலங்கைப் பிரதமர் ஒளிவு மறைவு இல்லாமல், அப்பட்டமாகவே நடந்து கொண்டு விட்டார்! இலங்கை

யில் ஒரு ஹரிஜன வகுப்பைச் சிருஷ்டிக்கும் புண்ணியத்தைக் கட்டிக் கொண்டிருக்கிறார்! பிரஜா உரிமையின் உயிர் மூச்சாகிய சம உரிமை இல்லாதபோது 'பிரஜா உரிமை' பொருளற்றதாகும்.

### விசாரணைக் குழு விஷயம்

ஊழல் விசாரணைக் குழுவால் ஏற்படும் நன்மை குறிப்பிட வேண்டியது. அதனால் பொது மக்களின் வரிப் பணத்துக்கு ஏற்படும் செலவும் குறிப்பிட வேண்டியதே. கெய்ரோன் விசாரணைக்காக (நீதிபதி தாஸ் அவர்கள் எவ்வித ஊதியமும் பெறாமலே) இரண்டு லட்ச ரூபாய் செலவாயிற்றாம்! ஊழல் அரசாங்கத்தின் இரட்டைச் செலவை பார்த்தீர்களா? வியாதியால் ஏற்படும் கஷ்டத்தை அதற்காகச் செய்யப்படும் மருந்து இரட்டிப்பாக்குகிறது!

# “நான்கு அவுன்ஸ் அரிசி”

நவீன பாணி ரேஷன் முறையிலுள்ள குறைகளை எடுத்துக் காட்டிச் சில பரிகாரங்களையும் கூறி, இம்மாதம் பதின்மூன்றும் தேதி 'தினமணி'யில் வெளியான தலையங்கத்தின் சில பகுதிகளை இங்கு பிரசுரிக்கிறோம்:

ஒரு வாரத்துக்கு ஒரு நபருக்கு ஒரு லிட்டர் அரிசிதான் கிடைக்கும் என்பது பொதுமக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. ஒரு லிட்டர் என்பது பட்டணம் படி அரைப் படி இருக்கும். அதில் ஏழில் ஒரு பங்கு அரிசிதான் ஒவ்வொருவருக்கும் ஒரு நாளைக்கு உண்டு. அதாவது ஒரு நாளைக்கு அரையே அரைக்கால் ஆழாக்குக்கும் குறைவாகத்தான் அரிசி கிடைக்கும். இது 4 அவுன்ஸ் இருக்கலாம். (நபருக்கு நாளொன்றுக்குக்) தேவைப்படுவது 16 அவுன்ஸ் என்று யூனியன் உணவு மந்திரியே ஒப்புக் கொண்டிருக்கிறார். அதில் கால்வாசிதான் கிடைக்கிறது. எனவே கால் வயிற்றை நிரப்பிக்கொள்ள அரசாங்கம் வழி செய்கிறது என்பதுதான் இதன் பொருள். வயிறாரச் சாப்பிடும் பழக்கம் உள்ளவர்களுக்கு 4 அவுன்ஸ், ஒரு வேளைக்கு அரைச் சாப்பாட்டுக்குக்கூடப் போதாது. ஆகையால்தான் இந்தச் சாங்கியமற்ற ரேஷன் கார்டை, ''பட்டினிச் சீட்டு'' என்று பொதுமக்கள் அழைக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

அரிசியைப் போல் சம அளவில் கோதுமை தரப்படுகிறதே, அதையும் சேர்த்தால் எட்டு அவுன்ஸ் ஆகிறதே என்று அரசாங்கமும் அதன் சார்பினரும் கேட்கலாம். இங்கு தரப்படுவது சம்பா கோதுமை அல்ல. அதுவாக இருந்தால் உடைத்துச் சோறாக்கிக் கொள்ளலாம். இதை மாவாக்கிச் சப்பாத்தி அல்லது பூரி செய்து சாப்பிட வேண்டும். அல்லது கஞ்சி காய்ச்சிக் குடிக்க வேண்டும். வேறு வழியில்லை. இது பழக்கப்படாத உணவு என்பது ஒருபுறமிருக்க இதை ஜரித்துக் கொள்வதற்கு நெய்யோ, தாவரக் கொழுப்பு வகையோ கணிசமாகத் தேவை. நல்ல நெய் கிடைப்பதில்லை. தாவரக் கொழுப்பாகிய வனஸ்பதி வகைகளின் விலை ஏழைகளுக்குக் கட்டி வராது. ஆனால் அது இல்லாமல் சாப்பிட்டால் உஷ்ணம் அதிகமாகிக் கடுப்பு வந்து விடும். எனவே ஒரு சிலர் தவிர பெரும்பாலோர் கோதுமையை வாங்கி உபயோகிக்க முடியாதவர்களாகத்தான் இருப்பார்கள் என்பதை மறக்கலாகாது.

சட்ட பூர்வமான ரேஷனாக இருந்தால் அரசாங்கம் இதற்கென அங்கீகரித்த கடைகளைத் தவிர வெளியில் வாங்கக் கூடாது என்பது விதி. சாங்கியமற்ற ரேஷனில் எவ்வளவு வேண்டுமானாலும் ''வெளி மார்க்கெட்டில்'' வாங்கிக் கொள்ளலாமே என்று வாதிடக் கூடும். இது வெட்டிப் பேச்சு. வெளிப்படையாகத் தானியங்களை விற்கும் ''வெளி மார்க்கெட்'' இன்று கிடையாது.

சரக்குகளை வைத்திருக்கும் வியாபாரிகள் அதைத் தாராளமாக விற்கலாம், ஆனால் கண்ட்ரோல் விலைக்குத்தான் விற்க வேண்டும் என்று முதலமைச்சர் கூறுகிறார். அந்த விலை கட்டுபடியாகாது என்ற காரணத்தால்தானே மாமூலான வர்த்தகர்கள் அரிசி வியாபாரத்தில் ஈடுபடாமல் இருந்துவருகிறார்கள்? எனவே ''வெளி மார்க்கெட்'' விற்பனை விலை ''ரேஷன் கடை'' விற்பனை விலையாகத்தான் இருக்க வேண்டும் என்று கூறுவது பொருளற்றது. அப்படி விற்க முடிந்தால் நல்லதுதான். ஆனால் அது சாத்தியமல்ல என்ற நிலவரத்தில் வழக்கம் போல வியாபாரிகள் தமது கடைகளை நடத்துவதற்கான மாற்று வழி வகைகளைக் கண்டு அமுல் நடத்த வேண்டிய பொறுப்பு, அரசாங்கத்துக்கு உண்டு.

பம்பாய் நகரில் நியாய விலையில் கார்டுக்கு ஒரு அளவு தருகிறார்கள். சற்று அதிக விலையில் தாராளமாக வெளி மார்க்கெட்டில் எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கிறது. அம்மாதிரி நடக்க இங்கேயும் வழி செய்ய வேண்டும்.

அரசாங்கமும் வர்த்தகத் துறையினரும் நிர்ப்பந்த மின்றி, இணக்கமாக ஒத்துழைத்தாக வேண்டும். மாமூலான வர்த்தகத் துறையை விலக்கி, உணவுக் கொள்முதல்—விநியோகப் பிரச்னையைத் தீர்க்கலாம் என்று நினைப்பது மடமை. எனவே அவர்களைத் தாமதமின்றி அழைத்துப் பேசி ஒரு ஒழுங்கு முறையை வகுப்பது அவசியம்.

நிலமுடையவர்கள் தமக்கு வேண்டியதைச் சொந்த ஊரிலிருந்து வரவழைத்துக் கொள்வதற்குரிய உரிமை அடிப்படையானது. அதற்கு எந்த விதமான விலங்கும் இருக்க முடியாது. இதைத் தெளிவுபடுத்திவிட வேண்டும். இப்பொழுது வருவது சட்ட பூர்வமான ரேஷன் அல்ல. எனவே இந்த நான்கு அவுன்ஸ் வாங்குபவர்கள் சொந்த அரிசியை வரவழைத்துக் கொள்ளலாகாது என்று தடுக்க முற்படுவது செல்லாது.



உயரிய பண்போடு
உபயோகிப்பதற்கும்
உதவுவதற்கும்
உகந்தது
பனாமா
Panama
Specially blended for a
cool and pleasant smoke
from selected Virginia
Tobacco leaves.
20
CIGARETTES
பனாமா
இழுக்க
இழுக்க
இன்பம்
இறுதிவரை
பிரத்தியேகத் தயாரிப்பாளர்கள் :
கோல்டன் டுபாக்கோ கம்பெனி பிரைவேட் லிட்.,
பம்பாய்.56
பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப்பெரியது


















1. கோகலே ஹாலில் சட
தில் நடைபெற்ற ஓய். எம்.
ஏ.வின் பொன் விழாவில் கல
கொண்ண ராஜாஜியும் உப ர
டிரபதியும் தமிழக கவர்ன
வருகிறார்கள். 2. கோடம்
கம் நெடுஞ்சாலையில் அ
துள்ள ஸ்ரீ கப விநாயகர் ஆ
விழாவில் ஸ்ரீ கிருபானந்த
வாரும் சென்னை சபாநாயக
டாக்டர் ஸ்ரீஹரியும் கல
கொண்டு சிறப்பித்தனர்.
கம்பராமாயணத்தை சம்ஸ்கி
மொழியில் ஆக்கித் தந்து
ஸ்ரீராம தேசிகனுக்கு ராஜ
பொன்னுடை போர்த்தி
4. பம்பாய் சவுத் இந்தி
வெல்பேர் சொஸைட்டியின்
விழாவை கவர்னர் மங்கள்தா
பக்வாஸா தொடங்கிவைக்கிறு
அன்று 'பத்மினி'யின் கன்ன
நாட்டிய நாடகம் நடைபெ
றது. 5. சொஸைட்டி பள்
கூடக் குழந்தைகள் நிகழ்ச்சி நட
பெறுகிறது. 6. கமலா கு
வினரின் நடன நிகழ்ச்சியும் நட
பெற்றது. 7. ஸ்டான்லி மெ
கல் கல்லூரி விழாவில் ராஷ்
பதி. 8. அமெரிக்காவில் ஏ
வார சுற்றுப் பயணம் செய்
சென்னை திரும்பிய சென்
மாநிலக் கல்வித் துறை இயக்
ளருக்கு வாலாஜாபாத் மாசில
மணி முதலியாரின் வரவேற்பு.








# நிச்சயமாகத் தெரியுமா?

ஆம், கவர்ச்சி மிக்கவள்தான். அழகான ஆடை அணிந்திருக்கிறள்; படிப்பிலும் சுறுசுறுப்பானவள்தான். ஆனால் எளிதில் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவள்தானு என்பது நிச்சயமாகத் தெரியுமா?

உடலில் துர்நாற்றம் வீசும் கிருமிகளை உள்ளுக்கு தவிர்க்க முடியாது. ஆனால் வழக்கமாக சிந்தால் உபயோகித்து அவைகளை அழித்து விடலாம். இந்தியாவில் அற்புதக் கிருமிநாசினி ஜி-11* கொண்ட ஒரே சோப் இதுதான். லட்சக்கணக்கான மக்கள் உபயோகித்து, பரிசீலனை செய்யப்பட்டது. உன்னுடைய பிரபல்யம் பெரிதும் அதைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

மகிழ்ச்சியூட்டும், நறுமணம் பொருந்திய சிந்தால் சருமத்தைக் களைப்படுத்தும் கிருமிகளைக் கூட அழித்து விடும். அதனால் மேனி மாசற்று விளங்கும்.



**நிச்சயமான பாதுகாப்பிற்கு**
குழந்தையை சிந்தால் சோப் கொண்டு நீராட்டி, துர்நாற்றம் போக்கும் இனிய மணம் கமழும், இதனால் ஜி-11 அடங்கிய சிந்தால் டால்கம் பவுடரைத் தூவித் தடவுங்கள்

* எல். கிவாடன் அண்டு கம்பெனியின் ட்ரேட் மார்க்

* விவரமான "ஜி-11 என்பது என்ன?" என்ற இலவச புத்தகத்திற்கு கோத்ரெஜ், பம்பாய்-12", என்ற விலாசத்துக்கு எழுதுங்கள்.

வியர்வை நாற்றத்தைப் போக்கி எழிலுடன் விளங்கச் செய்யும் சோப்




Godrej கோத்ரெஜ் சோப்புகளில் முதன்மையான பெயர்

CT. 10A. TAM.

எங்கள் சிந்தால் சோப்பு வாங்குவோர்களுக்கு ஒரு விசேஷ சலுகை! சோப்பின் உறையில் அடங்கியுள்ள சலுகை கூப்பன் உங்களுக்கு ஒவ்வொரு சிந்தால் டால்கம் பவுடர் டின்னின் விலையில் 30 பைசா சலுகை அளிக்கும்.

2-22-11



# கந்தன் கருணை

திருமுருக கிருபானந்தவாரியார்

## 3. சிவத்துக்காகத் தவம்

தட்சனும் அவன் மனைவியும் நதியில் கிடைத்த குழந்தையைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தார்கள். தாட்சாயணி என்று குழந்தைக்குப் பெயரிட்டார்கள். தாட்சாயணிக்கு ஐந்து வயதாகியது. அந்த வயதிலேயே, ''சிவபெருமானை நோக்கித் தவம் செய்ய வேண்டும்'' என்று தாட்சாயணி தந்தையிடம் கூறினாள். தவம் செய்வதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தான் தட்சன். தாட்சாயணி சிவபெருமானை நோக்கித் தவம் செய்து கொண்டிருந்தாள். அந்த நேரத்தில் தான் தட்சன் தனது மருமகன் சந்திரனுக்குச் சிவபெருமான் அனுக்கிரகம் புரிந்தார் என்பதை அறிந்தான். ''என் மருமகனுக்கு நான் கொடுத்த சாபத்தைப் பரமேசுவரன் எப்படி நீக்கலாம்? அவன் பித்தன்; பேயன்'' என்று கோபித்துச் சிவபெருமானைப் பகைத்துக்கொள்ளவும் தலைப்பட்டான். ''தட்சமாபுரத்தில் யாரும் சிவநாமம் சொல்லக் கூடாது. சிவன் கோயிலுக்கு எவரும் செல்லக் கூடாது'' என்றெல்லாம் கண்டிப்பான உத்தரவிட்டான்.

தந்தை இங்கே இப்படி சிவ அபராதம் செய்து கொண்டிருக்கையில் அங்கே மகள் சிவனிடம் அன்பால் உருகிக் கொண்டிருந்தாள். தவத் தீயில் வெந்து கொண்டிருந்தாள். தவம் செய்து கொண்டிருந்த தாட்சாயணிக்குப் பரமேசுவரர் காட்சியளித்தார். எம்பிராட்டி சிவபெருமானை வணங்கினார். ''தாட்சாயணி! இனி த செய்ய வேண்டாம். உன்னை மண கொள்வேன்'' என்று ஐயன் பரிவொ கக் கூறினார்.

தட்சனுக்கு இவ்விஷயம் தெரிந்த அவன் பெரிதும் ஆத்திரம் கொ டான். சிவபெருமானை மேலும் நிந் கத் தொடங்கினான்.

சிவநிந்தையில் ஈடுபட்டிருந்த தட னிடம் முனிவர்கள் சிலர் சென் ''கருணைக் கடலான சிவபெருமானை இக்கக் கூடாது. சந்திரன் போய் அ யம் என்று காலில் விழுந்தான். மேசுவரன் அவனுக்கு அனுக்கிர செய்திருக்கிறார்; இது சந்திரன்பா எழுந்த கருணையால் செய்ததேயன் உன்னை அவமரியாதை செய்வதற்கா அல்ல'' என்று சொன்னார்கள். வே சில முனிவர்கள் ''என்ன இருந் லும் நீ கொடுத்த சாபத்துக்கும் மதி புத் தந்து, எம்பெருமான் சந்திரனை தேய்வதும், வளர்வதுமாக வைத்திரு கிறார் அல்லவா? ஆகவே, அவரை பகைத்துக் கொள்ளாதே'' என்று கூ னார்கள். முனிவர்களின் நல்லுரைகளை கேட்ட தட்சனுக்கு அன்றிலிருந் சிவபெருமான் மீது விருப்பும் இல்லை வெறுப்பும் இல்லை; வணங்குவது இல்லை; இணங்குவதும் இல்லை.

ஒருநாள் சிவபெருமான் ரிஷ வாகனத்தில் வந்து தாட்சாயணியை அழைத்துச் சென்றுவிட்டார். உடை

மையை உடையவரே வந்து எடுத்துக்
ன்றால் அதை யார் எப்படி ஆட்சே
கமுடியும்? சிவம் சக்தியைக் கொண்
ல் அதில் தலையிட யாருக்கு என்ன
மை? இதை உணராத தட்சன்,
என்னைக்கண்டு உலகமெல்லாம் வணங்
றது. இந்தப் பித்தன் என்னிடம்
ல்லாமல் தாட்சாயணியை எப்படி
ழைத்துச் செல்லலாம்?'' என்று
பருண்டார்ன். அப்போது பிரம
வர் யாகம் செய்து கொண்டிருந்
ர். தட்சனின் சீற்றத்தைக் கண்ட
வர் யாகத்தை நிறுத்தி விட்டார்.
ருக்கடைந்த தட்சன் யாகத்தி
ள்ள தியாகத்தைப் புரிந்து கொள்ளா
் தன் பெருமையைப் புலப்படுத்து
தற்காகத் தானே யாகம் செய்ய
ற்பட்டான்.

யாகத்தில் கலந்து கொள்ள எல்லோ
க்கும் அழைப்பு அனுப்பினான் தட்சன்.
பெருமானுக்கு மட்டும் அழைப்பு
னுப்பவில்லை. தட்சனுக்குப் பயந்த
ல்லா தேவர்களும் யாகத்துக்கு வந்தார்கள். தட்சன் தானே தலைவனாக இருந்து யாகத்தை நடத்தினான்.

"சுவாமி! என் தந்தை யாகம் செய்கிறார். நான் போய் வரட்டுமா?'' என்று தாட்சாயணி சிவபெருமானிடம் கேட்டாள்.


பெண்களின் பிறந்த வீட்டுப் பாசம் எல்லையற்றது.

''அழைப்பு அனுப்பவில்லையே; எப்படிப் போவது?'' என்று வினவினார் சிவபெருமான்.

''பிறந்த வீட்டுக்குப் போக அழைப்பு வேண்டுமா?'' என்று தாட்சாயணி கேட்டாள்.

அதன் நியாயத்தை மதித்தார் மதிசேகரன். எனினும் தாம் செல்வதற்கு மனம் கொள்ள வில்லை. ''உன் விருப்பப்படியே நீமட்டும் போய் வா'' என்று அனுப்பி வைத்தார் எம்பெருமா .

தாட்சாயணி தட்சனுடைய யாகத்துக்கு வந்தார். தட்சன் மனம் சற்றும் மாறியிருக்கவில்லை. தவமிருந்தும் பெறவொண்ணாத் தேவி, தன்னைத் தேடி வந்திருப்பதை உணராது அவர் மீது நாகம் போல் சீறினான். எம்பிராட்டிக்கு இதைவிட அதிகத் துன்பமும் சினமும் அளித்தது_ அங்கு கண்ட இன்



ஞெரு காட்சி. தம் பதியாகிய பசுபதி தவிர மற்ற அவ்வளவு தேவர்களும் யக்ஞத்தில் பங்கு கொண்டிருப்பதை அம்பிகை கண்டார். தமக்குத் தந்தை இழைத்த அவமானத்தை விடத் தமது நாயகனுக்கு இழைத்த அவமானத்தைப் பெரிதாக எண்ணி அன்னை வெகுண்டெழுந்தார். "உன் யாகம் அழிந்து, இந்த இடத்தில் பேய்கள் நடமாடக் கடவது" என்று சாபம் கொடுத்து எம்பெருமானிடம் சென்ருர்.

"சுவாமி! தட்சனுக்குத் தண்டனை கொடுக்க வேண்டும்" என்று இறைவனைக் கேட்டுக் கொண்டார். சிவபெருமானின் இதயத்திலிருந்து வீரபத்திரரும், அம்பிகையின் சீற்றத்திலிருந்து பத்ரகாளியும் தோன்றித் தட்சனுடன் போருக்குப் புறப்பட்டனர். வீரபத்திரருக்கும் தட்சனுக்கும் போர் நிகழ்ந்தது. தட்சன் தலையை ஞான வாளால் வெட்டினுர் வீரபத்திரர்.

தட்சன் தலையை அக்கினி உண்டு விட்டது. தட்சனின் மனைவி வீரபத்திர சுவாமியிடம் மாங்கல்ய பிட்சை கேட்டாள். யக்ஞத்தில் அறுபட்டுக் கிடந்த ஆட்டுத் தலையைத் தட்சனின் உடலில் அமைத்து ஸ்வாமி அருள் செய்தார்.

தட்சன் மனம் திருந்தியது. கைலாய மலைச்சாரல் சென்று தவம் செய்யத் தொடங்கினுன்.

சிவபெருமான் தம்மை படுத்த அடியார்களின் பாசத்தை நீக்கித் திருவருள் புரிவது போல் கைலாய மலை நல்லொளி வீசிக் கொண்டிருந்தது. முக்கண்ணும், நாற் புயமும், பொன் மேனியும் உடைய நந்தியெம்பெருமான் பொற் பிரம்பைக் கையிலேந்திக் காவல் புரிந்து கொண்டிருந்தார். ஊழிக் காலத்தும் அழியாத வெள்ளியங்கிரியின் மத்தியில் நவமணிகளின் நல்லொளி வீசிக் கொண்டு பொன்னெடுங் கோயில் ஒன்று பொலிவுற்றிருந்தது. அத்திருக் கோயிலின் நடுவில் வனப்புக்களுக்கு உறைவிடமாக விளங்கும் மணி மண்டபத்தில் நவமணிகளாலான அரியணை அமைந்திருந்தது. அதன் மேல் தெய்வமணியாகிய சிவபெருமான் அம்பிகையுடன் வீற்றிருந்தார். தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள் முதலியோர் எம்பிரானை ஸ்தோத்திரம் செய்து கொண்டிருந்தனர். தும்புரு, நாரதர், கந்தருவர் முதலியோர் இனிய கானம் இசைத்துக் கொண்டிருந்தனர்.

சிவபெருமானுடன் வீற்றிருந்த அம்பிகை மனத்தில் ஒன்றை நினைத்துத்

ஞனுக்குற்றுப் பரமேசுவரனை வண எழுந்தார்.

"தாட்சாயணி! நீ காலையிலு மாலையிலும் தான் என்னை வணங் வாய். என்றைக்கும் இல்லாதட இன்று இந்த நேரத்தில் வணங்குவ ஏன்?" என்று எம்பெருமான் கேட்டா

"பெருமானே! தேவரீரை நிந்தி வன் தட்சன். சிவநிந்தை புரிந்த அவ அதற்குரிய தண்டனையை அடைந்துவி டான். ஆயினும் இந்த உடம்பு அவ வளர்த்த உடம்பு. தாட்சாயணி என் பெயர் அவன் பெயரை வைத்த பிறந்த பெயர். தேவரீரை நிந்தித் மாபாதகன் வளர்த்த இந்த உட யும், அவனுடைய மகள் என்று பொருள் படும் இந்தப் பெயரைத் தரிக்க எனக்கு விருப்பமில்லை. இ வுடலை விட்டு விட எண்ணுகிறேன் தங்கள் உத்தரவின்றி இதைச் செய்ய கூடாது. தாங்கள் எனக்குத் திருவரு புரிய வேண்டும்" என்று அம்பிகை வேண்டினுர்.

தேவியின் பதிபக்தியை எண்ண வியந்த எம்பெருமான் மோனம யிருந்தார்.

தாட்சாயணி மீண்டும் தம் கருத்தை வலியுறுத்தினுர்.


சிவபெருமான் புன்சிரிப்புச் சிரி தார். "தேவி! இதை நீ உனக்காகவ சொல்லுகிருய்? உன் குலம் தழைப்பத காகவல்லவா சொல்கிருய்? நீ நினை தது நல்லதே. அவ்வண்ணமே செய்க என்று அருள் புரிந்தார்.

"தேவி, இமயமலையரசனுகிய இ வான் உன்னைக் குழந்தையாகப் பெ நெடுங்காலமாகத் தவம் செய்கிருன் நீ அவனுக்கு அருள் செய். அவனுக் மகளாகப் பிறந்து, ஐந்தாவது ஆண்டி நம்மை நோக்கித் தவம் செய். உன்னை திருமணம் செய்து, திருவருள் பு கிறேம்" என்ருர் சிவபெருமான்.

எம்பெருமான் அருள் புரிந்தவுடன் தாட்சாயணியின் உடல் காற்றில் சூட கரைவது போல் கரைந்து விட்டது நம்மைப் போல் ஸ்தூல சரீரம் எ பிராட்டிக்கு இல்லை. அவள் ஞானப் பாள். எலும்பு இல்லை, தோல் இல்லை ரத்தம் இல்லை; மேனி அவ்வளவுப் ஞானம், ஞானம், ஞானமேதான்.

எழில் மிக்க இமயமலை விண் ணளாவி நின்றது. அம்மலையின் மேல் தேவாமிருதம் போன்று நீருடைய தடாகம் ஒன்று உண்டு. அதற்குப் பத்மை என்று பெயர். அத்தடாகத்தரு கில்தான், அம்பிகை தனக்கு மகளாய்த்

''பத்து வருடங்களுக்கு முன்பு ... நினைவிருக்கிறதா? உங்கள் திருமணத்தன்று என்னையும் உங்கள் வாழ்க்கைத் துணையாகத் தேர்ந்தெடுத்ததை?''



# ஹெர்குலிஸ்

**வெறும் சைக்கிள் மட்டுமன்று; வாழ்நாள் முழுதும் உழைக்கும் ஓர் உறுதுணை**

திருமண நாளின் இந்த பத்தாவது நினைவு நாள் ... ஹெர்குலிஸுக்கும் சரி, அதன் சொந்தக்காரருக்கும் சரி ... பெருமிதமூட்டும் நன்னாள்.

நீங்கள் ஒரு ஹெர்குலிஸ் சைக்கிள் வாங்கும்போது உங்கள் வாழ்க்கையுடன் அது ஒன்றிவிடுகிறது. ஆண்டுகள் செல்லச் செல்ல உங்கள் வாழ்க்கை மாறும் ... உத்தியோக உயர்வுகள் கிடைக்கும் ... உங்கள் குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாவார்கள் ... மணம் புரிந்து வேறிடங்களில் புது வாழ்க்கை தொடங்குவார்கள். ஆனால் உங்கள் ஹெர்குலிஸ் எப்போதும் உங்களுடனேயே இருக்கும் — எப்போதும் நன்கு பணி புரிந்தபடியே இருக்கும்.

டி. ஐ. சைக்கிள்ஸ் ஆப் இந்தியா
அம்பத்தூர், மதராஸ் 53

HWT-TIC-H-296A

# பாரெக்ஸ் புகட்டும் பருவம்

உங்கள் கைக்குழந்தைக்கு ஏறக்குறைய நாலு மாதம் என்றால், பால் மட்டுமின்றி வேறுவகை உணவும் கொடுக்கத் தேவைப்படும். பாரெக்ஸ் புகட்டத் தொடங்குங்கள்: ஊட்டமளிக்கும் நன்செய் தானிய உணவு அது. வைட்டமின் D, கால்சியம் முதலியவை செறிந்த தயார்ப் பக்குவ உணவாகிய பாரெக்ஸ், பற்களையும் எலும்புகளையும் வலுவாக்கி, உறுதியான உடல் வளர்ச்சிக்கு உறுதி தருகிறது. தாயுள்ளம் நம்பும் பாரெக்ஸ், இளம் குழந்தைகள் பாலுக்கு அடுத்தபடி முதன்முதலாக உண்ண உன்னதமானது. வளர்ந்த குழந்தைகளுக்கும் உகந்ததே. இன்றே வாங்குங்கள் பாரெக்ஸ்.








பாரெக்ஸ்-ஒரு கிளாக்ஸோ தயாரிப்பு

**இலவசம்: 'தி பாரெக்ஸ்கைடு' (ஆங்கிலம்):**
குழந்தைகளை ஊட்டி வளர்க்கும் முறைபற்றிய இந் நூலை வேண்டுவோர், தபால் செலவுக்காக 15 பைசா தபால் வில்லைகளை அனுப்பி எழுதுக: பாரெக்ஸ், தபால் பெட்டி 202, பம்பாய்-1

FA.4-78 TM

ஈன்ற வேண்டும்
ாறு பர்வதராஜன்
ம் செய்து கொண்
ந்தான்.
அன்று சந்தியாவந்
ம் செய்யத் தடா
தில் இறங்கிய
வான் வானத்தில்
ந்த சூரியனைப்
ால் அத்தடாகத்
் ஆயிரத்தெட்டு
ம் தாமரை பூத்
நப்பதைக் கண்
ான். சந்தி உபாசனை
போது சூரியனில்
ள எந்த பிரம்ம
தியை வழிபடுகிறார்
ளா அந்தப் பரா
தி கண்ணைக் கவரும்
ட்டமுருடைய குழந்
தயாக மரகத மேனி
டன் கமலத்தில் இரு
வதாரம் செய்திருப்
தையும் கண்டான்.



"கடைசி சீனில் உங்களை 'லாரி மோதி மரணம்! மாடு முட்டி மரணம்! இடி விழுந்து மரணம்! கத்திக் குத்து பட்டு மரணம்!'— இவற்றில் எப்படி முடிக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்!"

"உங்கள் முடிவைக் கேட்டு மரணம் என்று முடியுங்கள்!"

முதலான பொன்னு பரணங்களைக் குழந்தைக்கு அணிவித்துப் பொன்னால் செய்யப் பட்ட தொட்டிலில் இட்டுத் தாலாட்டினுன். (தாலு என்றும் நா என்று பொருள். நாவை அசைத்துப் பாடுவதால்தாலாட்டு என்று வந்தது.)

பருவத ராஜனுக்கு மகளாக வந்ததால் குழந்தைக்குப் பார்வதி என்று பெயரிட்டார்கள்.

குழந்தையை இமவானும், மேனையும் அருமைக்கிட்டுவளர்த்தார்கள் என்று சொல்ல வந்த கவி, 'சகல புவனங்களையும் வளர்த்து வாழ்விக்கும்தேவியைவேறொருவர் வளர்ப்பதாவது? அப்படி வளர்ப்பது போன்ற பாவனையைத் தன் அருளால் இமவானுக்கு அவள் அளித்தாள் என்றே கூற வேண்டும்' என்கிறார்:

'பைத்தோர் குழவியின் படிவத்
'ற்றனள் எத்திறத்துயிரையும் ஈன்ற
தான்மையாள்' என இதை நெகிழ்ந்து
ாடுகிறார் கச்சியப்பர்.

எம்பிராட்டி மரகத மேனியுடன்
ரு அவதாரம் செய்தாரே யன்றிப்
பண் வயிற்றில் பிறக்கவில்லை. உலக
க்களைக் கருவில் சுமக்கும் அன்னையை
ார் கருவில் சுமக்க முடியும்?

தெய்வக் குழந்தையைக் கண்ட
மவான், 'அடியேனை ஆட்கொள்ளும்
பொருட்டு அகிலாண்ட கோடி ஈன்ற
அன்னை குழந்தையாக வந்தனள்'
ன்று ஆனந்தக் கண்ணீர் சொரிந்
தான். "அடியேன் செய்த தவம்
லித்தது" என்று ஆனந்தக் கூத்தாடி
அம்பிகையைக் கையில் எடுத்து உச்சி
மோந்தான். சென்னி மேல் வைத்துக்
களியாட்டம் ஆடினுன்.

குழந்தையை எடுத்துக் கொண்டு தன் பொன் மாளிகை சென்றடைந்த இமவான், "இது எம்பெருமான் கொடுத்த பிரசாதம்" என்று தனது பத்தினியாகிய மேனையின் கரத்திலே குழந்தையைக் கொடுத்தான். மேனை அத் தெய்வக் குழந்தையைத் தொழுது வாங்கினுள். மார்போடு அணைத்தாள். அன்பு சுரந்தாற்போல் பாலும் சுரந்தது.

பெண் குழந்தை யென்றால் தாய் மார்களுக்கு சந்தோஷம். மேனை மிகவும் மகிழ்ச்சி கொண்டாள். பரிபுரம், தண்டை, சங்கு வளை, ரத்தினச் சுட்டி, மதாணி, பொற்றோடு, அங்கதம்

மன்னுயிர் புவனமேனை
மற்றுள பொருளுக்கெல்லாம்
அன்னையா யுதவி நாளும்
அவற்றினை வளர்த்து நிற்பாள்
தன்னையும் வளர்ப்பா ருண்டோ
வளர்ந்தது சமுக்கே அந்தக்
கன்னிதன் அருளின் நீர்மை
காட்டினள் போலுமன்றே

குழந்தை வளர்கிறது; விளையாடுகிறது. உலகையெல்லாம் விளையாட்டாகப் பெற்றெடுக்கும் ஜகன்மாதா எப்படி விளையாடுகிறாராம்? மூன்று ரத்தினங்களை அடுப்பாக ஆக்கி முத்துச் சிப்பியைப் பாத்திரமாகச் செய்து, முத்துக்களை அரிசியாகப் பெய்து, நவ ரத்தினங்களையும் வைடூரியங்களையும் காய்கறிகளாக்கி, பொற்பொம்மைகளை உண்ண வைத்து அற்புதம் அற்புதமாக விளையாடுகிறாராம்.

பார்வதி தேவிக்கு ஐந்து வயதாகி விட்டது. ஆலமுண்ட அண்ணலின் ஆணையை நினைந்த குழந்தை, இமவானை நோக்கி, "அப்பா! மணம் புரிந்து கொள்ளுமாறு வேண்டி மணிகண்டப் பெருமானை நோக்கித் தவம் செய்ய வேண்டும். எனக்குத் தவச் சாலை அமைத்துக் கொடுங்கள்" எனக் கேட்டது.

"மகனே! ஐந்து வயதிலா தவம் செய்யப் போகிறாய்? தவம் என்றால் சாமானியமானதல்ல. பட்டினி கிடந்து உடலை வருத்தித் திட ஞானத்துடன் தவம் செய்ய வேண்டும். ஐந்து வயதில் இதனைச் செய்ய யாராலும் முடியாது. ஆகவே தவம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை மறந்து விடு" என்று இமவான் கூறினான். மேலும் பார்வதியிடம் "தவம் செய்வதற்கு ஏற்ற வயது இதுவல்ல" என்று கூறினான். 'தனியாகச் சென்று தவமிருக்கும் பருவம் இது அல்ல. பெற்றோரின் காப்பில் வளர வேண்டிய குழந்தையே அவள்' என இருவரும் கருதினர்.

அவதார ரகசியம் பெற்றோருக்கும் மற்றோருக்கும் மறந்து, தெய்வ மதலையைச் சாமானிய மானுடப்பிறவியாகவே பாவிப்பதை எல்லாப் புராணங்களிலும் காண்கிறோம். அவ்வப்போது மட்டிலுமே தன் தெய்வத் தன்மையை வெளிப்படுத்தி, மற்றப் பொழுதில் சாமானியப் பிறவியாகவே வாழ வேண்டும் எனக் கருதிப் பரம்பொருள் இப்படி மாயை செய்யும் போலும்!


"அப்பா! இந்த உடலையும் உயிரையும் கொடுத்தவர் சிவபெருமான். அந்த ஐயனின் அருள் இன்றிப் பிறர் நம்மைக் காக்க முடியாது. உடலையும் உயிரையும் கொடுத்த எம்பிரானே என்னைக் காப்பாற்றுவார். தடை சொல்லாமல் த செய்வதற்கு விடை தாருங்கள்" எ பார்வதியம்மை வேண்டினார்.

இமாசலத்துக்கு அருகே தவச்சா அமைத்துக் கொடுத்தான் பர் ராஜன். பார்வதிக்குக் காவல கன்னியர் பலர் நியமிக்கப்பட்டனர்.


'சிவ சிவ' என்று மனம் மொழி மெ களால் குழந்தை வழிபாடு செ கொண்டிருந்தது. அம்பாள் செ சிவபூஜையை விடப் புனிதமாக உண்டு? மணியோடு இணைய செய்த தவம் அது; மலரோடு இணை மணம் செய்த தவம் அது.

ஞானிகள் தமக்காக என்று எதுவு செய்ய இயலாது. தமக்கே பே அவர்கள் செய்யும் காரியங்களும் உலக க்ஷேமத்துக்காகத்தான் அ யும். தேவி செய்த தவம் ஐய அடைந்து மணம் புரிந்துகொள்ள வே டும் என்ற சுயநல நோக்கத்தோ முடிவதல்ல. அவர் ஐயனை அடைந் தீர வேண்டும்! அதனால் நம் கா நாயகராம் ஆறுமுகஸ்வாமி அவதரித் யாக வேண்டும்! அசுரரை மாய் அமரர் குறைதீர்த்து அறத்தை நிலைநா டக் குமரன் தோன்றியே ஆக வேண் என்ற சூழ்நிலை தேவி தவம் புரியும் அ தருணத்தில் ஏற்பட்டது. (தொடரு

## ரிடர்ன் டிக்கட்!



# B·I



# S. S. ரஜுலா

**சென்னையிலிருந்து**

**1964 டிசம்பர் 2** | **1964 டிசம்பர் 26**

*சென்னையிலிருந்து பினாங்கு மற்றும் சிங்கப்பூருக்கு பிரயாணம் செய்ய விரும்பும் பிரயாணிகள் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசதாரருக்கு விண்ணப்பிக்கவும்.*

**மெஸர்ஸ் பின்னி & கோ., லிமிடெட்**
7, அரமனைக்காரத் தெரு, சென்னை

*அல்லது கீழ்க்கண்ட கம்பெனியின் அங்கீகாரம் பெற்ற பாஸேஜ் புரோக்கர்களுக்கு விண்ணப்பிக்கவும்*

**C. M. குட்டி**
38, அங்கப்ப நாயக்கன் தெரு
சென்னை - 1

**கோனா டிராவல்ஸ்**
மாஸ்காட் ஹோட்டல்
திருவனந்தபுரம்

**நாகப்பட்டினத்திலிருந்து**

**1964 டிசம்பர் 3** | **1964 டிசம்பர் 27**

நாகப்பட்டினத்திலிருந்து பினாங்கு மற்றும் சிங்கப்பூருக்குப் பிரயாணம் செய்ய விரும்பும் பிரயாணிகள் தங்களது பிரயாண டிக்கட்டுகளை கீழ்க்கண்ட விலாசத்தில் நேரிடையாகப் பெற்றுக் கொள்ளலாம்

**மெஸர்ஸ். மதுரா கம்பெனி பிரைவேட் லிமிடெட்**
முதல் லேன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

பினாங்கு, போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றிச் செல்லவும், சிங்கப்பூரில் கப்பல் மாற்றி ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து துறைமுகங்களுக்கு அனுப்பவும் சரக்குகள் சென்னையிலிருந்தும் நாகப்பட்டினத்திலிருந்தும் ஏற்றுக் கொள்ளப்படும்.

*பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றும் விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதவும் :*

**பின்னி & கம்பெனி லிமிடெட்**
7, அரமனைக்காரத் தெரு, சென்னை - 1

**மதுரா கம்பெனி பிரைவேட் லிட்.**
முதல் லேன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

**ஏஜெண்டுகள் : பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்**



# நட்பு

"விருந்து!

"அருமையான விருந்து!

"கண்ணுக்கு விருந்து. காதுக்கு விருந்து! கருத்துக்கு விருந்து! சுவையான நல் விருந்து!"— அசாத்திய டிங்கி ஜுரம் வந்தவர் போல ஒரு மாப்பிள்ளை பிதற்றினார்.

"ஏன் ஐயா மாப்பிள்ளை! 'விருந்து, விருந்து!' என்று ஒரேயடியாக அடுக்கிக் கொண்டே போகிறீர்களே, என்ன சமாசாரம்? தீபாவளிக்கு வந்துள்ள உமக்கு உமது மனைவி கண்ணுக்கு விருந்தாகக் காட்சியளித்தாளா? காதுக்கு விருந்தளித்துக் கானம் இசைத்தாளா? உம் சக்திக்கு அப்பாற்பட்டதாவது ஒரு பொருளைக் கேட்டுக் கருத்துக்கு விருந்து வைத்தாளா? சுவையான நல் விருந்து என்கிறீர்களே! மருந்துக்குக் கூட விருந்தைப் பற்றிச் சொல்லாமல் அடுக்கிக் கொண்டே போனால்...?" என்றேன்.

"இல்லை, ஐயா! தீபாவளிக்கு வந்த இடத்திலே 'தோன்றி' என்னும் தினத்திப் படத்தைப் பார்க்கும் வாய்ப்புக் கிட்டியது. ராஜஸ்ரீ புரொடக்ஷன்ஸார் தயாரித்த படம். ஈஸ்ட்மெனகலரில் தயாரித்திருக்கிறார்கள். கண்ணுக்குக் குளிர்ச்சியாகக் காட்சிகளைப் படம் பிடித்திருக்கிறார்கள். மருந்துக்குக்கூட எங்கும் விரசம் தட்டவில்லை. காதுக்கு விருந்தளிக்க நல்ல கீதங்கள்! பாடல்கள் மட்டுமென்ன, வசனங்கள் கூடக் கருத்துக்கு விருந்து வைப்பதாக அமைந்துள்ளன."

"அப்படியா?"

"ஆமாம். சமீப காலமாகப் பார்த்து வரும் ஒரே மாதிரியான திரைப் படங்களைப் போல் அல்லாமல், கதையில் ஒரு மாறுதல் இருக்கிறது. இரண்டு இளைஞர்கள். ஒருவன் முடவன், மற்றவன் குருடன். 'பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்று ஒருவன் சொன்னப் பழமொழி கண்டுபிடித்தானே, அது ஒருவனை முடவனாக்க உதவுகிறது. மற்றவனைக் குருடனாக்கிக் காட்டுகிறது. ஒரு பையன் பள்ளிச் சம்பளம் கட்ட முடியாததனால் பள்ளியிலிருந்து பெயரடிக்கப்படுகிறான். அது கேட்டு அவன் நோயாளித் தாய் மாடியிலிருந்து விழுந்து உயிர் துறக்கிறாள். தாயாருக்காக டாக்டரைக் கூப்பிட ஓடினவன் கார் விபத்தில் சிக்கி முடவனாகிறான்.

முடவன் தெருவில் செல்லும் போது இதே போன்று விதி வசப்பட்ட ஒரு குருடன்; இளைஞன். விதி வசத்தால் பிறரோடு ஒட்டிக் கொள்கிறான். இருவருக்கும் இடையே நட்பு முற்றுகிறது. ஒருவரை யொருவர் பிரியாமல் வாழ்வது என்று கங்கணம் கட்டிக் கொண்டு நண்பராகிறார்கள். கதையில் ராமு என்னும் முடவராக வரும் சுனில் குமார் 'பிச்சையெடுப்பது தவறு' என்று கூறுகிறான். ஆனால் கதை கடைசி வரையில் பாடிப் பணம் சேர்க்கும் கதையாக — அதுவும் அந்தப் பணம் அவனுக்கு உதவுவதாக முடிகிறது.

இப்படி ஏன்தான் முடிய வேண்டுமோ என்று கேட்டால், 'நல்ல பாட்டுகளாக நாலு பாட்டுக்கள் கேட்க வேண்டுமே! அவை காதுகளில் கடைசிவரை ஒலித்துக் கொண்டிருக்க வேண்டுமே!' என்று இயக்குநரும் பட முதலாளிகளும் கூறக்கூடும். மெய்தான்; கருத்தமைந்த இரண்டொரு பாடல்கள் போட்டு, அதற்கு இசையையும் நல்லபடியாக அமைத்து அந்தக் குறையை மறக்கச் செய்கிறார்கள்.

படிப்பில் நாட்டம் கொண்ட முடவன் ராமுவுக்குக் குருடன் மோகன் உதவி செய்வதும், அவர்கள் இருவரது மனத்தையும் தாய்மையே உருவான ஒரு சிறுமி நிறைத்து மறைந்ததும், எத்தனையோ இக்கட்டுகளைத் தாண்டி ராமு படித்துத் தேர்வதும், இடையே பிரிந்த நண்பர்கள் கடைசியிலே ஒன்று கூடிக் கதை மங்களமாக முடிவதும் இயல்புதானெனினும், படத்தின் இயக்குநர் கதையைக் கொண்டு போயிருக்கும் முறை கருத்துக்கு இசைவு தருவதாக இருக்கிறது. நடிகர்களில் பெரும்பாலோர் புகழ் பெற்ற நடிகர்கள் அல்ல; புது முகங்கள். புது முகங்களும் இத்தனை சிறப்பாக நடிக்க முடியுமா என்று கேட்கத் தோன்றுகிறது. சிறந்த நடிகர்கள் எனப்படுபவர்களுக்குச் சற்றும் சோடையில்லை என்று பறைசாற்றுவதே போல் ராமு, மோகனாக வரும் சுனில் குமாரும், கதிர் குமாரும் மிக நன்றாக உணர்ந்து நடித்திருக்கிறார்கள்.

ஒரு நர்ஸையும் ஓர் இளைஞனையும் நெருக்கமாகக் காட்டிய இந்தப் படத்தில், காதல் காட்சிகளுக்குக் குறைவிராது என்று எண்ணுபவர்கள் ஏமாந்துதான் போவார்கள். ஆனால் கல்யாணத்தில் கொண்டு போய்ச் சுபமாகப் படத்தை முடித்திருக்கிறார்கள். நெஞ்சை யள்ளும் வசனங்கள், கண்ணைக் கவரும் நடிப்பு, கருத்தைக் கவரும் கற்பனை — எல்லாம் சேர்ந்து இந்தப் படத்தை அரியதொரு விருந்தாகவும் அருமருந்தாகவும் சமைத்துள்ளன. படத் துறையில் ஒரு புதிய திருப்பம் தருகிறது 'நட்பு' என்னும் பொருள் தரும் இந்த தினத்திப் படம்.



# சென்னையில் ஷேக்ஸ்பியர்

ஆங்கில மொழியிலும் இலக்கியத்திலும் பரிசயமுள்ள பெரும்பான்மை மக்களில் நாடக மேதை ஷேக்ஸ்பியர் நாடகங்களில் சிலவற்றையாவது படித்து இன்புறுதவர்கள் மிகச் சிலரே இருப்பார்கள். நாடகங்கள் உள்ளளவும், நாடக மேடைகள் உள்ளளவும், ஆங்கில இலக்கியம் உள்ளளவும் ஷேக்ஸ்பியர் நாடகங்கள் நிலைத்திருப்பவை. அவரைப் பற்றிய வாழ்க்கை விவரங்கள், வரலாறுகள் பற்றி விவாதங்கள் இருந்தாலும் அவருடைய நாடகங்களின் புகழ் சாசுவதமானது. அவர் தீட்டிய குணச்சித்திரங்களும், வடித்துள்ள சொல்லழகுகளும், சிருஷ்டித்த கதாபாத்திரங்களும், அவை பிரதிபலிக்கும் மனவெழுச்சிகளும் அலுப்புச் சலிப்பில்லாமல் ரசித்து இன்புறத்தக்கவை. புத்தகத்தில் படித்தாலும், மேடையில் திறம்பட நடிக்கப் பார்த்தாலும், புதுப் புது அழகுடன் பளிச்சிடும் தன்மை வாய்ந்தவை அவை.

கல்லூரிகளில் படித்துப் பழகியவர்கள் இரண்டு மூன்று நாடகங்களையாவது நடிக்கப் பார்த்திருப்பார்கள்; தாங்களே பங்கு கொண்டும் இருந்திருக்கலாம். "ஹாம்லெட்"டும் "ஒதெல்லோ"வும் "வெனிஸ் நகரத்து வர்த்தகனு"ம் பலருக்குப் பழக்கமான நாடகங்கள். திரைப் படத்தில் பலர் கண்டு மகிழ்ந்தவை 'ரோமியோ ஜூலியட்' 'இளவேனிற் கனவு' சரித்திர நாடகங்கள் ஆகியவை. நாடகமேடையில் பாத்திரங்கள் பேசுவதையும் நடிப்பதையும் பார்க்காதவர்களுக்குக்கூட அப்பாத்திரங்களின் வாசகங்களில் பல தெரிந்திருக்கும். ஆங்கில நாடகங்களை அவ்வப்போது நடத்தி இத்துறையில் உற்சாகம் காட்டி வரும் குழுவினர் சென்னையிலும் இருக்கின்றனர். கம்பர் கழகம், வள்ளுவர் கழகம், தமிழ் இலக்கிய மன்றம் ஆகியவை தமிழகத்தில் இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பது போலவே ஷேக்ஸ்பியர் இலக்கிய ஆராய்ச்சி நடத்தும் குழுவும் சென்னையில் இருக்கிறது.


ஷேக்ஸ்பியர் பிறந்த நானூறாவது ஆண்டு இவ்வருஷம். ஆங்கில மொழிப் பிரசாரத்திலுள்ள எல்லா நாடுகளிலும் இந்த மகா மேதையின் நாடகங்களில் சிலவற்றையாவது அவரது ஞாபகார்த்தமாக இவ்வாண்டில் நடித்து அவருக்கு மக்கள் அஞ்சலி செய்கின்றனர். இவ்வகையில் சென்னை நகர மக்களுக்கு அரிய வாய்ப்புக் காத்திருக்கிறது.

பிரிட்டிஷ் கலாசாரத்தையும், இலக்கிய மேன்மையையும், பண்பையும் நமது
ருக்கு எடுத்துக்காட்டி நல்லுறவை வள
நற்பணியாற்றி வரும் பிரிட்டிஷ் கவுன்சி
ஆதரவில் இங்கிலாந்திலிருந்து நவீன ஷே
பியர் நாடகக் குழு இந்தியாவுக்கு வரவ
கப்பட்டுப் பல நகரங்களில் நாடகங்களை ந
திக் காட்ட ஏற்பாடு செய்யப் பட்டிருக்கி
பம்பாய் மாநகரத்திலும், பெங்களூரிலும்
குழுவினரின் நாடக நிகழ்ச்சிகள் நடை
றன. இப்போது சென்னைக்கு வந்திருக்
றனர். சென்னை மியூஸிக் அகாடெமி மண
பத்தில் நவம்பர் 22 முதல் 26 வரை
ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்களில் மூன்
இக்குழுவினர் நடித்துக் காட்டுவார்கள்.

இக்குழுவில் 33 நடிக, நடிகைகளும், ந
கக் கலை வல்லுநர்களும் இருக்கின்றனர்.
வொருவரும் நாடக மேடையில் பல்லா
காலம் அனுபவமுள்ளவர்கள். ஷேக்ஸ்பி
நாடகங்களை ஊடுருவி ஆராய்ந்து, நயங்க
ளெல்லாம் அநுபவித்து நடிக்கும் ஆற்
வாய்ந்தவர்கள். இக் குழுவின் தலை
டேவிட் வில்லியம் இங்கிலாந்து நா
மேடையில் முன்னணியில் நிற்பவர். மூப்ப
ஆண்டுகளுக்கு முன்பு லார் ஜான் கில்
ஏற்று நடித்து அமரத்வம் ஏற்படுத்திவிட்
அதே "இரண்டாவது ரிச்சர்ட்" பாத்
ரத்தை டேவிட் வில்லியம் அதே திறமையுட
நடித்துக் காட்டிப் பலரது பாராட்டுதல்களை
பெற்றிருக்கிறார்.

போலந்தின் தேசிய நாடக மேடையில் ப
ஆண்டுகள் பிரதான நடிகராக இருந்த ப்ள
டெக் ஷெபாலும் இந்தக் குழுவில் டைரக்
ராக உதவி செய்கிறார்.

லண்டன் மாநகரத்திலுள்ள ரீஜண்
பார்க் திறந்த வெளி அரங்கு புகழ்பெற்றது
பல உயர்ந்த நடிகர்கள் அங்கே தொடர்ந்
நாடகங்கள் நடித்
வந்திருக்கின்றனர்
ஷேக்ஸ்பியர் நாடக
கள் பல அங்கே நடை
பெற்றிருக்கின்றன
யுத்த காலத்தில் கூட
அங்கே நாடகங்க
நடந்தனவாம். பல
நடிகர்கள் அங்கேதான்
புகழ் எய்தினர் என்று
வரலாறுகள் உண்டு
அந்த அரங்கில் நாட
கங்கள் நடத்தும் குழு
வுக்கும் கால நில
நிதி நிலைமைக்கு ஏற்ப
ஏற்றத் தாழ்வுகள் ஏற்
பட்டு நம் நாட்டில்
இருப்பது போலத்தான்
மாறிக் கொண்டே
இருக்கும். ஒரு குழு
ஓய்ந்துவிடும். அதன்
டத்தில் மற்றொன்று
தோன்றும். இவ்வாறு



உலகப் புகழ்கொண்ட ஷேக்ஸ்பியர்



" அடங்காப்பிடாரியை வயப்படுத்துதல் " (Taming of the rew) நாடகத்தில் தூசென்ஷியோவாக நடிக்கும் ஜான் ாவிலும், பியான்காவாக நடிக்கும் அமண்டா சீயல்லாம்.

960-ம் ஆண்டில் தோன்றியதுதான் நவீன ஷேக்ஸ்பியர் நாடகக் குழு.

1960ம் ஆண்டிலிருந்தே இக் குழுவினர் ஜன்ட் பார்க்கு திறந்தவெளி அரங்கில் ல நாடகங்களை நடத்திப் புகழ் பெற்றுள் ளனர். சென்னையில் நடிப்பதற்குத் தேர்ந் தெடுத்துள்ள நாடகங்கள் மூன்று — இரண் டாவது ரிச்சர்ட், சூறாவளி (Tempest), அடங் காப்பிடாரியை வயப்படுத்துதல் ஆகியவை. நன்றும் கலை மிகுந்த நாடகங்கள். இவற்றை இக் குழுவினர் பல தடவை நடத்தி நடத் தப் பூரணத்துவம் எய்தியுள்ளார்கள் என்று சொல்லப் படுகிறது. இம் மூன்று நாடகங் களுக்கான உபகர ணங்களைத் தயாரிக் கப் பெரும் பணம் செலவு செய்யப்பட் டிருக்கிறது. ஒவ் வொரு நாடகத்துக் கும் தனித் தனி உடைகள், ஜோட னைகள். குழுவில் 20 நடிகர்களும் 7 நடி கைகளும் உள்ளனர்.

இவர்களது நாட கங்களைப் பிரிட்டிஷ் ரசிகர்கள் மிக உயர் வாகப் பாராட்டி யுள்ளார்கள் என்று தெரிகிறது. டின்ஸ் டேல் லாண்டன், ஜைவா பாலன்டீன் இவர்கள் இருவரும் முக்கிய பாத்திரங் களை ஏற்று நடித் துள்ள 'அடங்காப் பிடா ரியை வயப்படுத்துதல்" (Taming of the Shrew) நாடகம் முதல் தரமானது என்றும் சம்பாஷணைகள் வேகமும், விறுவிறுப்பும் கொண்டு கலையளிப்பவை என்றும் ஆங்கிலப் பத்தி ரிகைகளெல்லாம் ஏகோபித் துப் பாராட்டி விமரிச னங்கள் வந்துள்ளன. ஆகவே ஆங்கில நாடகங் களில் ருசியுள்ள தென்னக ரசிகர்களுக்கு இந்தச் சந் தர்ப்பம் அபூர்வமான தாகும்.

" டெலிவிஷன் " படை யெடுப்பினால் நாடக மேடை களின் வருங்காலம் பாதிக் கப்படுமோ என்ற பீதி பரவலாக இருந்த இங்கி லாந்தில், உயர்தர நாடகங் களைத் திறம்பட நடித்து மக்களிடையே ருசி ஏற் படுத்தினால் நாடகத்தை மக்கள் விரும்பிப் பார்ப் பார்கள் என்ற உண்மையை உணர்த்திவரும் நாடகக் கம்பெனிகளில் ஷேக்ஸ்பியர் நாடகக் குழுவும் ஒன்று. உலகப் புகழ்பெற்ற மேதை யின் இலக்கியச் சிறப்பு மிக்க உயர் நாடகங் களை முன்னணியில் உள்ள அனுபவசாலிக ளான நாடகக் கலைஞர்கள் கவர்ச்சிகரமான முறையில் நமது ரசிகர்களுக்கு விருந்தாக வழங்குகிறார்கள். ஆங்கிலம் தெரிந்தவர் களுக்கு விசேஷ வாய்ப்பு. நாடகக் கலையில் ஈடுபாடுள்ளவர்கள் கண்டு பயன் பெறலாம்.

— எம். எஸ். சிவஸ்வாமி



"இரண்டாவது ரிச்சர்ட்" நாடகத்தில் ஒரு கட்டம். ரிச்சர்ட் அரசர் (டேவிட் வில்லியம்) சிறைப்படுத்தப்பட்டபோது தமது ராணி (அமண்டா சீயல்)யிடம் விடைபெற்றுக் கொள்கிறார்.

# கயல்விழி

## இருபத்தைந்தாம் அத்தியாயம்

## அரண்யத்தில் ஓர் அரண்மனை

கயல்விழி எப்போதாவது கூத்துக்களில் நடிப்பதற்காக ஆண் வேடம் புனைந்து கொள்வதுண்டு. அதற்காக அவள் நாணமுற்றதில்லை. இப்போது பைந்தமிழ்க் குமரனுக்கு அருகிலேயே இளைஞனின் தோற்றத்தில் யானையின் மீது அமர்ந்து சென்றது அவளுக்கு என்னவோ போல் இருந்தது. அவனையும் அவள் தந்தையாரையும் அங்கே அனுப்பிவைத்த விழுப்பரையர், 'ஏலமலைக் காட்டில் உள்ள தலைவர் எனக்கு உற்ற நண்பர். அவரிடம் புகலிடம் பெற்று நீங்கள் பாதுகாப்புடன் இருக்கலாம்' என்றுதான் கூறினாரே தவிர, அந்த உற்ற நண்பர் யாரென்று விவரித்துக் கூறவில்லை.

எல்லையற்ற பூரிப்பும், பெருமையும், செருக்கும் நிறைந்தன கயல்விழியின் உள்ளத்தில். நீண்டு முதிர்ந்த கொம்புகளை உடைய பெருங் களிற்றின் மீது அமர்ந்து செல்லும்போது ஏற்படும் உணர்வு இருக்கிறதே, அது விவரிக்க இயலாத ஒன்று. கயல்விழிக்கு அப்போது தன்னைச் சுற்றியிருந்த உலகம் மிகச்சிறியதாகத் தோன்றியது. காடுகள், மலைகள், அருவிகள் யாவுமே விளையாட்டுப் பொம்மைகளாகக் காட்சியளித்தன. இந்த மனநிலையை அவளிடம் ஏற்படுத்திய தலைவன் மட்டிலும் மிக உயர்ந்தவனாக, மிகவும் ஆற்றல் நிறைந்தவனாக, எதையும் சாதிக்க வல்ல வித்தகனாக அவள் உள்ளத்தி வளர்ந்து கொண்டிருந்தான்.

சட்டென்று அவனைத் திரும்பிப் பார்த்தாள் கயல்விழி. முன் பி பார்த்தே அறியாத ஒரு விந்தை மனிதனை வேடிக்கை பார்ப்பது போ பார்த்தாள்.

''நான் இனிமேல் உங்களைத் தலைவ என்றுதான் அழைக்கப் போகிறேன் என்று பெருமிதத்தோடு மெல்ல கூறினாள்.

''தலைவியாரின் சித்தம் அதுவானா எனக்கும் அது பெருமைதான்'' எ ருன் பைந்தமிழ்க் குமரன்.

''என்னைத் தலைவியாக்கி விட்ட களே...!''

''நான் தலைவனென்றால்?''

தலைவி முகம் சிவக்க நாணித் தல கவிழ்ந்தாள் அவர்களுக்குப் பின் புறம் அமர்ந்து வந்த ஆதிச்ச தேவ வேறு எதையும் கவனிக்கும் மன நிலையில் அப்போது இல்லை. யானை யின் மீதிருந்து கீழே விழுந்துவிடாமல் இருப்பது எப்படி என்ற ஒரே கவலை தான் அவருக்கு. ஓட்டமும் நடையு மாக யானை விரைந்து செல்லத் தொடங்கியது. அதன் வயிற்றைச் சுற்றிக் கட்டியிருந்த கயிற்றை முதுகுப் புறம் இறுகப் பற்றிக் கொண்டார்.

அகிலன்



திரில் கடலைப் போல் பரந்து கிடந்
ஓர் ஆறு. அதன் இடையில்
னஞ் சிறு தீவுகளைப் போன்று சில
த்திட்டுக்கள் தெரிந்தன. தொலை
தெரிந்த மறு கரையில் அடர்ந்த
டுகள் போர்த்த மலைகள் காணப
டன. மாலை மயங்கும் நேரம் அது.

தோணித் துறை போன்ற ஓர்
த்தை நோக்கி மேட்டிலிருந்து
ங்கிச் சென்றது யானை.





"என்ன இருந்தாலும் சொந்தப் பிள்ளை வேறுதான். சுவீகாரப் பிள்ளை வேறு தான்!"

"சொந்தம் என்னங்க ஓசத்தி? சுவீகாரப் பிள்ளை என்றால் நல்ல பிள்ளையாகவும், புத்திசாலியாகவும் தேடிப் பார்த்து எடுத்துக்கலாம். ஆனால் இது அப்படி இல்லையே. பிறந்தால் பிறந்ததுதான்! அதைக் கட்டிக் கொண்டு அனுபவிக்கணுமே?"

"நாம் இந்த ஆற்றைக் கடந்து செல்லப் போகிறோமா?" என்று அச்சத்தோடு கேட்டார் ஆதிச்ச தேவர்.

"ஆமாம்."

"பரிசிலோ, தோணியோ இங்கு காணவில்லையே?"

"இதோ இருக்கிறதே தோணி!" என்று யானையின் மத்தகத்தை அன்போடு தட்டிக் கொடுத்தான் பைந்தமிழ்க் குமரன். யானை உற்சாகத்தோடு நீருக்குள் இறங்கி நிதானமாகச் சென்றது. ஆழம் மிகுதியாக மிகுதியாகத் தண்ணீர் ஆதிச்ச தேவரின் கால்களை நனைக்கத் தொடங்கியது. அவர் அங்கயற்கண்ணி அம்மையைத் தியானம் செய்ய முனைந்து விட்டார். 'தேவி, நீ பத்திரமாகக் கரை சேர்த்து விடு! என்றைக்கு இந்த இளைஞனிடம் கயல்விழி மயக்கம் கொண்டாளோ, அன்றிலிருந்து ஆபத்துக்கள் வந்து கொண்டேயிருக்கின்றன. இல்லை, இல்லை; ஆபத்துக்கள் தாமாக வருவதில்லை. அவைகளை நாடி இவன் எங்களையும் இழுத்துக் கொண்டு போகிறான்! தேவி, நீதான் காப்பாற்ற வேண்டும்!'

நடு ஆற்றைக் கடந்து மிகவும் எச்சரிக்கையுடன் அடி எடுத்து வைத்துச் சென்றது களிறு. கயல்விழியின் மெல்லுடல் அச்சத்தால் நடுங்கியதைக் கண்டவுடன் மெல்ல அவன் கரத்தைப் பற்றினான் பைந்தமிழ்க் குமரன். அந்தக் கரத்துக்குள் என்ன ஆற்றல் மறைந்து கிடந்ததோ தெரியவில்லை. எல்லையற்ற மனத் திண்மை ஊற் பெருக்கெடுத்தது கயல்விழிக்கு.

ஆதிச்ச தேவர் கேட்டார்: "... டாற்றில் போகும்போது திடீரெ... வெள்ளம் வந்து விட்டால் எ... செய்வது ?"

"வராது!" என்றான் இளைஞன்.

"வந்து விட்டால்?" என்றார் அ...

"அப்படியும் வந்தால் வந்து ... டுப் போகட்டுமே!" என்று கூறி நகை... தான் தலைவன். "நம்முடைய பி... பும் நம்மைக் கேட்டுக் கொண்டு ... வில்லை; இறப்பும் நம்மைக் கேட்... கொண்டு வரப் போவதில்லை. இறக்... துணிந்து விட்டால், முதலில் ... முடைய துன்பங்கள் இறந்து போகும்...

வெள்ளம் வந்தாலுமே இப்போ... கயல்விழிக்கு அச்சமில்லை. அவனுடை... கரத்தின் இரும்புப் பிடியில் அவள் இ... தாள். மரணம் வந்தபோதும் அவ... அந்தப் பிடியைத் தளர விடமாட்டா...

ஆற்றுக்கு மையத்திலிருந்த ஒரு சி... தீவுக்கு அவர்கள் வந்தார்கள். அங்... கட்டை மரங்களால் செய்யப் பெற்... ஒரு தோணி கரையில் கிடந்தது. யானை... மீதிருந்து அவர்கள் இருவரையு... இறக்கி விட்டுத் தானும் இறங்கினா... பைந்தமிழ்க் குமரன். யானையை அ... கிருந்த ஒரு மரத்தில் கட்டினான். பிற... திட்டின் மீது செல்லப் படிகளில் ஏ... நடந்தான். தரையை வெட்டி செதுக்கி மேலே செல்லப் பாதை அமைக்கப்பட்டிருந்தது. பாதை முடி... வடையும் இடத்தில் உயரே இருந்... மூங்கில் தட்டியை விலக்கினான் பை... தமிழ்க் குமரன். கயல்விழிக்கு அங்கே கண்ட காட்சி அவளை மெய் சிலிர்க்க... செய்தது.

சுற்றிலும் மரங்களும் செடி கொடிகளும் அடர்ந்திருக்க, அதன் மத்தியில் ஓர் அழகிய வீடு தென்பட்டது. புல் வேய்ந்த வீடுதான். சாளரங்களும் கதவுகளும் கொண்ட மண் சுவர் வீடு அது.

மூங்கில் தட்டிக்கும் வீட்டுக்கும் இடையில் ஓர் அகழி தென்பட்டது. சிறிய மூங்கில் பாலத்தின் மீது நடந்து அவர்கள் அகழியைத் தாண்டினார்கள். வீட்டுக்குள்ளிருந்து ஓடி வந்த பணியாள் ஒருவன், அவர்கள் பாலத்தைக் கடந்தவுடன், அதை மெல்லத் தூக்கிக் கயிற்றால் கட்டினான்.

'என்ன இது?' என்று வினவுவது போல் பைந்தமிழ்க் குமரனைப் பார்த்தாள் கயல்விழி.

"இரவு வேளைகளில் யானைகளோ மற்றக் காட்டு மிருகங்களோ வராமல் இருக்க வேண்டுமல்லவா? அகழியைத்

புஷ்பலதாவிடமிருந்து மலரும் இரகசியம்: **‘என் மேனியோடு உறவாடி விந்தைபுரிவது லக்ஸ்’**



புத்தெழில் நட்சத்திரம் புஷ்பலதா புகலுகிறார்:
"தூய்மையும் மென்மையுமே உருவானது லக்ஸ். வளமை கொழிக்கும் லக்ஸ் நுரை எனது மேனிமீது விந்தை புரிகிறது. நறுமணமோ நெஞ்சை அள்ளும். எனது அழகுப் பராமரிப்பிலே என்றும் முதலிடம் பெறும் லக்ஸ் உங்களுக்கும் உதவட்டுமே."




**லக்ஸ் டாய்லெட் சோப்: சினிமா நட்சத்திரங்களின் அழகுசாதன சோப்**

**வெண்மையிலும், வானவில் வண்ணங்கள் நான்கிலும் உண்டு.**

LTS. 179-140 TM

இந்துஸ்தான் லிவர் தயாரிப்பு

ாண்டி அவைகளால் வர முடியாது. கலில் பாலத்தை இறக்கி விட்டுக் காண்டு நாம் வெளியில் சென்று வரலாம். இரவில் அதை இழுத்துக் கட்டி டுவோம்.''

''அரண்யத்துக்குள் இது ஓர் அரண்மனை என்று சொல்லுங்கள்!'' என்று குதூகலத்துடன் கூறினாள் கயல்விழி. 'சுற்றிலும் காட்டு அரண் இருக்கிறது: மலை அரண் இருக்கிறது; நதி அரண் இருக்கிறது; அகழியும் தோண்டி விட்டீர்கள். இது ஓர் அரண்மனையேதான்!''

''நீ அரசியாகவும் நான் அரசனாகவும் மாறும்போது இதுவே நம் அரண்மனையாக இருக்கும்; வசந்த மாளிகையாக இருக்கும்'' என்று அவள் செவிகளில் கூறினான் அந்த இளவரசன். இரு பொருள்பட அவன் கூறும்போது அவனுக்குள் பெருவகை பொங்கியது.

அரண்யத்து அரண்மனையான அந்தக் குடிலுக்குள் விளக்குகள் சுடர் விட்டு ஒளிர்ந்தன. நறுமணப் புகை மெல்லச் சுழன்று கொண்டிருந்தது. குடிலுக்குள் அழைத்துச் சென்று அதைச் சுற்றிக் காட்டினான் தலைவன். ஓலைச்சுவடிகள் நிறைந்த ஓர் அறை மட்டிலும் பூசனை அறை போன்ற தோற்றத்தை அளித்துக் கொண்டிருந்தது. அதில் தெய்வப் புலவர் திருவள்ளுவரும் கற்பனைச் செல்வர் கம்பர் பெருமானும் அருகருகே தங்கள் சுவடிகளில் வீற்றிருந்தார்கள். மணம் கமழும் மலர்கள் அவர்கள் மீது தூவப் பெற்றிருந்தன.

''என்னுடைய தவச் சோலை இது தான்'' என்றான் பைந்தமிழ்க் குமரன்.

''இங்கும் தவம் செய்கிறீர்களா?'' என்றாள் கயல்விழி. அப்போது அவளுக்குத் திருக்கொடுங் குன்றத்தில் ஒரு நாள் காலையில் அவனைச் சரக்கொன்றை மரத்தடியில் தவக்கோலத்தில் கண்ட காட்சி நினைவுக்கு வந்தது. அவள் உள்ளத்தில் பசுமையாய்ப் பதிந்து விட்ட அற்புதக் காட்சி அது.

''ஆமாம்; என்னுடைய தலைவர்களோடு நான் இங்குதான் உரையாடுகிறேன். அவர்கள் தங்களுடைய கருத்துச் செல்வத்தை எனக்கு வழங்குகிறார்கள். நான் அவற்றை ஏற்றுக் கொண்டு, நம்முடைய இலட்சியத்துக்காகச் சிந்தனைத் தவம் செய்கிறேன். அந்தத் தவமே எனக்குச் செயலாற்றல் தருகிறது. இந்தக் கானகத்தில் இப்போது ஓராயிரம் போர்க் களிறுகள் பாண்டிய நாட்டை விடுவிக்கச் சித்தமாக இருக்கின்றன!''

வாயடைத்துப் போனாள் கயல்விழி. 'ஏட்டில் வெறும் பாட்டெழுதுவதோடு நின்று விடும் புலவரல்லர் இவர். வள்ளுவரையும் கம்பரையும் தமது புலமைக்காக மட்டும் அவர் கற்கவில்லை. அவர்களைப் பயன்படுத்தத் துணிந்து விட்டார். வெற்றியும் கண்டு விட்டார்!'

''ஆமாம், உங்களைப்பற்றி ஒன்றுமே கூறவில்லையே?'' என்றான் பைந்தமிழ்க் குமரன்.

நடந்த செய்திகளனைத்தையும் கயல்விழி தெரிவித்தாள். ''சோழ நாட்டு ஒற்றர்கள் எப்படியாவது என்னைச் சிறைப் பிடித்துக் கொண்டு போகத் துணிந்து விட்டார்கள். விழுப்பரையர் வந்து நம்முடைய குழுவினரைத் திருமுனைப்பாடி நாட்டுக்கு அனுப்பி வைத்தார். என்னையும் தந்தையாரையும் இங்கு அனுப்பினார். ஆனால் இங்குள்ள தலைவர் யார் என்பதை மட்டும் அவர் கூறவில்லை.''

''சிறை தப்பி வந்து காட்டுக்குள் மறைந்து வாழும் தலைவனுக்குத் துணையாக, சிறைக்கு அஞ்சி நடுங்கும் தலைவியை அனுப்பியுள்ளார் போலும்!'' என்று கூறி நகைத்தான் பைந்தமிழ்க் குமரன்.

## இருபத்தாறாம் அத்தியாயம்

# வசந்தம் வந்தது

ஏலமலைக் காட்டின் தலைவனாக விளங்கிய பைந்தமிழ்க் குமரனின் அன்றாட நடவடிக்கைகளை ஊன்றிக் கவனித்தாள் கயல்விழி. கருக்கிருட்டு நேரத்திலேயே எழுந்து அவன் ஆற்று வெள்ளத்தில் சிறு பொழுது நீந்தித் திளைப்பான். பிறகு தன்னுடைய தவச் சோலையாகிய கூடத்துக்குள் புகுந்து வள்ளுவரையும் கம்பரையும் படித்து விட்டுத் தியானத்தில் ஆழ்ந்து விடுவான். அதற்குள் அவனுக்குக் காலை உணவு சித்தமாகி விடும். பழங்கள், கிழங்குகள், தேன் இவையே அவனுடைய முற்பகல் உணவு. பின்னர் ஆதிச்ச தேவரையும் அழைத்துக் கொண்டு வெளியில் கிளம்பி விடுவான்.

மாலையில் களைப்பு மிகுந்து குடிலுக்குத் திரும்புவதற்குள் விளக்கேற்றும் நேரமாகி விடும். திரும்பவும் ஆற்று வெள்ளத்தில் நீந்துவான். கயல்விழி

## குட்டிக் கதை

பிஸ்மார்க் இளவரசருடன் ஒரு முறை லார்ட் ரஸ்ஸல் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார். பேச்சு வாக்கில், இளவரசரிடம், "இளவரசரைச் சந்திக்க வருபவர்களில் யாராவது வெகு நேரம் உட்கார்ந்து பேசிப் பொழுதை வீணடித்தால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டார்.

இளவரசர் பதில் கூறினார்: "என் மனைவி மிகவும் கெட்டிக்காரி. அந்த மாதிரி மனிதர்களைக் கண்டுபிடிப்பதில் அபாரத் திறமை வாய்ந்தவள். அத்தகைய நேரங்களில் ஏதாவது சாக்குக் காட்டி என்னை உள்ளே அழைத்துச் சென்று விடுவாள்."

இளவரசர் இப்படிச் சொல்லி வாய்மூடவில்லை. அவரது மனைவி உள்ளிருந்து வந்தவள், "பார்த்தீர்களா, இன்று நீங்கள் இன்னும் மருந்து குடிக்கவில்லையே! மறந்து விட்டீர்களே. பத்து நிமிஷம் முன்பு குடிக்க வேண்டிய மருந்து. வாருங்கள் உள்ளே, மருந்து சாப்பிட!" என்று கூறினாள்.

லார்ட் ரஸ்ஸலுக்குத் திகைப்புத் தீர எத்தனை நேரம் ஆயிற்றோ, யார் கண்டார்கள்?

---

யோடு உரையாடுவான். உணவுக்குப் பின்னர், மறுநாள் அலுவல்களைப் பற்றிச் சிந்தித்து விட்டு உறங்கச் செல்வான்.

ஒவ்வொரு நாள் இரவிலும் ஆதிச்ச தேவர் தம்முடைய குமாரத்தியிடம் அவர் கண்டதையும் கேட்டதையும் பற்றிக் கதை கதையாகச் சொல்வார். கயல்விழி அந்தக் குடிலுக்குள் நுழைந்தவுடனேயே மாறுவேடத்தைக் களைந்து விட்டுக் கயல்விழியாகி விட்டாள்!

"கயல்விழி! உனக்கு ஒரு இரகசியம் தெரியுமா?" என்றார் ஆதிச்சதேவர்.

"என்ன?"

"பைந்தமிழ்க் குமரன் ஒரு படைத் தலைவர்! காடுகளுக்குள் இரண்டாயிரம் போர்வீரர்களுக்கு மேல் இருப்பார்கள் என்று தெரிகிறது. ஆயுதங்கள் எங்கிருந்து தான் வருகின்றனவோ தெரியவில்லை. பயிற்சி நடக்கும் பொட்டல்கள் அங்கங்கே மறைவாக இருக்கின்றன. உண்மையான போரை விடக் கடுமையாகத் தாக்கிக் கொள்கிறார்கள்" என்றார் வியப்புடன்.

"யாருக்கும் காயமோ ஆபத்தோ ஏற்படாதா?"

"மருத்துவச் சாலைகளையும் பார்த்தேன். பைந்தமிழ்க் குமரன் தினம் அங்கு போய் வீரர்களைப் பார்த்து வருகிறார். இவரிடம் எல்லோரும் உயிரையே வைத்திருக்கிறார்கள்."

எல்லோரும் உயிரையே வைத்திருக்கிறார்கள் என்பதைக் கேள்வியுற்றவுடன் கயல்விழிக்குள் ஓர் ஐயம் எழுந்தது.

"எல்லோரும் ஆண்கள்தானா, அல்லது பெண்களும் இருக்கிறார்களா?" என்று கேட்டாள் கயல்விழி.

"ஒரே ஒரு பெண்தான் இருக்கிறாள்; அவள்தான் மற்ற எல்லோரையும்விட இவரிடம் மதி மயங்கி இருக்கிறாள்" என்று கவலையோடு கூறினார்.

"என்ன?" கயலனழு ஆத்திரத்துடன் தந்தையாரைப் பற்றிக் குலுக்கினாள். "பெண் வேறு இருக்கிறாளா அவளிடம் இவர் பழகுகிறாரா?"

"ஆமாம், அந்தப் பெண்ணுக்குத் தன் தந்தையாரைவிடத் தலைவரிடந்தான் பற்றுதல் அதிகம்! அவள் இப்போது இங்குதான் இருக்கிறாள்!" என்று கூறி நகைத்தார் அவர். கயல்விழியின் உயிர் அவளிடம் திரும்பி வந்தது.

"தலைவருக்கோ தம் தலைவியைவிட இந்தக் காட்டில் உள்ள யானைகளிடந்தான் பற்றுதல் அதிகம் என்று தெரிகிறது. வீரர்களிடம்தான் அவர் நேசம் வைத்திருக்கிறார். இரகசியமாக நாலைந்து படைத் தலைவர்களோடு அடிக்கடி இவர் ஒரு குடிலுக்குள் புகுந்துகொண்டு பேசுகிறார். எனக்கு வேறு ஏதாவது வேலை கொடுத்து விட்டு அப்போது நழுவி விடுகிறார்" என்றார் ஆதிச்சதேவர்.

"ஏதாவது அந்தரங்க ஆலோசனைகள் நடத்துவார்கள். ஏன், நீங்களும் படைத் தலைவராக விரும்பினால் உங்களையும் அழைத்துக் கொள்ளச் சொல்கிறேன்!"

"வேண்டாம்; வேண்டவே வேண்டாம்" என்றார் அவர். "இந்த இரகசியங்களை அவர் யாரிடமும் கூற வேண்டாமென்றார். நான் உன்னிடம் கூறி விட்டேன்."

"என்னிடம் கூறுவதோடு இருக்கட்டும்" என்றாள் கயல்விழி.

கயல்விழிக்கு இப்பொழுது அங்கே நாள் முழுவதும் பணிகள் இருந்தன. பைந்தமிழ்க் குமரனுக்கு முன்பாகவே தந்தையாரை எழுப்பி விட்டு இருவரும் ஆற்றில் நீராடி விட்டு வந்தார்கள். அவனுக்காக மலர் கொய்து வைப்பது, துப்புரவு செய்வது, உணவைக் கவனிப்பது முதலிய பல கடமைகளை அவளே மேற்கொண்டு விட்டாள். அந்த அரண்யத்துச் சிறு குடிலுக்கு அவளுடைய கைவண்ணத்தால் நாளுக்கு நாள் ஒளி மிகுந்து கொண்டே வந்தது. வண்ண வண்ண மாக்கோலமிட்டாள். செஞ்சாந்து பூசினாள். மலர் கொய்து நிரப்பினாள். 'ஒரு பெண்ணின் துணை கிடைத்தவுடன் இந்தக் குடில் எவ்வளவு அழகாக மாறி விட்டது!' என்று ஆனந்தம் கொண்டான் பைந்தமிழ்க் குமரன்.

கயல்விழியின் வாழ்வில் இவ்வளவு குதூகலம் நிறைந்த நாட்களை அவள் கண்டதில்லையென்றாலும், அவளுடைய தந்தையார் கூறிய ஒரு செய்தி மட்டிலும் அவள் உள்ளத்தில் வித்தாக விழுந்து முளைத்து வளரத் தொடங்கியது. 'யானைகளிடம் உன் தலைவருக்குப் பற்றுதல் அதிகம்; வீரர்களிடம் தான் அவர் நேசம் வைத்திருக்கிறார்' என்ற சொற்களை மட்டும் அவளால் மறக்க முடியவில்லை. பைந்தமிழ்க் குமரன் அவளிடம் நடந்து கொண்ட விதமும் அவளுக்கு அப்படித்தான் தோன்றியது. கொடுங் குன்றத்தில் உலவிய குமரனாக அவன் இருக்கவில்லை. பற்றற்ற யோகி ஒருவன் தன் பணிப் பெண்ணிடம் காட்டும் அன்பை ஒத்திருந்தன அவனுடைய சொற்களும் செயல்களும். அன்பில் அணுவளவும் குறைவில்லை. ஆனாலும் ஏதோ ஒரு மென் திரையை அவர்களுக்கிடையில் அவன் தொங்க விட்டிருப்பதாக அவள் நினைத்தாள்.

இளவேனிற் காலம் கயல்விழிக்குத் தன் அன்புக் கரத்தை நீட்டியது. மலர்கள் கொள்ளை கொள்ளையாகப் பூத்துச் சொரிந்தன. கதிரொளியில் குளுமை கலந்தது. இளந் தளிர்கள் செம்பொன் மேனி பெற்று மென் காற்றில் துடித்தன. தேன் சிட்டுக்கள் கூட்டம் கூட்டமாக அந்தக் குடிலைச் சுற்றிப் பறந்து திரிந்தன.

அன்றைக்குப் பூர்ணிமை. முழு நிலவே ஆற்று நீராக மாறி அந்தத் திட்டைச் சூழ்ந்து பெருகுவது போல் தோன்றியது கயல்விழிக்கு. இமயத்திலே தவக்கோலம் பூண்டிருந்த தன் தலைவனை வெற்றி கொள்ளத் துடித்தாள் அல்லவா இமயவரம்பனின் குமாரத்தி? அந்தப் பார்வதியின் மன நிலை கயல்விழியிடம் துளும்பியது. காட்டு மலர்களையும் தளிர்களையும் கொய்து கூந்தல் நிறையச் சூடிக்கொண்டாள். மலர் வளையங்களான கங்கணங்கள் அவளுடைய மென்தளிர்க் கரங்களை அலங்கரித்தன. செவிகளில் மகரக் குழையணிந்து கொண்டாள், அவன் வரவு நோக்கி ஆற்றங்கரையின் விளிம்புக்கு வந்து காத்திருந்தாள்.

கயல்விழியின் புதுமைத் தோற்றத்தைக் கண்ட பைந்தமிழ்க் குமரன், மெய்ம்மறந்து அவள் எதிரில் சில விநாடிகள் நின்று விட்டான். கண்களில் அவளுக்குக் கனவு மிதந்தது; செவ்விதழ்கள் புதுப் பொலிவு பெற்றிருந்தன; குறுநகையும் விழிக்கோணத்தின் கூரம்புகளுமாக அவள் அவன் முன்பு நின்றாள்.

''வசந்தம் நம் அரண்மனைக்கே வந்து விட்டது போல் இருக்கிறது!'' என்றான் பைந்தமிழ்க்குமரன்.

''அரண்மனைக்கு மட்டிலும் வரவில்லை. அதற்குள்ளே வாழ்பவர்களையும் தேடிக் கொண்டிருக்கிறது. இன்றைக்குச் சித்திரை மாதத்துப் பௌர்ணமியல்லவா?''

''ஓ! நிலவு அதற்குள் உதயமாகி விட்டதே!'' என்று கூறிக் கலகலவென்று நகைத்தான் பைந்தமிழ்க்குமரன்.

''இந்நிலையில் எனக்குத் தோணியில் நம் அரண்மனையைச் சுற்றி வர வேண்டுமென்ற ஆவல் பிறந்திருக்கிறது.''

''அரசியாரின் சித்தம் அதுவென்றால் இந்த அடிமை தோணிக்குத் துடுப்புத் தள்ளி மகிழ்வேன்!'' என்றான்.

உணவு முடிந்த பின்பு பணியாளன் உறங்கத் தொடங்கினான். ஆதிச்ச தேவர் தமது அன்றையப் பெருமைகளைக் கூறி விட்டுக் கண்ணிமைகளை மூடினார். கயல்விழி மெல்ல எழுந்து வந்தாள். தலைவனுக்காக அவள் தொடுத்து வைத்திருந்த மலர் மாலையில் தேன் துளிகள் சிதறியிருந்தன. அதை எடுத்துக் கொண்டு அகழிப் பாலத்தின் அருகில் வந்தாள். அவன் அங்கு மதியொளி வெள்ளத்தில் மூழ்கி நின்றான்.

மாலையை நாணத்தோடு அவன் கழுத்தில் அணிவித்து விட்டுத் தயங்கி நின்றாள் அவள். பைந்தமிழ்க் குமரனுக்கு அப்போது அவனுடைய ஆயிரம் யானைகளின் வலிமையும் ஒன்றாய்த் திரண்டு அவன் தோளுக்கு வந்து விட்டது போல் தோன்றியது. அவன் கரத்தைப் பற்றியவாறே தோணிக்கு அவளை அழைத்துச் சென்றான். (தொடரும்)

**வெள்ளித்திரை — நேயர் விமர்சனம்**

அடுத்து விமர்சனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் படங்கள்:

உல்லாசப் பயணம் – முரடன் முத்து

விமர்சனம் வந்து சேரவேண்டிய கடைசித் தேதி: 28–11–64

# வீட்டைக் கட்டிப் பார்!



## எஸ். பத்மாவதி

### காட்சி – 1

ரகுநாதன்: மஞ்சு! மஞ்சு....! இங்கே வாயேன்.....

மஞ்சுளா: இதோ வரேன்...எதுக்கு இவ்வளவு அவசரமாம்?

ரகு: நீ ரொம்ப நாட்களா ஆசைப் பட்டது ஒண்ணு நடக்கப்போறது. கையில் என்ன இருக்குன்னு பார்த்து விட்டுப் பேசு.

மஞ்சு: என்னது? வீட்டுப் 'பிளான்' போலன்னா இருக்கு!

ரகு: எதுக்குன்னு சொல்லு பார்க்கலாம்?

மஞ்சு (அலட்சியத்துடன்): ஏன் புது வீடு கட்டப் போறேளாக்கும்?

ரகு: அடி சமத்தே! எப்படிக் கண்டு பிடிச்சே?

மஞ்சு (ஆச்சரியத்துடன்): என்ன நிஜம் மாவா? வீடு கட்டப் போறேளா? அல்லது கேலி செய்யறேளா?

ரகு: ஏன் என்னைப் பார்த்தால் இந்தக் 'திரேதாயுக' வீட்டிலேயே எப்பவும் இருக்கிற வன் மாதிரி தோணறதா? (பெருமையுடன்) பார்த்துக் கொண்டே இரு.... நீயே பிரமிக் கும்படி ஒரு ''மாடர்ன் ஹவுஸ்'' கட்டி முடிச்சுடறேன்.

மஞ்சு: போதுமே உங்க பெருமை.... எனக்கென்னமோ நம்பிக்கை இல்லே. ஆமாம், இது யாரு வீட்டுப் 'பிளானு'.....?

ரகு: நம்ம சுந்தரம் இப்ப 'பார்வதி புரத்திலே' புது வீடு கட்டிண்டு போயிருக் கான் பாரு, அவன்கிட்டேயிருந்து வாங்கிண்டு வந்தேன். கிருஹப்பிரவேசத்தன்னுபோயிருந்த போது நீகூடக் கட்டினால் இது போல வீடு கட்டணும்னு பெருமூச்சு விட்டாயே.....! எனக்கும் இந்தப் பிளான் மொத்தத்திலே ரொம்பப் பிடிச்சிருக்கு. மேலாக நமக்கு வேணுங்கிற மாதிரி மாத்திக்கலாம். பன்னீர் நகரிலே நமக்கு மூணு மனை இருக்கு பாரு. அதிலே கட்ட லாம்னு யோசனை. என்ன சொல்றே?

மஞ்சு (மகிழ்ச்சியுடன்): அப்பாடா! இவ்வளவு நாளுக் குப் பிறகாவது நான் சொன் னது உங்க காதிலே விழுந் ததே! ஆமாம்..... இது எங்க கொள்ளுத் தாத்தாவோ.... எள்ளுத் தாத்தாவோ கட்டின 'ஆவி வந்த வீடு'. என் ஆயு சுக் காலத்துலே இதை விட்டு நகர மாட்டேன்னு சொல் லிண்டிருந்தேளே! இப்ப மாத்திரம் எப்படிப் புது வீட்டுக்குக் குடி போகணும்னு தோணித்தாம்.....?

ரகு: நீ கேலி செய்வேன்னு தெரியும். இருந்தாலும் உன் ஆசையையும் கெடுக்கக் கூட தென்றுதான். ஆமாம்...மஞ்சு இந்த வீட்டை விற்காமல் புது வீடு கட்ட நம்மிடம் பணம் எங்கே இருக்கிறது? ஆறு தலைமுறையா இந்த வீட்டிலே எல்லாரும் பெருமையா வாழ்ந்துட்டுப் போயிட்டா.... நானாகவே இதை விற்கிறேன் என்று ஊெம்பி னால் எங்க குடும்ப கௌரவம் என்ன ஆகிறது? ஓஹோ! நமக்கு மேலே கடன் போலிருக் குன்னு எண்ணிக்க மாட்டாளா? அதுக்குத் தான் இவ்வளவு நாட்கள் சும்மா இருந்தேன்.

மஞ்சு (குறுக்கிட்டு): ஆமாம். இப்ப மட்டும்?

ரகு: சொல்லுவதற்குள் அவசரப்படு கிறியே! நேற்று நம்ப கப்புணி அவசரமா என்னைத் தேடிண்டு ஆபீசுக்கு வந்தான். யாரோ பெரிய ஜமீந்தாராம். இந்த மாதிரி புராதன வீடுகள் மேலே மோகமாம். யதேச்சையாக இதைப் பார்த்து விட்டு ஆசைப்பட்டு விலைக்கு வருமான்னு கேட்கச் சொன்னாராம். நம்மைத் தேடிண்டு 'ஸ்ரீதேவி' வரப்போ காலாலே உதைத்தால் நன்றாக இருக்குமா? உடனே விற்கிறேன் என்று சொல்லி விட்டேன். இதோ பாரு, மஞ்சு. யார் காதுலேயும் இந்தச் சமாசாரத் தைப் போட்டுடாதே. எல்லாம் பொறு மைக்காரப் பசங்க. கலைச்சுடுவாங்க. கனியா லட்சம் ரூபாய் தராளாம். வாங்கிக் கொள்ள தற்குக் கசக்கிறதா என்ன? நம்ம காலத் துக்குப் பிறகு இவ்வளவு பெரிய வீட்டைக் கட்டிக் காக்க நம்ம பசங்களால் முடியாது. என்ன நான் சொல்றது சரிதானே?

மஞ்சு: சரிதான்...ஆனால் பணம் கையிலே வந்து சேர்றதுக்குள்ளே 'பிளான்' போட ஆரம்பிக்கிறேளே!

ரகு: உனக்குத் தெரியாது மஞ்சு. 'பிளான்' போட்டுக் கார்ப்பொரேஷனிலே 'சாங்ஷன்' வாங்கறது எவ்வளவு கஷ்டம்னு. என்ஜினீயர்கிட்டே பிளான் போடச் சொன் னால் அவர் இஷ்டப்படி போட்டுக் கட்டிக் கொடுத்துவிடுவார். பிறகு ஆயுச பரியந்தம் அந்த வீட்டிலே இருந்து கஷ்டப்படறது நாம் தானே? இது ரொம்பப் பேருக்குத் தெரியறதில்லே. அவரிடம் 'பிளானு'க்குப் போவதற்கு முன்னால் நமக்கு வேணுங்கிற மாதிரி போட் டுக் கொண்டு போனால், மற்ற விஷயங்களையெல்லாம் அவர் கவனித்துச் சுலபமாக முடித்துக் கொடுத்து விடு வார். என்ன நான் சொல்வது உனக்குப் புரிந்ததோ?



மஞ்சு: ஆஹா...பேஷா...ம்...கொண்டாங்கோ அந்தப் 'பிளானை'ப் பார்க்கலாம். ஆமா.... சுந்தரமும் அவர் மனைவியும் இரண்டே பேர்.



அவர்களுக்கு இந்தச் சின்ன வீடு போதும். நமக்கு ஒரு பெண்ணும், ஒரு பிள்ளையும் இல்லையா. இன்னும் இரண்டு அறைகள் பெரிதாகப் போட்டால்தான் சௌகரியமாக இருக்கும்.

ரகு: மஞ்சு! ஒரு வேடிக்கை கேளேன். ந்தப் 'பிளானை'ப் போட்டு முடிப்பதற்குள் -ந்தரத்துக்கும் அவன் மனைவிக்கும் ஏக ண்டை வந்து பல நாட்கள் பேச்சு வார்த்தையே இல்லாமல் இருந்தார்களாம். எவ்வளவு ஒற்றுமையாக இருக்கிற தம்பதிகளுக்கும் சண்டை மூட்ட வேண்டுமானால் கையிலே ஒரு வீட்டுப் பிளானைக் கொடுத்து விட்டால் போதும் என்று சொன்னான். 'ஏண்டா! நீயும் உன் மனைவியும் பாலும் நீரும் போல் ஒற்றுமையாக இருக்கிறீர்களே. உனக்கே சலித்து விட்டதா? இதை உங்க வீட்டுக்குள்ளே நுழைய விட்டால் பாரத யுத்தம் ஆரம்பமாகி விடுமே. எதற்கடா இந்தச் சனியன்?' என்று கேலி செய்ய ஆரம்பித்து விட்டான்.

மஞ்சு: ஆமாம், இவர்களைப் போல் உங்களையும் என்னையும் நினைத்து விட்டார்களா, தொட்டதுக்கெல்லாம் பலமா சண்டை போடுவதற்கு?

ரகு: புது வீடு கட்டின என் சிநேகிதர்கள் எல்லாரும் இப்படித்தான் தாங்கள் போட்ட யுத்தத்தைப் பற்றிக் கதை கதையாகச் சொல்கிறார்கள். ஆமாம், மஞ்சு. நாம் இரண்டு பேரும் ஒற்றுமையாக உட்கார்ந்து 'பிளான்' போட்டால் சண்டை ஏன் வரும்னு கேட்கிறேன். சுத்த முட்டாள்கள். இங்கே பார், மஞ்சு! என் கூட நீ ஒத்துழைச்சா பிரமாதமா வீடு கட்டி முடிச்சுடலாம், என்ன சொல்றே?

மஞ்சு: இயேன்னு என் மேலே எதுக்குச் சந்தேகம் வந்தது? என்றைக்காவது நான் உங்களுக்கு எதிராக நடந்திருக்கிறேனா? எனக்கு வேண்டிய முக்கிய விஷயம், சமையல் அறை, பூஜை அறை இவ்வளவுதான். மற்றதெல்லாம் உங்கள் இஷ்டப்படி போட்டுக் கொள்ளுங்களேன்.

ரகு: எது எப்படிப் போனாலும் எனக்கு வீட்டைச் சுற்றி நான்கு புறமும் முப்பது அடி தோட்டத்துக்காக விட்டுடணும். தோட்டம் இல்லாத வீடு ஒரு வீடா? என்னுடைய 'ஹாபி'யே அதுதானே!

மஞ்சு: நீங்க சொல்றபடி போட்டால் தோட்டத்துக்கு நடுவில் ஒரு சிறிய அறை தான் கட்ட முடியும்.

(இருவரும் சிரிக்கிறார்கள்.)

ரகு: மஞ்சு! பார்த்துக் கொண்டே இரு! பெரிய பெரிய இஞ்ஜினீயர்கள் மூக்கின் மேல் விரல் வைத்து அதிசயிக்கும்படி அருமையா 'பிளான்' போட்டு வைக்கிறேன்!

## காட்சி — 2

[நான்கு நாட்களுக்குப் பிறகு]

ரகு (கோபமாக): ஏய், மஞ்சு! இப்படி வாயேன்.... ஆமாம், உன்னை யாரு நான் போட்டிருந்த 'டிராயிங்கை' அழித்து விட்டு இப்படி மாற்றிப் போடச் சொன்னது?

மஞ்சு: அம்மாடி! இதுக்காகவா இப்படிக் கத்தினேள்! என்னமோ, ஏதோன்னு பயந்து ஓடி வந்தேன்.

ரகு (கோபம் அடங்காமல்): பயப்பட்டவள் மாதிரியாயிருக்கு உன் பேச்சு?

மஞ்சு: எதுக்கு இப்படிக் கோபிச்சுக்கறேள்! என்ன ஆயிடுத்து இப்போ? நீங்கள் தானே யோசித்து எப்படி எப்படி மாற்றினால் எல்லா அறையும் ஒழுங்காக அமையும்னு போட்டுப் பார்க்கச் சொன்னேள்?

ரகு: சரி, சரி. உன்னை இதுலே கைவைக்கச் சொன்னதே தப்பு.

மஞ்சு: என்ன தப்பாம்? நாளைக்கே பெண்ணுக்குக் கலியாணமாகி மாப்பிள்ளை வராள்னு வைத்துக் கொள்ளுங்கள். அவர்களுக்கு அறை கொடுக்க வேண்டாமா? இல்லாட்டா மாட்டுப் பெண் வந்தால்தான் தனி அறை வேண்டாமா? இதெல்லாம் யோசனை செய்யாமல் நீங்க என்னமோ 'பிளான்' போட்டிருக்கேளே!

ரகு: ஆமாம். நீதான் பெரிய 'தீர்க்க தரிசின்னு' எண்ணமாக்கும். அப்போ நாமும் இப்படியேவா இருப்போம்? நம்ம அறையை அவர்களுக்குக் கொடுத்து விட்டு நாம் ஹாலை உபயோகப்படுத்தலாமே!

மஞ்சு (ஆத்திரத்துடன்): நன்னாயிருக்கு. அதெல்லாம் முடியாது. எனக்கென்று ஓர் அறை இல்லாத வீடு என்ன வீடு!

ரகு (கொஞ்சலுடன்): அயோ, மஞ்சு! இந்த வீடே உன்னுடையதுதானே. இதிலே ஓர் அறையைப் பற்றிக் கவலைப்படுகிறாயே! அசடு! அசடு! இதுக்குத்தான் பெண்ணுக்குப் புத்தி மட்டுன்னு சொல்றது!

மஞ்சு: போதும். இப்படியெல்லாம் பேசி என்னை ஏமாற்ற முடியாது. நான் சொல்வது போல் இரண்டு அறைகள் தெற்குப் பார்த்துப் போட்டு விடுங்கள்.

ரகு (எரிச்சலுடன்): ஏண்டி! புத்தியிருந்து பேசறயா? எல்லாப் பணத்தையும் வீட்டிலே போட்டுட்டு வெறும் கையை முழம் போட்டுண்டு எத்தனை நாட்கள் இருக்க முடியும்னு நினைக்கிறாய். மட்டி! மட்டி!

மஞ்சு: போதும் என்னை நீங்கள் கரிச்சுக் கொட்டினது.

ரகு: மஞ்சு, மஞ்சு..... என்ன இது! இதுக்கே கண்ணைக் கசக்க ஆரம்பித்து விட்



டாயே! ஐயோ! அந்தச் சுந்தரம் சொன்னுன், கலகம் வரும் என்று. நான் கேட்டேனு ?

மஞ்சு: பின்னே என்ன? எல்லாம் உங்கள் இஷ்டப்படி என்றும் என்னை எதுக்குக் கேட்க வேண்டுமாம் ?

ரகு: சரி, சரி. கண்ணைத் துடைச்சுக்கோ. யாராவது பார்க்கப் போரு. ஈசுவரா ! சண்டை, பூசல் இல்லாமல் நாங்கள் வீடு கட்ட அநுக்கிரகம் பண்ணப்பா.

(பெருமூச்சுவிட்டபடி செல்கிருன்.)

### காட்சி – 3

[ஒரு வாரத்துக்குப் பிறகு]

ரகு: மஞ்சு! என்ன சதா யோசனை பண்ணிக் கொண்டே யிருக்கிறும் ? 'பிளான்' தான் போட்டு முடிச்சாச்சே !

மஞ்சு (நகைத்து): என்ன முடிச்சாச்சா? இதோ பாருங்கள்! நீங்கள் என்ன சொன்னுலும் சரி. சமையல் அறைக்குப் பக்கத்திலே தான் சாமான் அறை இருக்க வேண்டும். நடந்து பார்த்தால் உங்களுக்குக் கஷ்டம் தெரியும். சமையலுக்கு ஆள் இருந்தாலும் சாமான் எடுத்துக் கொடுப்பது நான்தானே ? அந்த அறைக்கு ஓர் இடம் கொடுக்க வேண்டுமே என்று 'கடனேன்னு' ஒரு மூலையைத் தேடி அதைப் போட்டிருக்கேளே !

ரகு: மஞ்சு ! நீ சுத்த கர்நாடகம்னு இப்பொழுதுதான் தெரிந்தது. 'மாடர்ன் ஹவுஸிலே' சாமான் அறையும், சமையல் அறையும் பக்கத்துப் பக்கத்திலே இருக்கக் கூடாது. எங்க மானேஜர் வீட்டிலே உள்ளே நுழைந்ததும் முதல்லே என்ன அறை தெரியுமோ ? சமையல் அறைதான் முதல்லே!

மஞ்சு (ஏளனத்துடன்): சரிதான், பெரி சாப்பாட்டு ராமராக்கும். உள்ளே நுழைந் சிறிது நேரம்கூடக் காத்துக் கொண்டிருக்க பொறுக்காது போலிருக்கு. நேராகச் சமைய உள்ளே நுழைந்து வேணுங்கிறதை எடுத்து சாப்பிட்டுத் திருப்தியடைந்த பிறகுதா மற்ற அறைகளுக்கும் போவார் போலிருக்கு

ரகு: சரி, சரி. உன்னிடம் எது சொன்னு லும் குதர்க்கம்தான். மெள்ளப் பேசு. பியூ வாசல்லே இருக்கிருன். மானேஜர்கிட்டே வத்தி வைக்கப் போரன். எதுக்குச் சொல்ல வந்தேன்னு, பாதி நாள் சமையலுக்கு ஆள் இருக்கிறதில்லே. வாசற் பக்கம் வரவா போற வாளுக்குப் பதில் சொல்லிண்டு சமைக்க சௌகரியமா யிருக்கும் என்றுதான் அப்படிக் கட்டிண்டிருக்கா தெரிந்ததா ?

மஞ்சு: ஆமாம், உங்க மானேஜர் மனைவி போல் கெடுபிடி பண்ணிலும் யார்தான் வேலை யில் தங்குவார்கள்? என்னிடம் வருகிறவர் களைப் பாருங்கள். கழுத்தைப் பிடித்துத் தள்ளினுலும் போக மாட்டேங்கிரு.

ரகு: போதுமே, உன் பிரதாபம். பிடி வாதம் பிடிக்காதே ! என் மனசிலே சில 'ஐடியா' விழுந்துடுத்து. அதன்படிதான் கட்டப் போகிறேன். இப்போ நீ முகத்தைச் சுளித்தாலும், பிறகு நான் செய்ததுதான் சரி என்று ஒத்துக் கொள்ளுவாய்.

மஞ்சு (இடைமறித்து): இது பாருங்கோ ! இதிலே ஒளிவு மறைவே வேண்டாம். உங்க

# ஹடாரி!

கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள தங்கனிகாவில் வழங்கும் ஸ்வாஹிலி மொழியில், 'ஹடாரி' என்பதற்கு அபாயம் என்று பொருளாம். ஆனுல் பாரமவுண்ட் பிக்சர்ஸாரின் வெளியீடான, பிரபல தயாரிப்பாளர் டைரக்டர் ஹோவர்டு ஹாக்ஸின் ஹடாரியைப் பார்த்தபோது 'ஹடாரி' என்றால் ஹாஸ்யம், வீர விளையாட்டு என்று அதற்குப் பலபொருள் கொள்ளலாம் என்று தோன்றியது. கதையே இல்லாத ஒரு காட்டுப் படம். சர்க்கஸ் கம்பெனிகளுக்கும் மிருகக் காட்சி சாலைகளுக்கும் ஆப் பிரிக்கக் காட்டு மிருகங்களை உயிருடன் பிடித்து அனுப்புகிறது ஒரு கூட்டம். அவர்களின் அன்றாட வேட்டை வாழ்க்கையே



ஹடாரி. மிருகங்களைப் பிடிப்பதை முதலில் திறமையாகப் படம் பிடித்து விட்டுப் பிறகு அதற்கு ஏற்றபடி ஒரு கதையை உருவாக்கி யிருக்கிருர்கள். இதைவிட அதிகமான காட்டு விலங்குகளைக் கொண்ட கலர்ப் படங்கள் வந்திருக்கின்றன. ஆனுல் ஹடாரியின் ஒரே விசேஷ அம்சம் அற்புதமாகக் காமிராவைக் கையாண்டிருக்கும் முறைதான். காட்டிலும் மேட்டிலும் தாவிப் பாயும் ஜீப்பில் நாமே போவது போல் அத்தனை தத்ரூபமாகக் காட்சிகளைப் படமெடுத்திருக்கிருர்கள். காண்டா மிருக வேட்டை, காட்டெருமை வேட்டை இவ்விரண்டுமே படத்தின் ஜீவநாடி. யானைக் குட்டிக்குப் பாலூட்டும் பிரச்னை, புகைப்படங்கள் பிடிப்பதற்காக வேட்டைக்காரர்களின் கூட்டத்தில் வந்து சேரும் டல்லாஸ் என்ற பெண், ஓடும் ஜீப்பில்

ஐடியா'வை 'டிராயிங் ரூம்', 'பெட் ரூம்' இதோடு வைத்துக் கொள்ளுங்கள். சமையல் அறை, சாமான் அறை, சாப்பாட்டு அறை எல்லாம் என் 'பிளான்'படி நான் போடணும்.

ரகு: ஐயய்யோ! உன் பிளான்படியா? அது எத்தப் பேத்தல் 'பிளான்னு'? இந்தக் கன்று பின்னு ஜோனுக்கெல்லாம் பணம் செலவழிக்க என்னால் முடியாது.

மஞ்சு (மனத்தாங்கலுடன்): ஏன் இப்பொழுது மட்டும் என்ன கொறைஞ்சு போச்சு. என்னமோ பெரிசாகங்க பணத்திலே கட்டறதாக எண்ணமாக்கும். எங்கப்பாகிட்டே விருந்து வீட்டுக்காகப் பத்தாயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டு பத்து நாட்களாகவில்லே. அதற்குள் மறந்துபோச்சு போல் இருக்கு.

ரகு (அதிக கோபத்துடன்): அந்தப் பிச்சைக் காசு பத்தாயிரம் யாருக்கு வேணும்? இது இல்லாமல் என்னால் சமாளிக்க முடியாதென்று பார்த்தாயா? வர வரத் திமிர் அதிகமாகப் போறது.

மஞ்சு: நீங்க சொன்னதுக்குப் பதில் சொன்னேனே தவிர வேறு ஒண்ணும் சொல்லலே. வர வர உங்க போக்கே மாறிப் போச்சு. 'பிளான்......பிளான்'னு பைத்தியம் பிடிச்சு...

ரகு: என்ன சொன்னே! பைத்தியம்னு? நாக்கு நீளம் அதிகமாயிண்டே வர்றதே.....!

மஞ்சு: ராமா! ராமா! (தலையில் அடித்துக் கொள்ளுகிறாள்) பேச்சுக்கு எது சொன்னாலும் அதையே பிடிச்சுண்டுட்றேளே! முழுவதும் நான் சொல்றமாதிரி கட்ட வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறேன்? யோசிக்காமல் என் மேல் கோபப் பட்டால்...... 'பாமா' வீட்டுக்காரரைப் பாருங்கள். அவள் சொன்ன மாதிரியே கட்டி யிருக்கார். வீடு நன்னாயில்லாம போயிடுத்தா?

ரகு (கோபம் அடங்காமல்): ஓஹோ....! அந்த ராமுவைப் போல நானும் 'பெண்டாட்டி தாசனு' இருப்பேன் என்று நினைக்கிறாயா? அது என் ஆயுள் காலத்திலே நடக்காது.

மஞ்சு (ரோஷத்துடன்): நான் பிடித்த முயலுக்கு மூணே காலுன்னு சாதிக்கிறவாகிட்டே பேசி என்ன பிரயோசனம்?

ரகு (உச்ச ஸ்தாயியில்): ஓகோ! உனக்கு அவ்வளவு அலட்சியமா? என்னிடம் பேசவதுகூட இந்த 'ராணி'க்குக் கௌரவக் குறைவாகத் தோணறதா?

மஞ்சு (பதற்றத்துடன்) என்ன! பெரிய பெரிய வார்த்தையாக என்ன வெல்லாமோ நீங்களே சொல்லிக் கொண்டு போகிறீர்களே!

ரகு: போதும், போதும்....நீ ஒண்ணும் எனக்கு உபதேசம்

---

நிற்க முடியாமல் விழுந்து புரளும் விந்தை, ஆப்பிரிக்கச் சுதேசிகள் கதாநாயகிக்குத் தங்களைப் போலவே உடையும் மேக்கப்பும் செய்து கொண்டு வந்து நிறுத்தும்போது அவள் அடையும் தவிப்பு, நம் சிரிப்பு, குரங்குகளைப் பிடிக்கக் கையாளும் ராக்கெட் தந்திரம், கடைசியில் கதாநாயகனுடன் பிணக்குக் கொண்டு ஓடும் கதாநாயகியை யானைக் குட்டிகள் துரத்திப் பிடித்து வளைக்கும் இடம், கதாநாயகி காதலனுடன் மூதலிரவில் தனிமை நாடித் தவிப்புடன் காத்திருக்கும்போது அங்கும் யானைக் குட்டிகள் புகுந்து அவள் அன்பிலே பங்கு பெறுவது ஆகிய காட்சிகள் சிரித்தும், வியந்தும் ரசிக்கும்படியானவை.

இந்தப் படத்தைத் தயாரிப்பதற்குப் பட்ட கஷ்டங்களைக் கேட்டால் திகைத்துப் போவீர்கள். ஹாலிவுட் எங்கே? ஆப்பிரிக்கா எங்கே? படப்பிடிப்புக்கான சகல வசதிகளையும் 42 ஜீப்புக்களில் பொருத்தி ஆப்பிரிக்காவுக்குக் கொண்டு போய் ஹடாரியை உருவாக்கி யிருக்கிறார்கள். படப்பிடிப்பு முடிந்ததும் ஒற்றைஎஞ்சின்பூட்டிய சிறிய விமானம் பிலிமை இருநூறு மைல்களுக்கு அப்பாலுள்ள நைரோபிக்கு உடனே எடுத்துச் செல்ல, அது அங்கிருந்து இங்கிலாந்துக்குக் கொண்டு செல்லப்பட்டது, கழுவுவதற்கு. விமானத்தின் மூலம்தான் படப்பிடிப்பில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உணவு விநியோகம் நடந்திருக்கிறது. ஜீப்பின் ஓட்டம், மிருகங்களின் வேகம் இவைகளை அத்தனை தத்ரூபமாக நாம் பார்ப்பதற்கு 22 காமிராக்கள் ஹடாரி படப்பிடிப்பில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன. காட்டு மிருகங்களைப் பிடிக்கும் திறமையிருந்த, எதையுமே லட்சியம் செய்யாத கதாநாயகனை ஜான் வேன் திறமையாக நடித்திருக்கிறார். அவருக்காகவே ஹாக்ஸ் இந்தச் சாகஸங்கள் நிறைந்த படத்தைத் தயாரிக்க முடிவு செய்தாராம்.







"இந்த வதந்திலைக் கேட்டாயா? நம்ப லீலா அந்தப் பெரிய சினிமா ஸ்டாரைக் கல்யாணம் பண்ணிக்கப் போறதா ஊரெல்லாம் பேசிக்கறு."

"சரி. அது ஒருசமயம் உண்மையா இருந்தால் லீலாவுக்கு விருந்து வைக்கிறேன்... இல்லே பொய்யா இருந்தால் நட்சத்திரத்துக்கு விருந்து வைக்கிறேன்!"

பண்ணவேண்டாம். என் மனசுலே தோணின படி வீட்டைக் கட்டறதுன்னு நான் நிச்சயம் செய்து விட்டேன். கட்டி முடித்தால் இருக்காமல் போயிடப் போறியா, பார்க்கலாம்.

மஞ்சு (துக்கம் தொண்டையை அடைக்க) இருக்காமல் போய் விட்டால்?

ரகு (ஆத்திரத்துடன்): இருக்காமல் எங்கே போவாய்?

மஞ்சு (ஆத்திரத்துடன்): எங்கே போவேன்? செத்துப் போவேன்!

ரகு (ஆக்ரோஷத்துடன்): செத்துப் போவாயா? போ...போ.... இப்பொழுதே போ.... (பாய்ந்து சென்று கன்னத்தில் பளீர் பளீரென்று அறைகிறான்.)

[வீதியில் 'சார் சார்' என்ற சத்தம் கேட்கிறது.]

ரகு (தன்னைச் சமாளித்துக் கொண்டு எரிச்சலுடன்): யார் அது?

குரல்: நான்தான் சார், கப்புணி.

ரகு (தடுமாறியவாறு): ஓ.... வாப்பா, வா! என்ன விஷயம்?

கப்புணி: ஒன்னுமில்லே சார். எல்லாம் இந்த வீட்டு விஷயமாகத்தான்.

ரகு (மகிழ்ச்சியுடன்): என்ன? ஜமீந்தார் இன்றைக்கே பணம் கொடுத்து விடுகிறாரா?

கப்புணி: அவசரப்படறேளே, கேளுங்கோ. (சலிப்புடன்) ஏன் சார். உங்க வீடு இன்னும் கொஞ்சம் அதிகப் பழசாக இருந்திருக்கக் கூடாதா?

ரகு (திகைத்து): என்னப்பா, பெண்டல் பண்ணறயா.......

கப்புணி (அவசரமாக): ஐயய்யோ.... இல்லே சார். எதுக்குச் சொல்ல வந்தேன் என்றால்...அந்த ஜமீன்தார் நம்ப 'கணேசன்' வீடு இதைவிடப் புராதனமாக இருக்கு என்று அதை வாங்கி விட்டார் சார்.

[உள்ளே விம்மல் சத்தம் கேட்கிறது. ரகு தவிப்புடன் கப்புணியைப் பார்க்கிறார்.]

கப்புணி (எழுந்து தணிந்த குரலில்): சந்தர்ப்பம் சரியாயில்லே போல் இருக்கு. அப்போ இன்னொரு சமயம் நான் வரேன்.

ரகு (துடிப்புடன்): மஞ்சு...மஞ்சு...நான் உன்னே அடித்தது எவ்வளவு பிசகுன்னு— உணர்ந்து படற வேதனே....

மஞ்சு: என்ன, நீங்க சொல்றது நிஜமா? நான் படற வேதனையை விடவா...எதிர்த்துப் பேசியே அறியாத நான் எப்படி இவ்விதம் மாறிவிட்டேன் என்று நினைத்தால் என் நெஞ்சே வெடித்துவிடும் போலிருக்கு......

ரகு (கொஞ்சலுடன்): இல்லே, மஞ்சு! உன் மேல் பிசகில்லே. விளையாட்டுக்குக்கூட உன்னிடம் கோபித்துக் கொள்ளாத நான் உன்னே எப்படிக் கைநீட்டி அடித்தேன் என்று நினைத்தால் என் உடம்பெல்லாம் நடுங்குகிறது. அதுவும் உன் பட்டுக் கன்னத்திலே... ஐயோ மஞ்சு! எனக்கு எப்படி இந்த அரக்க குணம் வந்ததுன்னே தெரியலியே....ஆமாம் நீ ஏன் செத்துப் போவேன்னு சொன்னே?....

மஞ்சு (இடைமறித்து): எல்லாம் அந்தச் சனியன்பிடித்த ப்ளானினுல் வந்த கேடு...

ரகு: ஆமாம் மஞ்சு! அது வந்து நம்ம இரண்டுபேர் குணத்தையே அல்லவா மாற்றி விட்டது! சுந்தரம் சொன்னது சரிதான் போலிருக்கிறது.... மஞ்சு! கப்புணி சொன்னது காதுலே விழுந்ததா? இத்துடன் நாம் வீடு கட்டற 'ப்ளானு'க்கு ஒரு முழுக்குத் தான். நான் இப்பவே போய் இந்தச் சனியன் பிடித்த ப்ளானைத் திருப்பிக் கொடுத்துவிட்டு வந்து விடுகிறேன்.... இனி மேல் வீடு கட்டறதைப் பத்திக் கனவில்கூட நினைக்க மாட்டேன். இந்த வீட்டை விற்ற பிறகு கட்டின புது வீடாகவே பார்த்து வாங்கி விடுவோம்.

மஞ்சு: பூஜை அறைன்னு ஒன்னும், சமையல் அறையை ஒட்டின மாதிரி ஸ்டோர் ரூமும் இருக்கிறதாகப் பார்த்து வாங்கிட்டால் போச்சு.


ரகு: ஐயய்ய! அதெல்லாம் பழங்கால மோஸ்தர்னு? சகிக்காது. சமையலறையிலே வரிசையா ஷெல்புகள் போட்டிருந்தால் போறுதா? சாப்பாட்டு அறை ஜன்னலிலேயே ஒரு ஸ்வாமி படத்தை வைச்சு விளக்கேற்றினுல் போச்சு. அதுதான் மாடர்ன்!

மஞ்சு: போதுமே உங்க மாடர்னும் லட்சணமும். தூங்குகிற நேரத்தை விரயமாக்கி நேரமெல்லாம் வெளியே சுத்திண்டிருக்கப் போறேன் நீங்கள். வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்து அவதிப்படப் போவது நான்தானே? என் இஷ்டப்படிதான் வீட்டை வாங்குங்களேன்.

ரகு: ஏய்! வர வர உனக்கு வாய் ரொம்ப ஜாஸ்தியாப் போச்சு. விற்கப் போகிற இந்த வீடு எங்க குடும்பச் சொத்து என்பது நினைவிருக்கட்டும்.

மஞ்சு (உரக்க): ஐயோ நாராயணு! இப்படிப் பிரிச்சுப் பிரிச்சுப் பேசறேளே! நான் என்ன பாவம் பண்ணினேன்!

ரகு (ஆத்திரத்துடன்): எதுக்கு இப்படி நாலு தெருவுக்குக் கேட்கிறபடி புலம்பறே? வாயைத் திறந்தால் கொன்னுடுவேன் கொன்னு!



புத்தம் புது தேயிலை


சுவையுள்ள தேயிலை

சிறந்த தேயிலை

# டாடா-:.பின்லே
## தேயிலை

ஈடில்லாத தேயிலை!

பின்வரும் ஐந்து ரகங்களில் கிடைக்கிறது:
ப்ரெஸ்டிஜ் டார்ஜிலிங்க்
லலித் இலைத் தேயிலை,
மிலாப் இலைத் தேயிலை;
பஹாதுர் தூள் தேயிலை;
ஷான் தூள் தேயிலை;



**டாடா-:.பின்லே** தேயிலை பருகுவீர்;
உன்னதத் தேயிலை இன்பம் எய்துவீர்!



**தொண்டை மற்றும் மார்பு உபாதைகளுக்குக் குணமளிக்கும்**

# பெப்ஸ் வில்லைகளை

**உட்கொண்டால், உங்கள் இருமல் உடனேயே அகலும்.**

பெப்ஸ் வில்லைகளைச் சுவைத்து, குணமளிக்கும் ஆவி போன்ற அதன் சத்து வேதனையைக் குறைக்கவும், தொண்டைப் புண், ப்ராங்கைடிஸ், இருமல் மற்றும் ஜலதோஷத்திற்கும் காரணமான கிருமிகளைக் கொல்ல உதவியளிப்பதற்கான வேலையைச் செய்வதை உணருங்கள். உடனடி நிவாரணமளிக்கவும் கிருமிகளை அகற்றவும் பெப்ஸ் உதவிபுரிகிறது




**பிராங்கைடிஸ், தொண்டைப்புண், மண்டைநீர், அடைப்பு, ஜலதோஷம் மற்றும் இருமலுக்கு உடனேயே நிவாரண மளிக்கிறது.**

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்

PPT-55-TAM

சென்னை ராஜ்ய டிஸ்ட்ரிப்யூட்டர்கள்:
மெஸர்ஸ் மோதி அண்டு கம்பெனி, சென்னை-1
தபால் பெட்டி 1902

# மூல நோயை

முற்றவிடாமல்
நம்பிக்கையான

# ஹெடன்ஸா

உபயோகித்து
நிவாரணம் அடையுங்கள்
—ரண சிகிச்சையையும்
தடுங்கள்

**பொறுக்க முடியாத வலியா? தாங்க முடியா அரிப்பா? எரிச்சலெடுக்கும் உணர்ச்சியா? ரத்தக் கசிவா? உடனடியாக சிகிச்சை செய்யத் தாமதியாதீர்கள்! அலட்சியம் செய்தால், நோய் முற்றி ரணசிகிச்சை செய்ய வேண்டிவரும். 108 தேசங்களிலுள்ள டாக்டர்களால் சிபாரிசு செய்யப்பட்ட நம்பிக்கையான ஜெர்மன் மூலநோய் களிம்பு ஹெடன்ஸா உபயோகித்து இப்பொழுதே நிவாரணம் பெறுங்கள்! ஹெடன்ஸா வலியையும் அரிப்பையும் சீக்கிரம் நிறுத்தி, மலப் பிரவிருத்தியைச் சுலபமாக கஷ்டமில்லாமல் செய்கிறது. முக்கியமாக, ஹெடன்ஸாவிலுள்ள சக்திவாய்ந்த மருந்துப் பொருள்கள் நீடித்த நிவாரணமளிப்பதோடு, வெடிப்புகளைச் சுருங்கச் செய்து, ஆரோக்கியமான தசைகளை வளர்க்கிறது. மூலநோய்க்கு காலாகாலத்தில் ஹெடன்ஸா உபயோகித்தால் பிற்காலத்தில் ரணசிகிச்சை செய்யவேண்டிய நிலை ஏற்படாது என்பது ஞாபகமிருக்கட்டும்.**

**ஹெடன்ஸாவில் உணர்வழிக்கும் மருந்துகள் ஒன்றும் கிடையாது.**


ஒரிஜினல் ஜெர்மன் முறைப்படி
இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

## தி டாலர் கம்பெனி

337, தம்பு செட்டி தெரு
சென்னை-1

பிரபல மருந்து வியாபாரிகளிடம்
கிடைக்கும்.

93-DOL-3 A TM




'மனிதர்களை லட்சக்கணக்கில் அழிக்கக் கூடிய அணுகுண்டுகளையும், ராக்கெட்டுகளையும் தாங்கள் தயாரித்து விட்டிருப்பதைப் பற்றி விஞ்ஞானிகள் பெருமையடித்துக்கொள்கிறார்கள். இதே சம்ஹார கைங்கரியத்தைச் செய்து வரும் சின்னஞ் சிறு நோய்க் கிருமிகள் தங்கள் திறமையைப் பற்றித் தம்பட்டம் அடித்துக் கொள்வதில்லை!

—ஒரு நவீன வேதாந்தி

ஃ ஃ ஃ

அமெரிக்க ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஸ்ரீ ஜான்ஸன் தாம் தோல்வி அடைய முயன்றிருந்தாலும் பலித்திருக்காது. ஏனென்றால், அவரது ஜாதகத்தில் உள்ள கிரகங்களின் படி அவர் வெற்றி பெறுவதைத் தவிர வேறு வழியில்லை. இந்தத் தகவலை டில்லி பிர்லா கோவிலின் தலைவரான ஸ்ரீ கோஸ்வாமி கிரிதரலால் சாஸ்திரி முன்கூட்டியே தெரிவித்துவிட்டதாக அமெரிக்க 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை கூறுகிறது. அத்துடன் ஸ்வாமிஜி இன்னொரு விஷயமும் தெரிவித்தாராம்.

''ஸ்ரீ ஜான்ஸன் பூர்வ ஜன்மத்தில் ஒரு ஹிந்து சந்நியாசியாயிருந்தார். அவர் கங்கைக் கரையில் தாம் செய்த பாவங்கள் போவதற்காகத் தவம் செய்து கொண்டிருந்தார்.''

ஸ்ரீ ஜான்ஸன் ருசிகரமான தமது இந்தப் பூர்வ ஜன்ம வரலாற்றைப் பற்றி எப்படிக் கற்பனை செய்து பார்த்துக் கொண்டிருப்பாரோ தெரியவில்லை. ஆனால் அமெரிக்கப் படாதிபதிகள் 'கங்கைக் கரையில் அமெரிக்க ரிஷி' என்று ஒரு கதை எழுதித் தயாராக வைத்துக் கொண்டிருப்பார்கள். ஸ்ரீ ஜான்ஸன் தேர்தலில் தோல்வியுற்றாலும் அவரை அதில் கதாநாயகனாக நடிப்பதற்காகக் கூப்பிட்டுப் பத்து லட்சம் டாலர்கள் 'வெள்ளை'ப் பணம் கொடுப்பதாகச்சொல்லியிருப்பார்கள். ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்றவர்களை சினிமாவில் நடிக்க அழைப்பது அமெரிக்கப் படாதிபதிகளின் வழக்கமல்லவா?

ஃ ஃ ஃ

பூர்வ ஜன்ம வரலாறு விவரங்களைக் கூற வேண்டிய அத்தியாவசியமும் நெருக்கடியும் இப்போது ஏற்பட்டு விட்டிருக்கின்றன. நாம் சென்ற சில வருஷங்களாக சினிமா நட்சத்திரங்களைப் பற்றிய எல்லா விவரங்களையும் தெரிந்து கொண்டு விட்டோம். அவர்களது பெற்றோர்கள் காதலித்துக் கொண்டதுமுதல் இன்று 19—11—64ந் தேதி காலை எட்டு மணி வரைக்கும் அவர்களைப் பற்றிய தகவல்களை யெல்லாம் நாமறிவோம். அவர்களது உணவு, உடை, விருப்பம் ஆகியவற்றைக் கண்டுபிடித்துப் பத்திரிகைகளில் வெளியிடுகிறார்கள்.

நட்சத்திரங்களைப் பற்றிய ஜன்மத் தகவல்கள் அநேகமாகத் தீர்ந்து போய்விட்டிருக்க வேண்டும். ஆகவே, நமது தேசத்தின் வருங்காலப் பிரஜைகளான இளைஞர்கள், பெண்மணிகளின் நலனைக் கருதி நட்சத்திரங்களின் பூர்வ ஜன்ம விவரங்களை வெளியிடுவதைத் தவிர வேறு வழியில்லை! அப்படி ஜோசியம் சொல்ல முற்பட்டால் விவரங்கள் மிக மிக ருசிகரமானதாகவும் வேடிக்கையானதாகவும் சொல்ல முடியும். ஒரு நட்சத்திரம் சென்ற பிறவியில் ஒரு குரங்காட்டியாகவோ தவளையாகவோ இருந்ததாகக் கூறலாம். இப்படிப்பட்ட திடுக்கிடும் விவரங்கள் சினிமா ரசிகர்களைத் திகைக்க வைக்காமலிருக்குமா?

ஃ ஃ ஃ

கால நிலை இலாகா தலைவர், தமது உதவி அதிகாரியிடம் சொன்னார்:

''இன்று மாலை கடும் மழை பெய்யப் போகிறது என்று பத்திரிகைகளுக்குத் தெரிவித்து விடுங்கள்.''

உ. அதிகாரி: ...படி, அவ்வளவு நிச்சயமாகச் சொல்கிறீர்களா...?

தலைவர்: நான் இன்று திறந்த வெளி நாடக அரங்கில் நடக்கும் நாடகம் பார்க்க டிக்கட் வாங்கி யிருக்கிறேன். என் மகன் கடற்கரைக்குச் சென்றிருக்கிறான். வீட்டில் என் மனைவி மைதாமா அப்பளம் இட்டுக் கொண்டிருக்கிறாள்!

ஃ ஃ ஃ


வெறிச்சோடிய நிலங்கள்
திடீரென்று ஒளிர்ந்தன
மேலே பீரங்கிகள் முழங்கின
புற்கள் முன்னிட்டெழுந்தன
பின்னரோ காரிருள் நிலவியது

கவிஞன் பிறக்கிறான், கவிதை பிறக்கிறது என்பார்கள். இந்த இரண்டு சம்பவங்களும் முறையே தாயின் வயிற்றிலும், கவிஞன் மூளையிலும் நிகழ்பவை. ஆனால் இப்போது ஓர் இயந்திரமே கவிஞனாக மாறிவிட்டிருக்கிறது ஆச்சரியமில்லையா?


பிளோரிடா சர்வகலாசாலையைச் சேர்ந்த 18 வயதுள்ள ரிச்சர்ட் ரேகன் என்ற மாணவன், 'இயந்திர மூளை' எனப்படும் மின் அணு இயந்திரமொன்றில் சில வார்த்தைகளையும் சொற்றொடர்களையும் தனித் தனியே எழுதிச் சேர்த்தான். பிறகு இயந்திரத்தை முடுக்கிவிட்டபோது அதனின்றும் மேற்கூறிய வசன கவிதை வெளிப்பட்டதாம்.

இதைப் பற்றி நான் அதிகம் ஆச்சரியப்படவில்லை. ஏனென்றால் ஒரு முறை நான் எழுதிய சில வாக்கியங்களடங்கிய ஒரு பாரா தானாகவே வசன கவிதையாக மாறிக்கொண்டு விட்டது. ஒன்றுமில்லை, அச்சுக் கோப்பவர் அந்தப் பாரா அச்சுக் கோக்கப்பட்டிருந்ததை எடுத்து அப்பால் வைக்கும்போது அது கலைந்து விட்டது. பிறகு அவர் தமது கை விரல்கள் போனபடி வார்த்தைகளை அடுக்கி வைத்திருந்தார். வசன கவிதை பிறந்திருந்தது!

— என். ஆர்.


ராஜயோகம்
10
தாங்கள் இவளை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தபோது இவள் அப்படி மயக்கமாகப் படுத்து விட்டாளே! தாங்களுக்கு ஹிப்னாடிசம், மெஸ்மரிஸம் முதலியன...
சிகிச்சை செய்ய தெரிந்திருக்க வேண்டும் ... பட்டங்கள் மட்டும் ... டாக்டர் அல்ல...
தேவகி! இந்தப் பெண்ணைச் சாதாரண சோதனை அறைக்கு அழைத்துக்கொண்டு போ! நான் இதோ வந்து விடுகிறேன்!
அவளைப் பற்றிய இந்த ... சம்பந்தப்பட்ட ... மட்டும் சொல்லுங்க...
அவள் நன்றாகப் படித் ... இரண்டு மாதத்திற்கு ... ஒரு நாள் அவள் ... ஓரமாகச் செல்லும் ... இருந்தபோது ஒரு ... டத்தின் மூன்றாவது ... யிலிருந்து யாரோ ஒரு ... பெரிய புத்தகத்தைக் ... போட்டுவிட்டார்கள் ... அவள் தலையில் மோதி ... விழுந்தது.
மீராபாய் தொடர்ந்து சொல்கிறாள்:
அதை எடுத்துக்கொண்டுவந்து படித்தாள். அது ஒரு புராண புத்தகம். அனசூயை மும்மூர்த்திகளையும் குழந்தைகளாக மாற்றின கதையைப் படித்தாள். உடனே போய் ... குழந்தைப் பொம்மையை வாங்கிக்கொண்டு வந்து தாலாட்டினாள். அன்றிலிருந்துதான் ஒரு ரிஷி பத்தினி என்று நினைத்துக்கொண்டிருக்கிறாள். மற்ற விஷயங்களில் எல்லோரையும் போலிருக்கிறாள். இன்னும் கல்யாணமாகவில்லை.
நீங்கள் சொல்வதிலிருந்து இது மனோ நோய் அல்ல என்று தெரிகிறது. எதற்கும் சோதனை செய்துவிட்டு வந்து சொல்கிறேன். தாங்கள் அடுத்த அறையில் உட்கார்ந்துகொண்டிருங்கள்.
நான் உள்ளே வரக் கூடாது என்கிறீர்களாக்கும்!


இந்தாருங்கள். ஆயிரம் ரூபாய்க் குச் செக்!
போகம் தொடர்ந்து சொல்கிறாள்:
தேவகி என்கிற நர்ஸ்தான் அன்று வந்தவள். அவள் என்னைச் சந்தேகித்தே பார்த்தாள். ஆனால் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. டாக்டர் என்னை வாய்மொழிப் பரீட்சையில் கேள்விகள் கேட்பது போல் கேட்டார். அநேகமாகச் சரியாகச் சொன்னேன். சிலவற்றுக்கு மட்டும் திறமையாகப் பதிலளித்தேன்.
நீ எனக்குச் சொல்ல வேண்டுமே? அவசியமானால் நீயும் ஒரு கவர்னர் மனைவியாய் இங்கே வந்துசேர். கவலைப்படாதே. போய் வா!


அன்று இரவு
சினிமா நட்சத்திரத்தைக் கல்யாணம் செய்துகொள்ள என் சம்மதமா வேண்டும்? நான் எழுதியா கொடுக்கணும்; ஒரு நாளும் மாட்டேன், மாட்டேன்.
ராணி மங்கம்மாள் என் இந்த அடையாளம் கண்டு கொள்ளவில்லையே?
ரகசியத்தை வெளியிட போவதில்லை. எனக்கு மேல்பதவி கொடுக்கவில்லையே?
எனக்குக் காலேஜில் இடமில்லை என்றீர்கள். அதற்காக நான் படித்துக் கிழிக்காமலிருந்து விடுவேனா? இதோ கிழிக்கிறேன்.
ஆ!

* ஜான்ஸன் அண்டு ஜான்ஸன்

# குழந்தைகள் ஃபோட்டோ போட்டி

# முடிவுகள்



முதற் பரிசு

முதற் பரிசைப் பெறுபவர் இந்த அழகிய ஃபோட்டோவை அனுப்பிய ஸ்ரீமதி. ரோஷ்னி என். டாங்காரிவாலா, அஸ்ஸாம். இந்தியாவிலுள்ள ஒரு ஹில் ஸ்டேஷனுக்கு இரண்டு முழு மற்றும் இரண்டு அரை விமான டிக்கட்டுகளும், கைச்செலவுக்காக ரூ. 500ம் இவர் பெறுகிருர்.

## இரண்டாவது பரிசுகள்—

வனப்பு மிக்க நர்ஸரி பெட்களைப் பெறுபவர்கள்:

ஸ்ரீமதி. டான் க்ரேகரி, கல்கத்தா
ஸ்ரீமதி. புஷ்பா கே. லிங்கு, பம்பாய்
ஸ்ரீமதி. அபர்ணு பானர்ஜி, ரேணுக்கஞ்ச்
ஸ்ரீ. ஏ.வி. பாஷ்யம், பம்பாய்
ஸ்ரீமதி. ராஜ் ஹரி ஜவஹிரி, பம்பாய்

## மூன்ருவது பரிசுகள்—

கவர்ச்சியான ,விசாலமான ஃபோல்டிங் பெராம்புலேட்டர்களைப் பெறுபவர்கள்:

டாக்டர். எஸ்.ஜே. வைத்யா, பம்பாய்
ஸ்ரீ. ரிச்சர்டு நீல்ரே, கல்கத்தா
ஸ்ரீ. யூஸுப் எ.ப். போட்டியா, பம்பாய்
ஸ்ரீ. பரகாஷ்நாத், புதுடில்லி
ஸ்ரீ. வி. ராமராவ், ராஜமஹேந்திரபுரம்

## பரிவுப்பரிசுகள்—

உயர் ரக ஸ்டீல் இஸ்திரிப் பெட்டிகளைப் பெறுபவர்கள்:

ஸ்ரீமதி. ஸுப்ரா பர்பாரா, ஷில்லாங்
ஸ்ரீ. பூபீந்தர் ஸிங் தில்லன், புதுடில்லி
ஸ்ரீமதி. ஷிரீஸீ மாக்ஸ்வெல் ரீட்மன், பம்பாய்
ஸ்ரீமதி. அன்ணு கிருஷ்ணன், பெங்களூர்
ஸ்ரீ. ஜெய் பால் ஸிங், புதுடில்லி




இதில் பரிசு பெற்றவர்களுக்குத் தங்கள் பாராட்டு தல்களையும், கலந்து கொண்டவர்களுக்கு நன்றியையும் ஜான்ஸன் அண்டு ஜான்ஸன் ஸ்தாபனத்தார் தெரிவித்துக் கொள்ளுகிறர்கள். உங்களுடைய செல்லக் குழந்தைகளின் வசீகரமான படங்களை அனுப்பி, நீங்கள் அளித்த உற்சாகமான ஒத்துழைப்பினுல்தான் இந்தப் போட்டி இவ்வளவு வெற்றிகரமாக நடந்தேறியது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து கிடைத்த கற்பனை வளமும் தனித்தன்மையும் செறிந்த, பல்லாயிரக்கணக்கான ஃபோட்டோக்களை பரிசீலிப்பது மிக சுவாரசியமாகத்தான் இருந்தது: ஆனல் பரிசுக்குரியவைகளைத் தேர்ந்தெடுப்பது சிரமமாக இருந்தது என்பதை ஒப்புக்கொள்கிறோம்!

**ஜான்ஸன் அண்டு ஜான்ஸன்**
ஆஃப் இந்தியா லிமிடெட்
30, ஃபோர்ஜெட் ஸ்ட்ரீட், பம்பாய்-26

JJ 3004

* டிரேட் மார்க்



உங்கள் கூந்தலின் உண்மை
அழகை வெளிப்படுத்த
கால்கேட்
பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்
உபயோகியுங்கள்
உங்களுக்குப் பிடித்தமான
கூந்தல் அலங்கரிப்பு
எதுவாயினும், கால்கேட்
காஸ்டர் ஹேர் ஆயிலைத்
தவறாமல் தேய்த்து வருவது
கூந்தல் அடர்த்தியாக
அழகுடன் வளர்வதற்கு
இன்றியமையாதது!
தினந்தோறும் கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயிலை மயிர்க்கால்களிலும், கேசத்திலும் தேய்த்துக்கொள்வது லக்ஷக்கணக்கான குடும்பங்களில் இப்பொழுது குளிக்குமுன் செய்யும் அவசியமான பழக்கமாகி விட்டது. இவ்வெளிய பழக்கத்தினால் உங்கள் கூந்தல் அடர்த்தியாக நீண்டு பளபளப்புடன் வளருவதுடன், இளமைத் துடிப்பின் காந்தியோடும் அற்புத ஜ்வலிப்போடும் விளங்குவதைக்கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள்.
COLGATE
HAIR OIL
கால்கேட்
பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்
இப்பொழுது
கால்கேட் பெர்பியூம்டு
கோகோனட் ஹேர் ஆயில்
உங்கள் கூந்தலுக்கு அழகும் நறுமணமும் சேர்க்க

# பேளரும் விஞ்ஞானம்

நம் நாட்டில் நடப்பது என்பது சர்வ சாரண விஷயம். இன்னும் நம் கிராமப் புறங்களில் பத்து மைல், பதினைந்து மைல் தூரமுள்ள இடங்களுக்கு நடந்தே போய் வருகின்றனர். நமது மக்கள் சுவனத்தையும் சுதாபத்தையும் பெற வேண்டுமானால் நடைதான் சிறந்த வழி. அந்நாட்களில் உப்பு சத்தியாக்கிரகத்துக்காகக் காந்தி மகான் தண்டியை நோக்கியும் ராஜாஜி வேதாரண்யத்தை நோக்கியும் காலால் நடந்தே சென்றனர். இன்றும் வினோபாஜி அதே நிலையைப் பின்பற்றிப் பாத யாத்திரை செய்து வருகிறார்.

மோட்டார்களும், ஆகாய விமானங்களும் ஏற்பட்டுவிட்ட மேநாட்டில் இந்தக் காலத்தில் யாராகிலும் நடப்பதைப் பற்றிப் பேச முடியுமோ? அதிலும் சாதாரணத் தொழிலாளி, தனது தொழிற் கூடத்துக்குக் காரில் போய் இறங்கி வேலைக்குப் போவானும்! அத்தகைய சூழ்நிலை நிலவுகையில் நடைப்பயணத்துக்குப் புது மவுசு ஏற்பட்டிருக்கிறது என்றால் விந்தையாக இல்லையா?

இந்த விந்தையை உண்டாக்கியது விஞ்ஞானம்தான்.

மோட்டாரிலேயே பிரயாணம் செய்வதால் தீருதய சம்பந்தமான வியாதிகள் ஏற்படுவதாக டாக்டர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். மேற்கு ஜெர்மனியில் ஏற்படும் மரணங்களில் 48 சதவிகிதம் உடல் பயிற்சி இல்லாத காரணத்தால் ஏற்படுகின்றன. உடற்பயிற்சி செய்வதற்கு நேரமிருந்தும் கூட அதைச் செய்வதற்கு இந்தக் காலத்து மக்களுக்கு நாட்டம் இருப்பதில்லை. இதைக் கருதியே ஜெர்மன்ஒலிம்பிக் சொசைட்டியின் தலைவர் ஜார்ஜ் வான் ஓவெல் புதுத் திட்டம் ஒன்று வகுத்திருக்கிறார். அதாவது ஒரு வருடத்தில் 300 மணி நேரம் நடந்தவர்களுக்குத் தங்கத்தினால் ஆன ஒரு சிறு பாதுகை பரிசாகத் தரப்படுமாம். 200 மணி நேரம் நடந்தவர்களுக்கு வெள்ளியால் ஆன சிறு பாதுகையும், 100 மணி நேரம் நடந்தவர்களுக்கு வெண்கலத்தினால் செய்த சிறு பாதுகையும் பரிசளிக்கத் திட்டம் வகுத்தார். இதுவரையில் இத் திட்டத்தில் தீவிரப் பங்கு கொண்டு சுமார் பதினாயிரம் பேர்கள் வெண்கலப் பாதுகைகளைப் பரிசாகப் பெற்றிருக்கின்றனராம். பிராங்க்பர்ட்டில் ஒரு மாது 206 மணி நேரம் நடந்து வெள்ளிப் பாதுகைப் பரிசு பெற்றிருக்கிறாளாம்!

இங்கு நாம் நடையுகத்தை விட்டு சைக்கிள் யுகத்துக்கு வந்திருக்கிறோம். இன்னும் மோட்டார் கார் யுகத்துக்கும் ஆகாய விமான யுகத்துக்கும் போக வேண்டும் என்று பேசுவது வேடிக்கையாக இல்லையா?

* * *

அமெரிக்காவில் விஸ்கோன்ஸன் பல்கலைக் கழகத்தில் இரத்த சம்பந்தமாக நடைபெற்ற ஆராய்ச்சியில் ஒரு புது விஷயத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதாவது இரத்தம் மூளைப் பகுதியை விட்டு வெளியேறும்போதும் குடற் பகுதியை விட்டு வெளியேறும்போதும் அதன் உஷ்ணம் மிக அதிகமாக இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். மூளையில் தேய்ந்துபோகும் செல்களுக்குப் பதில் புது செல்கள் தயாரிக்கப்படுகின்றன. குடலில் நாம் உட்கொள்ளும் உணவு சக்தியாக மாற்றப்படுகிறது. இவ்விரண்டு காரியங்களையும் செய்வதும் இரத்தம். அதிகமாக வேலை செய்யும் இயந்திரங்கள் அதிகச் சூடாகி விடுவது போல் அதிகமாக வேலை இவ்விடங்களில் செய்யும் இரத்தமும் அதிகச் சூடாகிவிடுகிறது. ஆக மனித இரத்தத்துக்கும் இயந்திரத்தின் பண்பிருக்கிறது என்று வைக்க வேண்டியிருக்கிறது.

* * *

நாம் ஆஸ்பத்திரிகளில் கால் நடக்க முடியாமலிருக்கும் நோயாளிகளைத் தள்ளு வண்டியில் அமர்த்தி நர்ஸுகள் இங்குமங்குமாக அழைத்துச் செல்வதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் மேற்கு ஜெர்மனியில் புது வகையான இயந்திர வண்டியைத் தயாரித்திருக்கிறார்கள். இதில் உட்கார்ந்து படிகள் ஏறி மாடிக்குக்கூடப் போக முடியுமாம்!

இந்தப் புதுவகை வண்டிகளின் சக்கரங்களில் பற்கள் அமைந்திருப்பதால் அவை



படியைக் கவ்விப் பிடித்து ஏறவும் இறங்கவும் உதவுகின்றன. இந்த வண்டியைப் பயன்படுத்தி நோயாளிகள் தங்கள் அறைகளிலிருந்து படிகளின் வழியாக இறங்கிச் சாப்பாட்டு அறைக்கோ அல்லது ஆஸ்பத்திரிப் பூங்காவுக்கோ சென்று திரும்பலாம். மின்சார மோட்டார் மூலம் இந்த வண்டி இயங்குகிறது.

## 17. வன்மம் வளர்ந்தது!

இயற்கையின் ஒவ்வொரு சிறு அசைவிலும் அழகைக் கண்டு ஆனந்திப்பவன் கல்லாகிப் போய் உட்கார்ந்திருந்தான், அந்த நீரூற்றின் கரையிலே. உடலும் உணர்வும் உள்ளமுமே உறைந்துபோனதொரு நிலை. சலசலத்து ஓடும் துங்கபத்திரை அவனது துவண்ட கால்களைத் தொட்டுக் கிசுகிசுத்தபோது கூட அவனது நிலையில் மாற்றம் ஏற்படவில்லை.

வேங்கடாத்திரியின் உள்ளம் அப்படி வேதனையினால் நொந்து போயிருந்தது. ஆயிஷாவின் நினைவிலே, அவளைக் காதலித்த கனவிலே ஏற்பட்டதொரு கலக்கம். அவனால் அதைத் தாங்கவே முடியவில்லை. எண்ண எண்ண இரிவு கண்ட ரணமாக வலித்தது இதயம். வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் அந்த வாச மலர்ப் பூங்கா வெள்ளை மணல் பாலைவனமாகக் காட்சியளித்தது வேங்கடாத்திரிக்கு. பசுஞ்சோலைப் பறவைகளின் இன்னிசைக் கீதங்கள் நாராசமாக ஒலித்தன அவன் காதுகளுக்கு. எதையுமே, எதிலுமே வெறுப்படைந்தான். இதயத்தைப் பிழிந்தெடுக்கும் ஏமாற்றத்தின் தாக்குதலால் நிலைகுலைந்த வேங்கடாத்திரி அப்படியே புல் தரையில் மல்லாந்து விழுந்தான். எதையுமே பார்க்க விரும்பாதவனைப் போல் அவனது இமைகள் மூடிக் கிடந்தன. விழித்துக் கொண்டிருந்த இதயமோ விம்மி விம்மி அழுது கொண்டிருந்தது. மனத் திரையிலே எண்ணங்களின் எழிலுருவாக ஆயிஷா அற்புத அழகோடு ஆயிரம் கோலங்களில், கோணங்களில் குதி போட்டுக் கொண்டிருந்தாள். குலுங்கச் சிரித்தாள். கும்மாளியிட்டு நின்றாள். குறும்பாக, ஒயிலாக, ஒய்யாரமாக, இன்பமாக இன்னும் எப்படி யெப்படி யெல்லாமோ தோன்றி மேலாகிரி கொள்ளச் செய்தான்.

'ஆயிஷா, ஆயிஷா' என்று அரற்றலானான் அரவீட்டு இளவல். திடீரென்று மின்னலைப் போன்ற ஓர் ஒளி தோன்றி அவன் உடம்பைக் குலுக்கி எடுத்தது: மோகனமாகச் சிரித்த சோகமே உருவாகி நின்றாள். காதல் மொழி பேச வேண்டிய விழிகள் கண்ணீரை வழிவிட்டுக் கொண்டிருந்தன. 'அன்பரே!' என்றாள் ஆயிஷா. அடிபட்ட மிருகமாக உடலைச் சிலிர்த்துக் கொண்ட வேங்கடாத்திரி வெறிகொண்டவனாக, 'கண்ணே, கற்கண்டே காதல் கனியமுதே!' என்று கத்தினான். அவள் கண்ணீர் பெருகியது. கைகளைக் கூப்பியபடி அவன் காலடியில் விழுந்தாள். 'அன்பரே, அன்பரே' என்றே அடுத்தடுத்துக் கூறி அரற்றலானாள். வேங்கடாத்திரியோ வீம்புடன் அவளைக் 'கண்ணே, காதலியே' என்றழைத்தே கத்திக் கொண்டிருந்தான். மெல்ல மெல்ல அவன் வெறிக் குரல் மெலிந்து தேய்வாயிற்று. அவன் குரல் மேலோங்



# பாமினிப் பாவை

கௌசிகன்

கலாயிற்று. ஆயிஷாவின் உருக்கமான
ஊடுகோள் அவனே வெற்றி கொண்டது:
நிலைய அடக்கியது. விழிகளைத் திறந்
ர வேங்கடாத்திரி. ஒரு நீண்ட பெரு
சிலும் ஆசையை எரித்து அழித்துவிட்டுப்
ப மனிதனாக எழுந்து உட்கார்ந்தான்.
லாம் கனவு. நடந்து முடிந்து போன
ரு நாடகத்தின் நினைவுதான்!
உடலுறவில்தான் இன்பமா? உள்ளத்
ரடு ஒட்டி நிற்கும் உறவு முறையில்
தவிட நிரந்தரமான, நித்தியமான இன்
ளதைக் காண முடியாதா? என்று
க்குத் தானே கூறிக் கொண்டான்,
ஆசையை நிஷ்களங்கமான உள்ளத்
ன் ஏற்க முயன்ற வேங்கடாத்திரி.
போது அவன் உள்ளம் சலனமற்
ந்தது. களங்கம் நிறைந்த காட்
ற்று வெள்ளமான காதல் வெறி
றைந்து சலசலத்தோடும் தெள்ளத்
ளிந்த நீரோடை போன்ற சகோதர
சம் மேலோங்கி நின்றது. புனித
ன இந்த மாறுபட்ட நினைவிலும்
டலிலும் உள்ளத்திலும் புதிய தெம்பே
ற்பட்டிருந்தது.

'அன்று ஆயிஷாவைத் தம் அருமை
களாக வரித்துக் கொண்டார். நான்
றும் ஆயிஷாவை அரு
மச் சகோதரியாக ஏற்
க் கொள்ளுவேன்!
ன்பே, ஆயிஷா! வேங்
டாத்திரி இந்த வினாடி
தல் உன் அன்புச்
கோதரன்' என்று கூறிக்
ாலடியிலே ஓடும் துங்க
த்திரையாற்றின் புனித
ான நீரை அள்ளிக்
ண்களைத் துடைத்துக்
கொண்டு எழுந்த அவன்
டல் சிலிர்த்தது. துங்க
த்திரை சிரித்துக்
கொண்டாள். தளர்ந்து
தள்ளாடி வந்து தன்
ரையில் விழுந்தவனே
உறுதி பெற்ற உள்ளத்
தவனாக எழுப்பி நிமிர்ந்து
தீரனமாக அடி
யெடுத்து வைத்து நடந்து
போகச் செய்த தன் பெருமையை எண்ணி
அந்த நதிப் பெண் அப்படிச் சிரித்தாளோ?

ஆயிஷாவை வேங்கடாத்திரி—தன் சகோ
தரியாக ஏற்ற அதே சமயத்தில் அரண்மனை
யின் வேறோரிடத்தில் விபரீதம் நிகழ்ந்து
கொண்டிருந்தது.

விஜயநகர சாம்ராஜ்யத்தின் மன்னர்
என்ற பெருமைக்குரிய பொம்மை, பெண்கள்
புடை சூழத் திண்டிலே சாய்ந்து கிடந்தது.
கீர்த்தி வாய்ந்த கிருஷ்ண தேவராயரின்
வமிசத்தில் வந்த
பெருமையைத்
தவிர வேறு எவ்
விதமான தகுதியும்
கிடையாது, மன்
னர் சதாசிவ ராய
ருக்கு. நாட்டின்
ஆட்சியும் அதிகார
மும் அளவிட்டுச்
சகோதரர்களின்
கையில்தான் இருந்
தன. மதுவையும்
மங்கையர் களையும்
அநுபவித்தபடி



அரண்மனைக்குள்ளே அடைபட்டுக் கிடந்தார் அரசர். அதிலும் கூட அவருக்குச் சில தாபங்களிருந்தன. தமது இச்சைக்குகந்த பச்சைக் கிளியான அடிமைப் பெண் ஆயிஷாவை வேண்டுமென்றே தம்பியிடமிருந்து அப்புறப்படுத்தியதனும் தம்மை அவமானப்படுத்தி விட்டதாக ஆத்திரப்பட்டார். ஆர்ப்பாட்டங்கள் செய்தார். ஆனால் பலன் எதும் ஏற்படவில்லை.

இந்த நிலையில் அண்ணு தன்னை ஒதுக்கி உதாசீனப்படுத்திச் செயல் புரிகிறார் என்று வேற்றுமையை வளர்த்துக் கொண்டு வன்மம் பாராட்டிய திருமலை பதவியைக் கைப்பற்றும் வழி வகைகளைப் பற்றிச் சிந்தித்த வனுகச் சதாசிவராயருடன் சதியாலோசனை புரிய வந்தான். மதுவின் மயக்கத்திலிருந்தாலும் மன்னர் நிதானமிழக்கவில்லை. வந்தவரைப் புரிந்து கொண்டார்.

''வாரும், மதிமந்திரியாரே! மகாமண்டலேசுவரரின் இடது கையாக விளங்கும் தாங்கள் என்னைத் தேடி வந்திருப்பது ஆச்சரியமாக இருக்கிறதே'' என்று கூறிச் சரிந்து கிடந்தவர் நிமிர்ந்து சரியாக உட்கார்ந்து கொண்டார்.

''என்ன அப்படிச் சொல்லி விட்டீர்கள்? விஜயநகர சாம்ராஜ்யத்தின் மன்னரான தங்களுக்கில்லாத மகிமையா மகா மண்டலேசுவரருக்கு?'' மனமறிந்த பொய்யைச் சொல்லிக் கொண்டே மன்னரின் அருகில் போய் அமர்ந்து கொண்டான் திருமலை.

சதாசிவ ராயர் கடகடவென்று சிரித்தார். ''ஆலயங்களில் உள்ள விக்கிரகங்களுக்கு அலங்காரம் செய்து விழாக் காலங்களில் வெளியே எடுத்துச் செல்கிறார்களே பகட்டாக; அதைப் போலத்தான் விஜயநகர சாம்ராஜ்யத்தின் மன்னரும் அலங்காரம் செய்து கொண்டு பட்டத்து யானை மீது பவனி வருகிறார் பகட்டாக. மானியங்கள் வழங்கும் பட்டயங்களில் கையெழுத்திடுகிறார் — மன்னரும் இருக்கிறார் என்று மக்களுக்குக் காட்டுவதற்காக. ஆனால் சாம்ராஜ்யத்தை ஆட்டிப் படைக்கும் ஆட்சிப் பொறுப்பும் அதிகாரமும் அரவீட்டுச் சகோதரர்களான உங்கள் கையில்தானே?''

'''உங்கள்' என்று என்னையும் சேர்த்துச் சொல்லாதீர்கள் அரசே! தங்கள் நிலையில் தான் நானும் இருக்கிறேன். சற்று முன் கூறினீர்களே மகா மண்டலேசுவரரின் இடது [illegible] என்று, அது விளையாட்டாகச் சொன்னதோ அல்லது உண்மையை உணர்ந்துதான் அப்படிக் கூறினீர்களோ தெரியாது. இடக்கையின் இடத்தைத்தான் ராமராயர் எனக்களித்திருக்கிறார். வலக் கையின் பெருமையை வேங்கடாத்திரி பெற்றிருக்கிறான். இந்தச் சாம்ராஜ்யத்தில் தாங்கள் பெயருக்கு மன்னர். நான் பதவிக்கு மந்திரி. அவ்வளவுதான்'' என்று நீண்டதோர் ஏக்கப் பெருமூச்சை இழுத்து விட்டான் திருமலை எங்கோ பார்த்துக் கொண்டு.

மன்னர் சதாசிவ ராயரின் புருவங்கள் நெரிந்தன. தலையைக் குலுக்கிக் கொண்டார். தாம் மதுவின் மயக்கத்தில் இருக்கிறோமோ என்ற சந்தேகம் அவருக்கு. கையிலிருந்த மதுக் கிண்ணத்தைக் வைத்தார். ஏதோ புதுமையைப் பார்ப்பது போலத் திருமலையை உற்று நோக்கி ஏதோ புதுமையைக் கேட்பதுபோல, ''என்ன திருமலை, என்ன சொல்கிறாய் நீ?'' என் கேட்டார்.

புரியாத மன்னருக்குப் புரிய வைக்கலா திருமலை. ''இந்த நாட்டிலே மன்னரிடம் வாசமுள்ளவர்கள் இன்னமும் இருக்கிறார் என்பதைத்தான் கூறுகிறேன். அர இல்லாவிட்டால் என்றைக்கோ ராமரா தம்மையே இந்நாட்டின் மன்னராகப் கடனப்படுத்திக் கொண்டிருப்பார்.'' வலை வீசினான் திருமலை.

அவன் பேச்சு இனிமையாக, இதம இருந்தது மன்னருக்கு. ''உண்மையாகவா என்று கேட்டார்.

''தன் பலத்தைத் தான் அறியாததனால் தான் யானை மனிதனிடம் அடிமைப்பட்டுக் கிடக்கிறது. உங்கள் மதிப்பை, பலத்தை நீங்கள் அறிந்து கொள்ளாததினால்தான் அடைபட்டுக் கிடக்கிறீர்கள்.''

''அப்படியானால்....'' ஆசைகளை வளர்த்துக்கொண்டார் சதாசிவ ராயர்.

''என்னுடன் ஒத்துழைத்தீர்களானால்.. உங்கள் உதவி மட்டும் எனக்குக் கிடைக்குமானால் நீங்கள் உண்மையான மன்னராக மகிமையோடு வாழ வகை செய்து தருவேன். ஆட்சியையும் அதிகாரத்தையும் உங்க கையில் கொண்டு வந்து கொடுப்பேன்.'' வீசிய வலை விலகாமல் இருக்க வலுவா முடிபோட்டான் திருமலை. மன்னர் சதாசிவ ராயரை ஏணியாக்கித் தான் ஏற்றம் பெ வழி வகுக்கலானான்.

நம்பிக்கைப்படவில்லை மன்னருக்கு. நம்பிக்கையாகவும் இருந்தது திருமலையின் துடிப்பான பேச்சு. நம்புவதே அந்த நல கெட்ட வாழ்வுக்கு மகிழ்ச்சியளித்தது. இப்படியொரு புரட்சி, உதவி, சூழ்ச்சி தனக்குச் சாதகமாகக் கிடைக்குமானால்?- கிடைக்க வேண்டும் என்று விரும்பி வ வேற்றது அந்த வாலிப உள்ளம். திருமலையின் பேச்சை உறுதியாக்கிக் கொள்ள உரக்கச் சிரித்தார் சதாசிவ ராயர்.

''ஏன் சிரிக்கிறீர்கள்? என் வார்த்தையில் நம்பிக்கையில்லையா?'' நெருப்பாக ஜ்வலித்தான் ராமராயரின் தம்பி.

''கேவலம் ஒரு அடிமைப் பெண்ணைக்கூட எனக்காக நான் எடுத்துக் கொள்ள முடியவில்லை. இந்த நிலையில் இந்த சாம்ராஜ்யத்தின் அதிகாரத்தையே — ஆணை பிறப்பித்து ஆளும் உரிமையையே வாங்கித் தருவதாகக் கூறுகிறாயே, அதை நினைத்துத்தான்...'' ஆதங்கத்தோடு நகைத்தார் அரசர்.

''மலையின் நிலை கண்டு உளி பயப்படுவதில்லை. உங்களிடமிருந்து ஓடிப்போனாளே ஒரு முஸ்லிம் பெண், அவளை நினைத்துத் தானே நெஞ்சம் புண்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள்? நாளைக்கே அவளை உங்கள் காலடியில் வந்து விழுந்து கதறிக் கண்ணீர் வடிக்கச் செய்கிறேன், போதுமா?'' புகையும் நெருப்பை ஊதிவிட்டான் திருமலை. தீப்பிடிப்பது கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது.

# எந்த ஸ்டேஷனையும் தெளிவுடன் கேட்டு ரஸிக்க

## நேஷனல் எக்கோ


## அளிக்கும் கவர்ச்சியான புது மாடல்கள்



இந்தியாவில் ரேடியோ உற்பத்தியில் முன்னோடிகளான நேஷனல்–எக்கோ பெருமிதத்துடன் அளிக்கும் மூன்று புதிய மாடல்கள்: U-819, U/A-806, A-829. நேஷனல்–எக்கோவின் உன்னத தன்மைக்கு உதாரணமான இவை ஒவ்வொன்றும் தரநிர்ணய பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டவை. இவற்றின் இயற்கையான, தெளிவு, நாதத்தை நீங்கள் பெரிதும் விரும்புவீர்கள். இன்றே உங்கள் அருகில் உள்ள நேஷனல்–எக்கோ வியாபாரியிடம் சென்று, நீங்கள் விரும்பும் ஸ்டேஷன்களை வைத்துக் கேளுங்கள்!

விலைகள் எக்சைஸ் ட்யூடி உள்பட: வரிகள் தனி.

**மாடல் U-819:**
ஏஸி/டிஸி செட். 5 வால்வுகள், 3 வேவ் பாண்டுகள். பேகலைட் பெட்டி.
ரூ. 298.00



**மாடல் 806:**
6 வால்வுகள், 3 வேவ் பாண்டுகள். நவீன மாதிரி அழகிய மரப்பெட்டி. மாடல் A-806, ஏஸி செட். மாடல் U-806, ஏஸி/டிஸி செட். ரூ. 395.00

**மாடல் A-829:** ஏஸி செட். 6 வால்வுகள், 4 பாண்டுகள். பர்மனெண்ட் மாக்னெட் ஸ்பீக்கர்; பேஸ், ட்ரெபில், மற்றும் மீடியம் நாதத்துக்கான 3 புஷ் பட்டன் டோன் கண்ட்ரோல்கள். பாண்டுகள் தேர்வுக்கு பியானோ கீ அமைப்பு. ரூ. 481.00

ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் லிமிடெட்

பம்பாய் . கல்கத்தா . மதராஸ் . டில்லி . பெங்களூர் . ஹைதராபாத் . பாட்னா

நேஷனல் எக்கோ [illegible] ரேடியோக்கள்

இந்தியாவிலேயே மிகப்பெரிய ரேடியோ ஃபாக்டரியின் தயாரிப்பு

IWT-GRA-3033A

''அந்தப் பெண் ஆயிஷாவுக்கு அன்று அபயமளித்துத் தம் மனைவியின் அந்தப்புரத்தில் பத்திரமாகப் பாதுகாத்து வருகிறார் தெரியுமா?''

''அதுவும் தெரியும். அதற்கு மேலும் தெரியும்! அழகுக் கிளிக்கு அடிபணியும் அந்தப் பயல் வேங்கடாத்திரி ஆயிஷாவை அடிமை கொள்ள வட்டமிட்டுக் கொண்டிருக்கிறானாம். அதையும் கேள்விப்பட்டேன்.''

''நிலைமை அவ்வளவு தூரத்துக்குப் போய் விட்டதா? அப்படியானால் அவள் எனக்கு இனி எங்கே கிடைக்கப் போகிறாள்? வீண் பகற் கனவுதான்.'' நிராசை மேலோங்கி நின்றது சதாசிவ ராயரின் பேச்சில்.

''கவலைப்படாதீர்கள் அரசே? இந்தத் திருமலையின் திறமையை விரைவிலேயே காணப் போகிறீர்கள். அந்தப் பெண் ஆயிஷா உங்களைத் தேடி வரப் போகிறாள். அதன் பிறகு என் திட்டங்களுக்குக் கைகொடுத்தால் இந்த சாம்ராஜ்யத்தை ஆட்டிப் படைக்கும் ஆற்றலையும் அதிகாரத்தையும் உங்களுக்கு ஆக்கி வைப்பேன்.'' கனன்று கொண்டிருந்த ஆசைத் தீயை விசிறி விட்டுக் கொழுந்து விட்டெரியச் செய்தான் அரவிட்டு இளையவன்.

ஆயிஷாவின் நினைவிலே காய்ந்து போயிருந்தவர், திருமலை மூட்டிய நெருப்பிலே கருகிப் போகத் தயாராக இருந்தார். ஆனால் தன் இச்சைக்கு இணங்காதவள் ராமராயரின் பாதுகாப்பிலே வேங்கடாத்திரியின் கண்காணிப்பிலே இருக்கிறாள் என்ற செய்தி உற்சாகமளிப்பதாக இல்லை. ''ஏதோ பார்க்கலாம். சொல்லிச் செயலாக்கிய பிறகு தான் எதையும் நிலையாகச் சொல்ல முடியும். அது சரி, பீஜப்பூரிலிருந்து ஏதோ தூதுவன் வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேனே என்ன விஷயமோ?'' என்றார் சதாசிவ ராயர், அரசியலிலும் தனக்கு அக்கறை உண்டு என்பதைக் காட்டிக் கொள்ள.

''முஸ்லிம்களுக்கு அளவுக்கு மீறிச் சலுகைகள் அளித்து ஆதரித்தாரே அண்ணா, அது பலன் கொடுக்க ஆரம்பித்திருக்கிறது! பாமினி சுல்தான்கள் தங்கள் பகையை மறந்து இந்து சாம்ராஜ்யத்தை அழிக்க ஒன்று சேர்ந்து விட்டார்களாம். ஆதில்ஷாவிடமிருந்து வந்த மதுல்தாரை இரண்டு நாட்களாகக் காக்க வைத்திருக்கிறேன். அண்ணாவின் பேட்டிக்காக ஆனந்த மஹாலில் அமைதி இழந்தவனாகத் தங்கியிருக்கிறான்.'' அர்த்தமுள்ள சிரிப்பொன்றைச் சிந்தவிட்டான் திருமலை. அயல் நாட்டுத் தூதுவர்களை அலட்சியமாக நடத்துவதனால் அவர்களின் கோபமும் ஆத்திரமும் பெருகும். அண்டை நாட்டின் நட்பையும் நல்லெண்ணத்தையும் குலைக்கும். அண்ணாவின் ஆட்சியும் ஆட்டம் கொடுக்கும் என்று மனப்பால் குடிக்கலானான் மகாமண்டலேசுவரரின் தம்பி!

இதே வேளையில் ராமராயர் அலி ஆதில் ஷாவின் தூதுவனாக வந்திருந்த மதுல்தாரின் கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்தார்.



''பேஷான ரேடியோ வாங்கி இருபது வருஷமாச்சு. ஒரு பைசா ரிப்பேர்க்காரனுக்குக் கொடுத்ததில்லே!''

''ரிப்பேர்க்காரன் ரொம்ப வருத்தப்பட்டுச் சொன்னான்....நீங்கள் பணத்தைக் கொடுத்துத் தொலைத்து விடுவதுதானே?''

''விஜயநகர சாம்ராஜ்யத்தின் பராக்கிரமம் மிகுந்த மகா மண்டலேசுவரரின் சந்திப்பு எனக்கு இன்னும் கிடைக்கவில்லை. இரண்டு நாட்களாகத் தங்கள் நகரின் விருந்தினர் மாளிகையில் வேதனையுடன் காத்திருக்கிறேன். எங்கள் சுல்தான் அலி ஆதில்ஷாவின் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த செய்தியைத் தாங்கிய கடிதத்துடன் தங்கள் தரிசனத்துக்காகக் காத்திருக்கும் எனக்கு இதைக் கண்ட பிறகாவது சமூகத்திலிருந்து அழைப்புக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.''

ராமராயரின் கண்கள் சிவந்தன. அயல் நாட்டுத் தூதுவன் வந்து இரண்டு நாட்களாகக் காத்திருக்கிறான் தன்னுடைய பேட்டிக்காக. ஆனால் அந்தத் தகவல் தனக்குத் தெரிவிக்கப்படவேயில்லை என்பதை உணர்ந்தபோது அவர் உள்ளம் நலிந்தது.

உள்நாட்டு விவகாரங்களின் பொறுப்புக்கு உரியவனான திருமலையை அழைத்து வரும்படி செய்தி பறந்தது. ஆனால் வந்தவனோ வேங்கடாத்திரி!

''அவசரக் காரியமென்று அழைத்தீர்களாமே. அண்ணா திருமலையை அவர் அரண்மனையில் காணோம். அதனால் நான் வந்தேன்'' என்று நின்றவனிடம் மதுல்தாரின் கடிதத்தை மௌனமாக நீட்டினார் ராமராயர்.

கடிதத்தைப் படித்த வேங்கடாத்திரி, ''தக்க மரியாதைகளுடன் தூதுவனை ஆனந்த மகாலில் தங்கச் செய்திருப்பார் அண்ணா. தங்களிடம் இதை உடனே கூறாததற்கும் காரணமில்லாமலிருக்காது...'' என்று காட்டிக் கொடுக்காமல் பேசினான்.

''அந்தத் தூதுவன் கொண்டு வந்திருக்கும் செய்தி என்ன என்பது எனக்குத் தெரியும். நமது ஒற்றர்கள் அது பற்றிய செய்தியை முன்னதாகவே அனுப்பி விட்டார்கள். இருந்தாலும் அயல் நாட்டிலிருந்து வந்திருக்கும் தூதுவனை அவன் இப்படி ஒரு கடிதம் எழுதும்படியாகவா காக்க வைப்பது?

''நாளைக்கு தர்பாரில் வந்து அவன் சந்திப்பதற்கான ஏற்பாடுகளைச் செய். வேற்றுமையை உண்டாக்கி விரோதத்தை வளர்ப்பதற்கு இம்மாதிரியான சந்தர்ப்பங்களையெல்லாம் பயன்படுத்திக் கொள்ளக் காத்திருக்கிறார்கள் நமது விரோதிகள். இந்த வேளையில்தான் நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். ஆதில்ஷா தமது நட்புக்கும் நல்லெண்ணத்துக்கும் உறுதி அளித்திருக்கிறார். 'தம் செயல்களும் தாம் அனுப்பும் தூதுவர்கள் தாங்கி வரும் செய்திகளும் விபரீதமாக வேற்றுமையை வளர்ப்பது போலிருந்தாலும் அவைகளை அப்படியே நம்பிவிட வேண்டாம். அவை கூட்டணி வகுத்துள்ளவர்களின் நிர்ப்பந்தத்தினால் நிகழ்பவை' என்று கூறியிருக்கிறார். இது ஒருபுறமிருக்கட்டும். நாமும் சற்று விவேகத்துடன் நடந்துகொள்ள வேண்டுமல்லவா?''

அண்ணாவின் முன்னிலையில் என்றுமே அதிகம் பேசாதவன் வேங்கடாத்திரி. அன்றும் தலை குனிந்து நின்றான். அவர் கூறியபடியே செய்வதாகக் கூறி விடை பெற்றுக் கொண்டு வெளியேறினான்.

மறுநாள் ஆதில்ஷாவின் தூதுவனை வரவேற்பதற்காகவென்றே விசேஷமான தர்பார் கூட்டியிருந்தார் ராமராயர். மன்னர் நடத்தும் அரசவையல்ல. மகாமண்டலேசுவரர் தனிப்பட்ட முறையில் நடத்தும் கூட்டம் அது. விஜயநகரத்தின் அரசியலை நிர்வகிக்கும் உயர் அதிகாரிகளும் பெருங்குடி மக்களும் மற்றும் பலரும் குழுமியிருந்தார்கள். ஆதில்ஷாவின் தூதுவனைச் சந்திப்பது மட்டும் அன்றைய தர்பாரின் நிகழ்ச்சியல்ல. விஜயநகரத்தின் பழங்குடி மக்களும் நாடோடிகளுமான 'தொம்பர்கள்' என்ற இனத்தவர்களின் கலை நிகழ்ச்சிகளைக் காணவும் சம்மதம் தெரிவித்திருந்தார் ராயர். ஆகவே ஆதில்ஷாவின் தூதுவனை வரவேற்று உரிய ஆசனத்தில் அமரச் செய்த பின் அவனைக் கௌரவிப்பதற்காகவே ஏற்பாடு செய்யப்பட்டது போன்ற அவர்களின் கலை நிகழ்ச்சிக்கு அனுமதியளித்தார். தொம்பர்கள் கூத்து நடத்தி ஆடிப் பாடித் தங்கள் திறமைகளையெல்லாம் காட்டினார்கள். உடல் வலிமைகளை வெளிப்படுத்தும் வித்தைகளைச் செய்து காட்டிச் சபையினரை வியப்பிலாழ்த்தினார்கள். கபடு சூதறியாத தொம்ப ஜோடிகள் காதல் பாட்டுக்கள் பாடிக் களிப்பித்தார்கள். சபையினரின் ஒருமுகமான பாராட்டைப் பெற்ற அந்தக் கூட்டத்தினருக்குத் தாம்பூலம் அளித்துத் தட்டு நிறையப் பொன்னும் மணியும் பொருளும் வைத்துக் கொடுத்தபோது அவர்களின் தலைமகன் தரையில் விழுந்து வணங்கித் தங்களுக்கு இப்பொன்னாலும் பொருளாலும் பயனேதுமில்லையென்றும், விருந்து வைத்து வயிறார உண்டு களிக்கப் பத்துப் பன்றிகளைக் கொடுத்தால் போதுமென்றும் வேண்டிக்கொண்டான். அவர்களின் இந்த எளிய வேண்டுகோள் உடனே நிறைவேற்றப்பட்டது. கொழுத்த பத்துப் பன்றிகளைக் கொண்டு வந்து அவர்களுக்குப் பரிசாக அளித்தார் ராமராய. இப்போதுதான் விபரீதம் நிகழ்ந்தது. பன்றிகளைக் கண்ட ஆதில்ஷாவின் அவை விருந்து வந்திருந்த தூதுவன் வெறுப்பு கடுப்பும் வேதனையும் பொங்கத் தன் முகத்தை மூடிக்கொண்டான். தூதுவனின் இந்த அருவருப்புச் செயல் சபையோருக்கு எரிச்சல் உண்டாக்கியது.

''நான் முஸ்லிம் இனத்தைச் சேர்ந்தவன். அசுத்தத்தின் இருப்பிடமான இந்தப் பிராணிகள் எங்கள் முன்னிலையில் வரவே கூடாது. அப்படி வருமானாலும் அவைகளை நாங்கள் காணவே கூடாது. முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த ஒருவன் பன்றியைப் பார்ப்பானாகில் அவன் அந்தக் கணமே ஓர் இந்துவாகி விடுகிறான்'' என்று தனது செயலுக்கு விளக்கம் கொடுத்த மதுல்தாரின் பேச்சைக் கேட்ட சபையோர் கொதித்தெழுந்தனர். ராமராயர் அவர்களை அமைதியாக இருக்குமாறு கையமர்த்தினார். வந்திருக்கும் தூதுவன் இம்மாதிரியான வன்முறைச் செயல்களுக்காகவே அனுப்பப்பட்டிருக்கிறான் என்பதை அறிந்தவர் ராமராயர். முளையை முன்னாலேயே அகற்ற வேண்டும் என்று தீர்மானித்தவராக அந்த முஸ்லிம் தூதுவனை நோக்கி ''முஸ்லிம் இனத்தைச் சேர்ந்தவர்கள் கோழியை விரும்பி உண்ணுவீர்களல்லவா?'' என்று கேட்டார்.

''ஆம். அது எங்கள் சுவை மிக்க உணவாயிற்றே!''–என்றான் தூதுவன்.

''ஆபாசத்தைத் தின்று வளரும் கோழியைச் சுவை மிக்க உணவாக உண்பவர்கள்...?'' என்று அவர் கேட்காமல் கேட்ட போது தூதுவனின் முகம் வெந்தது.

இனப் பற்று மிகுந்த அவன் இறுமாப்புடன், ''பிராணிகளிலேயே அசுத்தமானது பன்றி. ஆபாசமே அதன் ஆகாரம். அத்தகைய பிராணியையே கொன்று தின்னும் இனத்தை மிகக் கேவலமானதாக, இழிவானதாகத் தானே கொள்ள வேண்டும்? நீங்கள் கூறுவதுபோலக் கோழிகள் ஆபாசத்தைத் தின்பதில்லை. தானியங்களையே தின்று தன் உடலை வளர்த்துக் கொள்ளுகின்றன'' என்று வாதாடினான் விஜயநகர சாம்ராஜ்யத்தின் முடிசூடா மன்னரிடம்.

யாருடைய விரல் அசைந்தால் நாடசையுமோ அந்த நரபதியான ராமராயர் இப்போதும் நகைத்தபடியே, ''நானே உனக்கு உண்மையைக் காட்டுகிறேன்'' என்று கூறிவிட்டு நாட்டில் உள்ள பன்றிகளையெல்லாம் ஒரு கட்டிடத்தில் கொண்டு வந்து அடைக்கச் செய்தார். அவைகளுக்கு உணவாகக் கம்பு, கேழ்வரகு ஆகிய தானியங்களைத் தரையில் கொட்டிக் குவித்துக் கட்டிடத்தின் கதவுகளை மூடி முத்திரையிடச் செய்தார்.

மறுநாள் காலையில் அந்தத் தூதுவனை வரவழைத்தார். பன்றிகளை அடைத்திருந்த அறைக் கதவுகள் திறக்கப்பட்டன. தானியங்களை வயிறார உண்ட அந்த மிருகங்கள்

# உங்கள் கேசம் உதிருகிறதா?

## இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.



**பொடுகு**

இது சாதாரணமான உபாதை. இதை ஒருபோதும் அலட்சியம் செய்யக்கூடாது.



**கேசம் உதிருதல்**

உங்கள் ரோமம் உதிருகிறது, ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டம் இல்லாததுதான்.



**இளமையில் வழுக்கை**

இந்நிலையை நீங்கள் அநேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்.

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்ருக அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.

'ஆல் எபௌட் ஹெயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட, இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினல் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மென்ட் K-1 சில்விக்ரீன் அட்வைஸரி சர்வீஸ் தபால் பை 10022, பம்பாய்-1



**ப்யூர் சில்விக்ரீன்**

கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாதகால வைத்தியத்துக்குப் போதுமானது.

**சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்**

உங்கள் கேசத்தை நாள் பூராவுக்கும் நன்கு சீர்படி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலந்துள்ளது.



# Silvikrin

சில்விக்ரீன் – கேச ஆரோக்கியத்துக்கான வழி

SP/V/P/6/64

# சிற்றுண்டி வேளை!






ருசிமிக்க மில்க் சாக்கலேட்டில் புதைந்த பிஸ்கட்டுகள் — சுவையான ஃப்ரைஸ் மில்க் சாக்கலேட் டிஃபின்ஸ்–உங்கள் சிற்றுண்டிவேளைக்கு இதைவிட மிகச் சிறந்தது வேறு எதுவுமே இல்லை.

தயாரிப்பாளர்கள் : Cadbury-Fry

உறவை ஆபாசமாக்கி விருந்தன. நூற்றுக்கும் அதிகமான கோழிகளைத் தயாராக வைத்திருந்தார்கள் வீரர்கள். பன்றிகளை ஏட்டுவிட்டு அந்தக் கட்டிடத்தினுள் ஏழிகளை விட்டார்கள். தூதுவன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே கோழிகள் பன்றிகளின் அகத்தத்தில் உள்ள தானியங்களை ஆர்வமாகக் கொத்தித் தின்னலாயின. அதைக் கண்ட ஆதில்ஷாவின் தூதுவன் ஆத்திரமும் அவமானமும் அடைந்து தலை யைக் கவிழ்ந்துக் கொண்டான்.

"ஆபாசமான பன்றிகளைத் தின்னும் மனத்தவர்களான இந்துக்களைக் குறைவாக நினைப்பிட்டாயே; இப்போது பார்த்தாயா? இங்களில் எல்லோருமே பன்றி இறைச்சியை உண்பதில்லை. ஏன்? புலாலையே தொடாதவர்களும் எங்களில் உண்டு. எந்த இனம் உயர்ந்தது என்பதை இப்போது நீயே சொல்" என்றார் ராமராயர்.

தூதுவன் ஏதும் சொல்லவில்லை. அந்த வெந்நியவலின் ஆத்திரம் அடங்காததாக இருந்தது. விருந்தினர் விடை கொடுக்காத போதே விருட்டென்று எழுந்து வெளியேற முற்பட்டான். ஆத்திரத்தில் அறிவிழந்து விட்ட அவனை "நில்" என்று குரல் கொடுத்து நிறுத்தினார் ராமராயர்.

"தூதுவனுகப் பிற நாட்டுக்குச் செல்வதற்குத் தகுதியற்ற உன்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பினார்களே அவர்களுக்காக வருந்துகிறேன். நீ வந்த காரியத்தையே மறந்து வம்பு பேசி வன்மத்தை வளர்த்துக்கொண்டு போகிறாய். கொண்டு வந்த கடிதத்தை இன்னும் நீ என்னிடம் கொடுக்கவே இல்லை. ஆனால் அதில் உள்ள விஷயம் எனக்குத் தெரியும். அதற்கு விடை கூறுகிறேன். அதைப் போய் உன்னை அனுப்பியவர்களிடம் தெரிவி. பீஜப்பூருக்கு ஒரு காலத்தில் உரிமையாக இருந்து இன்று விஜயநகரத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருக்கும் சில பிரதேசங்களைத் திரும்பக் கேட்டு நிருபம் வரைந்திருக்கிறார் உங்கள் சுல்தான். இல்லையா? விஜயநகரம் தனது உரிமையான நிலத்தில் ஓர் அடி மண்ணைக் கூட மாற்றானுக்கு விட்டுக் கொடுக்காது என்று போய்க் கூறு உன் மன்னரிடம்" என்று கம்பீரமாகக் கூறினார் ராமராயர். முறைப்படி தாம்பூலமும் அவனது தகுதிக்குகந்த சன்மானங்களும் வழங்கித் தூதனுக்கு விடையும் கொடுத்தார்.

அவமானத்தின் அடியைத் தாங்க மாட்டாதவனாக அந்தத் தூதுவன் விஜயநகரத்திலிருந்து கிளம்பி நேரே பீஜப்பூர் சுல்தானின் அவைக்கு வந்தான். தலையில் சுற்றிக் கட்டியிருந்த தலைப்பாகையை அவிழ்த்துக் கழுத்தில் மாலையாகப் போட்டுச் சுற்றிக் கொண்டு, கண்ணீர் வழிய, ஆதில்ஷாவின் முன் மண்டியிட்டு விஜயநகரத்திலே தான் பட்ட அவமானத்தைச் சொல்லி அழுதான், அரற்றினான். பழிவாங்க வேண்டும் என்று படபடத்தான். ஆதில்ஷா அவன் கூறியவற்றையெல்லாம் அமைதியாகக் கேட்டார்.



தலைமை ஆசிரியர்: சம்பளம் வாங்குபவர் மணியையே பார்த்துக் கொண்டு வேலை செய்வது நியாயமா. ..? நீங்கள் சதா சர்வகாலமும் மணியையே பார்த்துக் கொண்டு பாடம் நடத்துவதாக உங்கள் பேரில் புகார்...!

ஆசிரியர்: உண்மை! அது எந்த மணி தெரியுமா....? மணி என் வகுப்பிலுள்ள ஒரு மாணவனுக்கும்!

"தூதுவனுகச் சென்ற உனக்கு நாவடக்கம் இருந்திருக்க வேண்டும். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்படும் திறன் இல்லாதவன் நீ. அவர்கள் நாட்டுக்குப் போய், அதுவும் ராமராயரின் அவையிலேயே உன் இனப்பற்றை இங்கிதமற்ற முறையில் வெளிப்படுத்தியது உன் குற்றம். உன்னை இத்தமட்டோடு விட்டாரே என்று சந்தோஷப்பட வேண்டியதிருக்கப் பழி வாங்க வேண்டுமென்று குதிக்கிறாயே" என்றார் ஆதில்ஷா. இப்படியொரு செய்தியோடு தூதுவனை அனுப்பவே விரும்பாதவர் அவர். குதுப்ஷா, நிஜாம்ஷா இவர்களின் வற்புறுத்தலின் பேரிலேயே அந்தத் தூதுவனை அனுப்பியிருந்தார். அவன் அவர்களின் போதனையிலே புத்தி தடுமாறிப் போனவன்.

"அப்படியானாலும் நம் இனத்துக்கு இழைக்கப்பட்ட இந்த அநீதிக்குத் தாங்கள் எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப் போவதில்லையா?"

"குற்றம் உன்மீது. இதில் நான் ஏதும் செய்வதற்கில்லை. தவிர, ராமராயர் என் மதிப்புக்குரியவர். ஒரு வகையில் என் தந்தையைப் போன்றவர். அவருடன் மனஸ்தாபப் பட்டுக் கொள்ள விரும்பவில்லை நான்" என்று அவனைக் காணவே விரும்பாதவர் போல எழுந்து உள்ளே சென்றார் ஆதில்ஷா.

ராமராயரின் அவையில் அடைந்த அவமானத்தை விட ஆதில்ஷாவின் அலட்சியம் தாங்கமுடியாததாக இருந்தது அவனுக்கு. ஆதில்ஷா போருக்கு ஆயத்தம் செய்வார் என நினைத்தான் அவன். ஆனால் நடந்ததோ....?

ராமராயரின் அவையில் அவமானப்பட்டு, ஆதில்ஷாவினால் கைவிடப்பட்ட இந்த நிர்க்கதியான நிலையிலும் பழிவாங்கும் வெறிக்குணம் மட்டும் அவனை விட்டு விலகவில்லை. ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனாக வேகமாக வெளியேறினான். (தொடரும்)

# வட்ட மேஜை

## தீபாவளி மலர்

இந்த வருடக் ''கல்கி'' தீபாவளி மலர் அற்புதம். ஜகத்குரு படத்தைப் பிரேம் போட்டுவிட்டேன். கதைகள் அற்புதம். எச்: வி. ஆர். ஐயங்காரின் ''அப்பா'' கதை ருசித்தது.

பெல்லாரி—2
6—11—64 லட்சுமி ராகவன்

இவ்வருடத் தீபாவளி மலர் மிகச் சிறந்த முறையில் அமைந்துள்ளது. கருத்துள்ள கதைகளும், பிரபல எழுத்தாளர்களின் கைவண்ணமும் சேர்ந்து மலரை அமர்க்களப்படுத்தி விட்டது. போங்கள்! வாழ்க தங்கள் முயற்சி!

எஸ். வி. நகரம்
6—11—64 கானதாசன்

## கந்தன் கருணை

''கந்தன் கருணை'' செந்தமிழ் மணம் கமழும் தெய்வத் திருமறை. கச்சியப்ப சிவாச்சாரியாரின் இரு மொழிப் புலமையும் திருமுருக கிருபானந்தவாரியாரின் அருள் விளக்கமும் 'கல்கி'யில் தொடர்ந்து வந்து நம் மக்களின் மன இருளை நீக்கும் என நம்புகிறேன்.

அச்சிறுபாக்கம்
6—11—64 இரா. செங்கல்வராயன்

ஜகத்குரு ஆசியுடன் திருமுருக கிருபானந்தவாரியாரின் ஸ்ரீ கந்த புராணக் கட்டுரையால் பல கோடி மக்களை வாழ வைக்கிறீர்கள். இதற்குத் தேவசேனாபதியின் பூரண அருள் கிட்டும்.

வரட்டணபல்லி
7—11—64 ஆர். இராஜகோபால ஐயர்

## குண்டுமல்லிகை

இத்தனை நாட்களும் அசாத்திய மணத்துடன் கமகமத்துக் கொண்டிருந்த 'குண்டுமல்லிகை' நெஞ்சில் இனித்துக் கொண்டுதான் இருக்கிறது.

பாண்டிச்சேரி
7—11—64 ஜி. வி. இரா

காதலின் உயர்வான தத்துவத்தை 'குண்டுமல்லிகை'யில் கண்டேன். உ... விடம் காதல் பிச்சைக்காக வேண்டி நிற்... பிச்சுமணியின் நிலையை ஆசிரியர் சித்தி... இருந்தது உள்ளத்தை விட்டு என்றும் ... லாது. வயது வித்தியாசம் என்ற ஒ... பெருந் தடையையும் தாண்டித் தான் விரு... பியவளையே உமாவின் 'செல்லப் பிள்ளையா... அருளினால் மணம் முடிக்கிறான். மகிழ்ச்... கடலில் திளைக்கும் பிச்சுமணி தம்ப... களுக்கு என் உளம் கனிந்த ஆசிக... கதையைத் திறம்படச் சித்திரித்திருந்... திரு அரு. ராமநாதனுக்கு நன்றி கலந்த ... பாராட்டுக்கள் உரித்தாகுக!

சத்தியமங்கலம்
6—11—64 ஆர். கே. சுந்தர...

8—11—64 இதழில் முடிவுற்ற ஆசிரி... திரு அரு. ராமநாதன் அவர்களின் வி... விறுப்பும் உணர்ச்சி வேகங்களும் நிறைந்... அரிய படைப்பான ''குண்டுமல்லிகை''யின் மணம் வாசகர்களின் உள்ளத்தில் என்றென்றும் வீசிக் கொண்டிருக்கும். உமாவையும் பிச்சுமணியையும் வாழ்க்கைத் துணைவர்களாக்கி நாவலை முடித்திருப்பது ஒரு நல்ல முடிவு.

கோவை எஸ். வி. கிருஷ்ணமூர்த்தி
6—11—64 ம. சுந்தரம்

''குண்டுமல்லிகை'' கதையின் கதா பாத்திரங்களான ஜகந்நாதன், பிச்சுமணி, வசந்தி, உமா பாத்திரங்களை எப்படித்தான் சொல்லிப் புகழ்வதென்றே தெரியவில்லை. கடைசி இதழைப் படிக்கும்போது நான் ரொம்பவும் அழுது விட்டேன். இது ஓர் அற்புதப் படைப்பு.

காரைக்கால்
6—11—64 எஸ். கனகராஜு




# ஹ்யூலெட்ஸ் மிக்சர்



## அருந்தி விரைவில் நிவாரணம் பெறுங்கள்

வேலை மும்முரமும் கவலையும் ஜீரணத்தை பாதிக்கின்றன; பசியை
மந்திக்கச்செய்து, தளர்ச்சியூட்டுகின்றன. ஹ்யூலெட்ஸ் மிக்சர் விரை-
வில் நீடித்த பரிகாரம் அளிக்கிறது. ஹ்யூலெட்ஸ் மிக்சர் வயிற்று
உபாதையை விரைவில் போக்கி, நிரந்தரமாக குணமளிக்கிறது.
வயிறுண்டாக்கும் அமிலங்களை அகற்றி, ஜீரண கோசத்திற்கு அதன்
வேலையை சரிவர செய்வதற்கேற்ப பாதுகாப்பளிக்கிறது. ஹ்யூலெட்ஸ்
மிக்சர் குழந்தைகளின் வயிற்றுக் கோளாறுகளுக்கும் கூட சிறந்தது.
வயிற்றுப்போக்குக்கு அபினிசேர்ந்த ஹ்யூலெட்ஸ் மிக்சர் குணமளிக்கும்

**ஹ்யூலெட்ஸ் மிக்சர் ஜீரணத்திற்கு சிறந்தது.**

C. J. ஹ்யூலெட் & ஸன் (இந்தியா)-பிரைவேட் லிமிடெட்
90 A, அங்கப்ப நாயக் தெரு, மதராஸ் 1

# மிக விரைவான விமான சர்வீஸ்—

# டில்லி மாஸ்கோ லண்டன்!

டில்லிக்கும் லண்டனுக்கும் இடையே ஒ மிக விரைவான விமான சர்வீஸை ஏர் இந்தியா ஆரம்பித்துள்ளது. இந்த சர்வீ மாஸ்கோ வழியாக வாரம் இரு முறை செல்லும். இது மிகக்குறைந்த தூரமுள் மார்க்கமாதலால் பிரயாண நேரம் 12 மணி களுக்கும் குறைவு!

விமானம் மாஸ்கோவில் சுமார் ஒருமணி நேரம் தங்குகிறது. நேராகச் செல்லு பிரயாணிகளுக்கு மாஸ்கோ 'விஸா தேவையில்லை!

பிரதி செவ்வாய்க்கிழமையும் வெள்ளிக் கிழமையும்

**பம்பாய்—டில்லி—மாஸ்கோ— லண்டன்**

இவையல்லாமல மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பா வழியாகச் செல்லும் 8 சர்வீஸ்களும் உள்ளன



## *ஏயர்-இந்தியா*

பி.ஓ.ஏ.ஸி. மற்றும் கண்டாஸ் ஒத்தாசையுடன்..



# அமெரிக்காவில் நமது இசை

Courtesy - Journal World

**எஸ். ராமநாதன்**

சென்ற ஐந்து ஆண்டுகளாக அமெரிக்க மாணவர்கள் சிலர் சென்னை வந்து ஓரிரண்டு ஆண்டுகள் நம்முடைய இசையைப் பயின்று வந்துள்ளனர். இப்போது சில அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் கர்நாடக சங்கீதத்தைக் கற்க வசதி ஏற்படுத்தி வருகிறார்கள். ஓர் அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் ஃபாகல்டி தகுதியுடன் (Faculty status) முதன் முதலாக நம் இசையைக் கற்பிக்கும் வாய்ப்பு எனக்கு அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு ஏப்ரல் மாதம் தொடங்கி கன்னெக்டிகட்டில் உள்ள வெஸ்லியன் சர்வகலாசாலையில் பணி புரிந்து வருகிறேன். கோடை விடுமுறையில் அமெரிக்காவின் மேற்குக் கரையில் உள்ள ஸியாட்டில் நகரத்தில் வாஷிங்டன் பல்கலைக் கழகத்தில் இரண்டு மாதங்கள் கற்பித்தேன்.

வெஸ்லியனில் நான்கு மாணவர்கள் வீணையும் ஏழெட்டு மாணவர்கள் வாய்ப்பாட்டும் பயின்று வருகிறார்கள். டியோடோரியல் முறையில் ஒவ்வொரு மாணவரும் வாரம் ஒரு மணி நேரம் என்னிடம் கற்கிறார். பாடத்தை ஒலிப்பதிவு செய்து கொண்டு

அமெரிக்காவில் நமது இசை நிகழ்ச்சி இந்திய மணத்துடன் எத்தகைய அல்லோல கல்லோலமாக நடைபெறுகிறது, பார்த்தீர்களா?





டாக்டர் ஹாரி பவர்ஸ்

நன்றாகச் சாதகம் செய்து அடுத்த வாரம் வந்து வாசித்தோ, பாடியோ காட்டுகிறார். ஒவ்வொரு கமகத்தையும் ஆராய்ந்து தெளிவுடன் கற்கிறார்கள். நம் குருகுல முறையை மிகவும் போற்றுகிறார்கள்.

இது தவிர, ஒவ்வொரு புதன்கிழமை இரவும் 'வெஸ்லியன் இந்தியன் மியூஸிக் ஸ்டடி க்ரூப்' கூடுகிறது. இதில் தென்னிந்திய இசையில் ஈடுபாடு உடைய எவரும் கலந்து கொள்ளலாம். சுமார் 10, 12 பேர் வருகிறார்கள். பாஸ்டன், நியூயார்க், நியூஹாவன் முதலிய இடங்களிலிருந்து இருநூறு மைல் பிரயாணம் செய்து இங்கு வந்து நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார்கள்.

நான் தங்கியிருக்கும் சரஸ்வதி கலா ஆசிரமம் என்னும் இடத்தில் வெள்ளிக் கிழமை தோறும் இசைத்தட்டுக்கள் மூலமாகவும், வீணையில் வாசித்தும், பாடிக் காட்டியும் நம் இசையைப் பற்றி விளக்கம் செய்து வருகிறேன். இதற்குச் சுற்றுப்புறங்களில் உள்ள இந்தியர் உட்பட நாற்பது, ஐம்பது பேர் வருகிறார்கள்.

எங்கள் பல்கலைக் கழகத்தில் உலக இசை என்று ஒரு பாடத் திட்டம் உள்ளது. மருத்துவம், விஞ்ஞானம், புதைபொருள் ஆராய்ச்சி, பொறி இயல் முதலிய துறைகளில் பயிலும் மாணவர்கள் இதில் சேருகிறார்கள். இசையின் அடிப்படை உண்மைகளையும் பல்வேறு நாடுகளின் இசைகளின் தன்மைகளையும் கற்பிக்கிறோம். இந்திய இசை பற்றிக் கற்பிக்க நான் இருக்கிறேன். இந்தப் பயிற்சியை நான் மிகவும் பயன் உடையதாகக் கருதுகிறேன்.

**எங்கள் குழு நியூயார்க்கில் உள்ள கார்னேகி ஹாலில் கச்சேரி செய்த பெருமை பெற்றிருக்**கிறது. அக் கச்சேரி ஏஷியா சொஸைட்டியின் ஆதரவில் நடந்தது. பின்னர் அமெரிக்க மியூஸிகாலஜிகல் சொஸைட்டியின் சார்பில் ஹார்வார்டு பல்கலைக் கழகத்தில் ஒரு கச்சேரி செய்தோம். இக் குழுவை நிறுவி நடத்துவதற்குப் பேராசிரியர் ராபர்ட் பிரௌன் அவர்களின் பெருமுயற்சியே காரணமாகும்.

சென்ற ஆண்டு ஸ்ரீமதி பாலசரஸ்வதியின் சகோதரர் ஸ்ரீ டி. ரங்கநாதன் மிருதங்கம் போதித்து வந்தார். மேற்கண்ட கச்சேரிகளிலும் அவர் வாசித்து வந்தார். கோடை விடுமுறையில் வாஷிங்டன் பல்கலைக் கழகத்தில் என்னுடன் அவரும் பணிபுரிந்தார்.

கோடைப் பள்ளியில் வாஷிங்டன் ஸ்டேட்டிலிருந்து அறுபது, எழுபது இசையாசிரியர்கள் ஸியாட்டிலுக்கு வந்து இசை கற்றார்கள். இசை பயிற்றுவிக்கும் முறைகளையும் பயின்றார்கள். நம்முடைய பயிற்சி முறையில் அமைக்கப்பட்டிருக்கும் ஸ்வராவளி, ஜண்டை வரிசை, அலங்காரம், கீதம் இவற்றைக் கேட்டு வியந்து போற்றினார்கள்.

ஸியாட்டில் நகரத்தில் 'ஸெண்டர் ஃபார் ஏஷியன் ஆர்ட்ஸ்' என்ற சங்கத்தின் சார்பில் ஒரு கச்சேரி செய்தேன். ஸான்பிரான்ஸிஸ்கோவில் 'அமெரிக்கன் ஸொஸைட்டி ஃபார் ஈஸ்டர்ன் ஆர்ட்ஸ்'ஸின் சார்பில் கச்சேரி செய்தேன். ஸான்பிரான்ஸிஸ்கோ ரேடியோ நிலையத்தினர் அக் கச்சேரியையும்



பேராசிரியர் ராபர்ட் பிரௌன்

ளுடன் நடத்திய ஒரு பேட்டியையும் ஒலி பரப்பினார்கள். வியாட்டியில் இப்போது நடந்துவரும் இந்திய சிற்பக் கண்காட்சியை யொட்டி டெலிவிஷனில் வீணை வாசித்து விளக்கம் செய்தேன்.

நியூயார்க் நூக் லெண்டரின் ஆதரவில் பில்ஹார்மோனிக் மன்றத்தில் குழந்தைகளுக்கு மட்டுமென்றே நான் நான்கு கச்சேரிகள் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சபை முழுவதும் ஒரே குழந்தைகள் மயம். சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு குழந்தை ரசிகர்களுக்கு முன்பு இசைத்தது என் வாழ்நாளில் என்றும் மறக்க முடியாத சம்பவமாகும். கச்சேரி முடிந்த பின் சுமார் இருநூறு குழந்தைகள் என்னைச் சூழ்ந்து கொண்டு என் கையைக் குலுக்கியது என் உள்ளத்தில் என்றும் பசுமையாய் விளங்கும்.



டாக்டர்
[வில்லியம் ஸ்கெல்டன்

வெஸ்லியன் சங்கீதக் குழுவானது தீபாவளியை முன்னிட்டு இந்திய இளைஞர் சங்கத்தின் ஆதரவில் நியூயார்க்கில் இசை விருந்தளித்தது. இது என் அமெரிக்க அநுபவங்களில் முக்கியமான ஒன்றாகும்.

தீபாவளி கொண்டாட்டத்துக்காகச் சுமார் பதினைந்து இந்தியர்கள் ஹார்ட் ஃபோர்டில் ஒன்று கூடினார்கள். ஸ்ரீமதி கல்பிதா என்ற குஜராத்திப் பெண்மணி மீரா பஜன்களில் சிலவற்றைப் பாடினார். மீராவைப் பற்றி சம்பாஷணை எழுந்தது. பெரும்பாலும் வட இந்தியர்களைக் கொண்ட அந்தச் சங்கத்தினர் அவ்வளவு பேரும் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி மீராவாக நடித்ததையும், அவரது தெய்வீக இசையையும் மிக உயர்வாகப் பேசினர்.

எனக்கு இங்கே பலரிடமிருந்து நல்ல உதவி கிடைத்து வருகிறது. முக்கியமாக, கான்ஸாஸ் சர்வகலாசாலையில் பணி புரியும் பேராசிரியர் என். அனந்தநாராயணன் அவர்கள் நம்முடைய இராகங்களில் உள்ள நுட்பமான கமகங்களின் தன்மையை விஞ்ஞான முறையில் ஆராய முயன்று வருகிறார். அவரும் நானும் சேர்ந்து இப் பணியைப் புரிய விரும்புகிறோம். இறைவன் துணை நிற்க வேண்டும்.

இதுகாறும் பென்ஸில்வேனியா பல்கலைக் கழகத்திலிருந்து டாக்டர் ஹாரி பவர்ஸ், காலிபோர்னியா பல்கலைக் கழகத்திலிருந்து பேராசிரியர் ராபர்ட் பிரௌன், கோல்ட் கேட் பல்கலைக் கழகத்திலிருந்து டாக்டர் வில்லியம் ஸ்கெல்டன் ஆகியோர் சென்னைக்கு வந்து நம் இசையைக் கற்று இப்போது இந்நாட்டில் பணியாற்றி வருகிறார்கள். ஆண்டுதோறும் அமெரிக்க மாணவர்கள் பலர் தமிழ் நாட்டுக்கு வந்து நம் இசையைப் பயில்வார்கள் என்று நம்புகிறேன். இசைக் கலைஞர்களும் இசை ஆசிரியர்களும் மேலும் மேலும் அமெரிக்க நாட்டுக்கு விஜயம் செய்து தென்னிந்திய இசையின் புகழைப் பரப்ப உதவுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

## துணுக்குகள்

பர்மிங்ஹாமுக்கு டாக்டர் கிளிபோர்டு என்னும் புகழ்பெற்ற மதபோதகர் வந்தார். அவர் அங்கிருந்த கோயிலில் சொற்பொழிவாற்ற இருந்ததைக் கேள்விப்பட்டு மக்கள் அந்தத் தெரு முழுதும் நிரம்பி வழிந்தனர். கூட்டம் குறிப்பிட்ட நேரத்துக்கு முன்பே கூடிவிட்டது. டாக்டர் கிளிபோர்டு சில நிமிடங்கள் தாமதமாக வந்தார். கோயில் வாயிலில் நின்றது பெருங் கூட்டம். அங்கிருந்த போலீஸ்காரர் டாக்டரை உள்ளே விட மறுத்தார். டாக்டர் கிளிபோர்டு, ''நான்தான் டாக்டர் கிளிபோர்டு'' என்றார். ''சரி சரி, உள்ளே போங்கள். நான் ஏற்கனவே இரண்டு கிளிபோர்டுகளை உள்ளே விட்டுவிட்டேன். நீங்கள் மூன்றாவது.....'' என்றார். இதைக் கேட்டதும், டாக்டர் கிளிபோர்டுக்கு எப்படி இருக்கும்?



இங்கிலாந்தின் பிரதமராக இருந்த நியூகேஸில் பிரபு ஒரு சமயம் நாவலாசிரியர் ஸ்டேர்னிடம் பேசிக் கொண்டிருந்தார். அறிஞர்களால் அரசினை நடத்த இயலாது என்ற நினைப்பு பிரதமருக்கு. எனவே ஸ்டேர்னைப் பார்த்து ''அரசாங்க காரியங்களைச் செய்ய அறிஞர்களுக்கு ஆற்றல் ஏதும் இல்லை'' என்று கூறிவிட்டார்.



இதைக் கேட்டதும், ஸ்டேர்ன், ''அவர்களுக்கு ஆற்றல் இல்லாமல் இல்லை. ஆனால் அவர்கள் அதை விரும்புவதில்லை. குதிரையை எடுத்துக் கொள்ளுங்கள். அதனால் கழுதையைப் போல் நன்றாகப் பொதி சுமக்க முடியும். ஆனால் அது தன் முதுகின்மேல் சுமையை ஏற்றத்தான் அனுமதிப்பதில்லை'' என்று பளிச்சென்று பதில் கூறியபோது பிரதமர் நியூகேஸில் பிரபுவின் முகம் அழுது வடியத் தொடங்கியது.



மேற்கு மாம்பலம் மாதர் சங்க ஆண்டு விழா: சங்கத்தினர் தயாரித்த பொம்மைகள்.

# நங்கையர் செய்யும் நற்பணிகள்

விசுவாமித்திரர் ரௌத்திரத்திலும் தம் தவ வலிமையைக் கொண்டு திரிசங்கு சொர்க்கத்தைச் சிருஷ்டித்தார் என்று கதை. ஆனால் எந்த முனிவரின் சாபத்தினால் சென்னையில் மேற்கு மாம்பலம் எழுந்ததோ - அதன் சரித்திரம் தெரியவில்லை — அது இன்று திரிசங்கு நிலையில்தான் இருக்கிறது. இங்கு வாழ்பவர்களும் அநேகமாகத் திரிசங்கு நிலையில் உள்ள மத்தியதர வகுப்பார்தான். அவர்கள் குடும்ப வாழ்க்கை நடப்பதும் அதே கதிதான். இந்தப் பேட்டைக்குப் போய்ச் சேருவதும் அங்கிருந்து திரும்புவதும் அவ்வளவு இலேசான காரியமல்ல! ஆம்! ஆதிகாலத்தில் முனிவர்கள் 'கல்லாகக் கடவாய்! மண்ணாகக் கடவாய்!' என்று சாபமிட்டிருக்கிறார்கள். ஆனால் மேற்கு மாம்பலத்தின் மீது கோபம் கொண்ட மகானுபாவரோ 'நீங்கள் லெவல் கிராஸிங் தொல்லையினால் அவதிப்படக் கடவது!' என்று நவீன முறையில் சாபமிட்டுச் சென்று விட்டார் போலும்! இப்படிப்பட்ட திரிசங்கு சொர்க்கமான மேற்கு மாம்பலத்திலும் ஒரு மாதர் சங்கம் செயலாற்றி வருகிறது என்று கேள்விப்பட்ட போது, அது மிகுந்த வியப்பை அளித்தது.

மேற்கு மாம்பலம் குப்பையச் செட்டித் தெருவில் மாதர் சங்கம் அதன் தலைவி ஸ்ரீமதி சுந்தரம் சாரநாதன் அவர்கள் இல்லத்தில் நடந்து வருகிறது. மேற்கு மாம்பலம் இந்த மாதர் சங்கத்தைத் தோற்றுவிப்பதற்குக் காரணமானவரும் அவரே!

''இந்தத் 'திரிசங்கு சொர்க்கத்'திலும் ஒரு மாதர் சங்கம் இருக்கிறதே என்று நீங்கள் ஆச்சரியப்படுகிறீர்களா? குடும்பச் சுமையில் அழுந்தியுள்ள இந்தப் பேட்டையில் உள்ள மாதர்களை ஒன்று சேர்ப்பதும் எங்களுக்குப் பிரும்மப் பிரயத்தனமாகத்தான் இருந்தது.''


''ஆமாம்! காலை ஐந்து மணிக்கு எழுந்தால் இரவு பத்து மணி வரை ஓயாமல் ஒழியாமல் வீட்டு வேலைகளில் மூழ்கியுள்ள மத்தியதரக் குடும்பத்து மாதர்களை ஒன்று சேர்ப்பது பெரிய காரியம்தானே!''

''அவர்களை ஒன்று சேர்த்ததோடு மட்டுமல்ல; எங்கள் மாதர் சங்கத்தில் அவர்கள் சேர்ந்ததால், சேர்ந்து தையல் கற்றுக் கொண்டதால் ஒவ்வொருவருக்கும் மாதம் முப்பது நாற்பது ரூபாய் வருமானம் கிடைக்கிறது!''

''அப்படியா? மகிழ்ச்சி. மேற்கு மாம்பல மாதர் சங்கத்தின் பூர்வ சரித்திரத்தைத் தெரிந்து கொள்ளலாமா?''

''என் கணவர் சாரநாதன் இந்தியன் பாங்கியில் பணியாற்றுகிறார். அவரைப் பல ஊர்களுக்கு மாற்றுவார்கள். வட நாட்டில் பம்பாய், அகோலா முதலிய இடங்களிலிருந்தபோது அங்குள்ள பெண்மணிகள் ஒவ்வொருவர் வீட்டிலும் தையல் மெஷின் வைத்துக் கொண்டு தங்கள் குடும்பத்துக்கு வேண்டிய துணிமணிகளைத் தைத்துக் கொள்ளும் அதிசயத்தைக் கண்டேன். ஆகவே நானும் தையல் கலையைப் பம்பாயில் கற்றுக் கொண்டேன். சென்னைக்கு வந்ததும் 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்று சொல்வார்களே, அதுபோல் மற்றப் பெண்மணிகளும் இந்தக் கலையைக் கற்றுக் கொள்ளக் கணேஷ் தையல், எம்பிராய்டரி பள்ளியைத் தொடங்கினேன்! பெண்மணிகள் ஒன்று கூடியதும் அதன் பிறகு மேற்கு மாம்பலம் மாதர் சங்கம் எழுந்தது'' என்று அதன் பூர்வ சரித்திரத்தைக் கூறினார் ஸ்ரீமதி சாரநாதன்.

ஏழெட்டுப் பத்துப்பேர் உள்ள மத்தியதரக் குடும்பத்தில் கணவன் ஒருவன் மட்டும் சம்பாதித்தால் மற்றவர்கள் அவன் கையை ஆவலோடு எதிர்பார்த்துத்தான் காத்திருப்பார்கள். அவன் ஒருவனுடைய வருவாயைக் கொண்டு பெருங் குடும்பத்தைச் சமாளிப்பது எப்படி? அந்தச் சமயத்தில் அந்தக் குடும்பத்தில் மனைவியும் தையல் வேலை கற்றுக் கொண்டு முப்பது, நாற்பது ரூபாய் வரு



ளமாகக் கொண்டு வந்தால் அது பெரும்
ாக்ஷேமாகத்தானே கருதப்படும்? நிஜ
கவே மேற்கு மாம்பலத்தில் இப்படி
தார்கள் வியாபாரி ஏற்ற நாளில் சிறிது
ுவாளைப் பெற்று வருவது அவர்கள்
)ம்பத்தைக் கடன் தொல்லையிலிருந்து
ளவு மீட்கத்தான் செய்கிறது.

''மாதர் சங்கத்துப் பெண்மணிகளுக்கு
ந்தர வருவாய் கிட்ட வேண்டுமானால்
ளி தைக்க நிரந்தர ஏற்பாடு ஏதாவது
ந்தால்தானே முடியும்?''

''ஆமாம்! காதி இலாகாவும், குடிசைத்
தொழில் சங்கத்தினரும் (Cottage Industries
ciety) நிரந்தரமாகத் துணிகளை நிறை
த் தைக்கக் கொடுத்து வருவதால் நிரந்தர
மய இருந்து வருகிறது. என். வி. வி.
டைகளும் தைத்துக் கொடுத்து வருகிறோம்.
து தவிர ஸில்க்சங்கள், சிறு துணிகள்
வைகளைக் கொண்டு அழகழகான குழந்
தைப் பொம்மைகளைத் தயாரித்து வரு
றோம். நாங்கள் தயாரித்த பொம்மைகளை
யல்லாம் எக்ஸிபிஷன் நடத்தி மக்களுக்கு
ப்ரிமுகப்படுத்தி யிருக்கிறோம்!''

''நவராத்திரிக் கொலுவிலும் அந்தப்
பொம்மைகளை நீங்கள் வைத்திருக்கலாம்!''

''எங்கள் வீட்டுக் குழந்தைகளைக் கொலு
வைத்து விட்டால் போச்சு. நாங்கள் தயா
ரித்த பொம்மைகள் எக்ஸிபிஷனுக்குப்
போனால்தானே வருவாய் வரும்!'' என்று
மாதர் சங்கத்தைச் சேர்ந்த பெண்மணி
யொருத்தி ஹாஸ்யத்தை உதிர்த்தாள்.

மேற்கு மாம்பலம், மாதர் சங்கத்தில் அறு
பது அங்கத்தினர்களுக்குமேல் இருக்கிறார்கள்.
பொழுது போக்குக்காக வருடத்துக்கொரு
முறை சோளிங்கபுரம், மகாபலிபுரம் முதலிய
இடங்களுக்குச் சுற்றுலா சென்று வந்திருக்
கிறார்கள். சென்ற மாதம்தான் குழந்தைகள்
ளைப் ஒன்றைத் தொடங்கியிருக்கிறார்கள்.

''எங்கள் சங்கத்தைச் சேர்ந்த சில பெண்
மணிகள் தீபாவளியை வெகு விமரிசையாகக்
கொண்டாடினார்கள். தையல் கலையில்
தேர்ந்த எங்கள் சங்கத்தைச் சேர்ந்த மாதர்
களுக்குத் தீபாவளிப் பரிசாக நாற்பது ரூபாய்
தையற்கூலி மூலம் கிடைத்ததென்றால் தீபா
வளியை விமரிசையாகக் கொண்டாடக்
கேட்பானேன்?'' என்று பெருமையுடன்
கூறினார் ஸ்ரீமதி சுந்தரம் சாரநாதன். மாதர்
களுக்குத் தாங்களே சம்பாதிப்பதிலுள்ள
ஆனந்தத்துக்கு ஈடு ஏது?

''ஆம்! இன்றுதான் ஆண்களோடு பெண்
களும் சரிநிகர் சமானமாக உத்தியோகம்
பார்க்கக் கிளம்பி விடுகிறார்களே! கணவனும்
மனைவியும் உத்தியோகம் பார்த்துச் சம்பா
திப்பது இப்போதைய 'பாஷன்' ஆயிற்றே!''

''பார்த்தேளா! நீங்கள் சொன்னதும்தான்
ஞாபகம் வந்தது. ஆபீஸ் போகும் பெண்
மணிகளுக்காக இரவில் தையல் வகுப்பு
நடத்தி வருகிறோம்!'' என்று கூறினார்
சங்கத்தின் தலைவி.

மேற்கு மாம்பலம் மாதர் சங்கத்தின்
காரியதரிசி ஸ்ரீமதி மகாலட்சுமி ராவ். இவரது
கணவர் அந்தமானில் இராணுவத்தில் பணி
யாற்றி வருகிறார். அதனால் இவர் முழு நேர
மும் மாதர் சங்க நடவடிக்கைகளில் கவ
னத்தைச் செலுத்த முடிகிறது.

டாக்டரின் மனைவியா யிருப்பவர்களுக்குத்
தியாக உணர்ச்சி அதிகமிருக்கும் என்று
சொல்வதுண்டு. அது மட்டுமல்ல; அவர்
களுக்குச் சேவை உணர்ச்சியும் நிறைய
உண்டு என்பதை மேற்கு மாம்பலம் மாதர்
சங்கத்தில் இரு டாக்டர்களின் மனைவிகள்
முக்கியப் பொறுப்பேற்றிருப்பதிலிருந்து நன்
றாகத் தெரிகிறது. மாதர் சங்கத்தின் போஷ
கர் ஸ்ரீமதி ருக்மிணி சௌரிராஜனும், உப
தலைவி ஸ்ரீமதி சாரதா ரகுராமனும் அந்த
உண்மையை நிரூபிப்பவர்கள்.

'திரிசங்கு சொர்க்க' நிலையிலுள்ள மேற்கு
மாம்பலம் விரைவில் சொர்க்க பூமியாகத்
திகழ மேற்கு மாம்பலம் மாதர் சங்கத்தின்
பணிகள் அடிகோலுமாக. — காமு

மேற்கு மாம்பலம் மாதர் சங்கத்தைச் சேர்ந்த அங்கத்தினர்கள்.



# எது நிஜம்?

நவநீ

பட்டணத்தில் நல்ல தேன் கிடைப்பது அரிது. அது கிடைத்தாலும் ஒரு நரி கிடைப்பது கஷ்டம். இரண்டும் கிடைத்தாலும் அந்தத் தேனை அந்த நரி குடிக்குமா என்று சொல்ல முடியாது. குடித்தாலும் அதற்குப் பின் அந்த நரி எப்படி இருக்கும் என்று பார்க்கப் போதுமான தைரியம் எல்லோருக்கும் இருந்துவிடாது: ஆகவே, நாராயணனை இப்போது பார்ப்பதுதான் தேன் குடித்த நரி எப்படி இருக்கும் என்று தெரிந்துகொள்ளச் சுலபமான வழி.

புதிய ஊரில் தன் நண்பன் நாகராஜனின் 'எலக்டிரிகல் ஷாப்'பில், மின்சாரம் என்றால் மீட்டரில் தருகிறீர்களா, லிட்டரில் விற்கிறீர்களா என்று கேட்கும் அளவுக்கு



அறிவு படைத்த நாராயணனை ஒரு நங்கை நல்லாள் பட்டப் பகலில் நெருங்கி வந்து, ''நீங்கள்தானே என் ராஜா?'' என்று கேட்டாள். அவன் ஆச்சரியப்படாமல் வேறென்ன பட முடியும்? அவன் காதுக்குள் ஐஸ்கிரீம் இறங்கியது போலிருந்தது. அதனால் காதுகளை மட்டும் ஒரு முறை சிலிர்த்துக் கொண்டான் அவன்.

வியப்பினால் மூக்குக் கண்ணாடியைத் தள்ளிக் கொண்டு விரிந்த தன் விழிகளால் நாராயணன் அவளை ஒரு முறை பார்த்தான். அவள் செவிடனிடம் பேசுவது போல், ''இந்தக் கடைக்குச் சொந்தக்காரரான மிஸ்டர் என். ராஜா என்பது நீங்கள்தானே?'' என்று உரக்கக் கூவி அவனை இவ்வுலகத்து(க்குக்) கொண்டு வந்தாள்.

நாராயணன் கடைக்கு வெளியே எ(ழுதி வைக்கப்பட்டி)ருந்த பெயர்ப் பலகையைப் பார்த்தா(ன்). 'உரிமையாளர்: என். ராஜன்' என்று எ(ழுதி)யிருந்தது. நாராயணன் அவளை மீண்(டும்) ஒரு முறை பார்த்தான்:

''நீங்கள்தானே பையனிடம் பே(னா) கொடுத்தீர்கள்?'' என்று ஒரு கேள்வி (கேட்)டாள் அவள்.

நாராயணன் திகைப்புக் கடலில் ந(ீந்)தினான். ''உங்களையே முதன் முத(லாக) இப்போதுதான் நான் பார்க்கிறேன். இத(ற்கு) முன்னால் உங்கள் பையனையோ பேரனை(யோ) நான் எங்கே பார்த்திருக்க முடியும்?'' என்று கூறினான்.

அவனை எரித்துவிடுகிற மாதிரி பார்த்தவ(ள்), ''மிஸ்டர்! எனக்கு இன்னும் கல்யாண(மே) ஆகவில்லை!'' என்று சீறினாள்.

''அதற்கு நான் என்ன செய்ய?'' என்(று) நாராயணன் முணுமுணுத்தான்.

''அவன் என் தம்பி. நீங்கள்தானே அ(வ)னுக்கு ஜோக் கொடுத்தீர்கள்?'' என்(று) மறுபடியும் கேட்டாள்.

''ஜோக்கா? நான் எந்தப் பத்திரிகைக்கு(ம்) ஜோக்குகள் எழுதி அனுப்புவதில்லையே!'' என்றான் நாராயணன்.

''அது வேறு வருமா?'' என்று தன் ப(ற்க)ளுக்கு முணுமுணுத்துக் கொண்டாள் அவள்.

''மிஸ்டர்! டியூப் லைட்டுக்குப் போடு(ம்) 'சோக்' இல்லே, சோக்! அதைப் பற்றி(க்) கேட்கிறேன்...''

''ஓ! சோக்!''

''அதேதான். உங்கள் ஒன்றரை ரூபாய் 'சோக்'கினால் ஒரு குழல் விளக்கே பாழாகியிருக்கிறது. என்ன செய்வது?''

''ஹி ஹி! என்ன செய்யலாம்? அதை(ப்) போய் அடிக்க முடியுமா, திட்ட முடியுமா? பாவம்! விட்டுத்தொலையுங்கள்!''

''விட்டுத் தொலைப்பதில்லை, மிஸ்டர். தொலைத்து விடுவது—உங்களை என்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறீர் என் தாத்தா. கண்ணியமாக வேறு டியூப் லைட்டைப் போட்டுக் கொடுத்து விட்டு மறு வேலை பாருங்கள்.''

''ஓ! கொடுத்துவிடலாமே. பிறகு மறு வேலை பார்க்கலாமே!'' என்று சொல்லி விட்டு, 'டியூப் லைட்டுக்கும் சோக்குக்கும் என்ன சம்பந்தம்?' என்று யோசிக்கலானான்.

'அவசரமாக ஓடி வா' என்று ஒரே வரியில் வந்த நாகராஜனின் கடிதத்தைப் படித்து விட்டு, சென்னையிலிருந்து செங்கோட்டைக்கு ஓடி ரயில் பிடித்து, ரயிலுக்குள்ளும் ஓடிக் கொண்டே இருந்து ஊர் வந்து சேர்ந்த நாராயணன், நாகராஜனின் கடைக்கு ஓடி

ஐ, அன்று அவன் இல்லாத அந்தச் சம
இல் கால்மேல் கால் போட்டுக் கொண்டு
ராஜா அமர்ந்து, தன்னுடைய முதல்
ாபாரமாக அவன் இந்தச் 'சோக்'
றதே வெற்றியின் முதல் படியாக — அதா
தோல்வியாக — அமைய வேண்டுமா?
சாய்ந்து போய் நாற்காலியில் சொத்
என்று விழுந்தான். எதிரிலிருந்த நீண்ட
கண்ணாடியில் தெரிந்த தன் உருவத்தில் மீசை
நப்பது அவன் கண்ணில் பட்டது. 'ஆ!
ன் மீசை முளைத்த ஆண்! இப்படி
ஒரு தொழுங்கைக் கோழைச் சாவா
வது? முதுகில் புண் படுவது புறநானூற்
காலத்திலிருந்தே வீரனுக்கு அழகல்
வ!' என்று வீர வார்த்தைகளை உளறிக்
கொண்டே ஆவேசமாக
ந்து வந்தான் நாராய
ன். கடை வாசலில்
ற அப் பெண்ணின்
பயர் தெரியாததால்
லோ மிஸ்... ஹலோ
ஸ்!'' என்று விளித்தான்.
ங்கே பார்க்கிறீங்க...?''
ன்றான்.

திரும்பி அவன், ''எனக்
கன்று ஒரு பெயர் இருக்
றது. நிர்மலா என்று''
ன்றாள் கடுகடு.

''மிஸ் நிர்மலா! மின்
யல் சரித்திரத்திலேயே
டையாது இப்படி 'சோக்'
ன்றிலும் ஒரு ஷெட்டே
பியூஸ்' ஆனதாக...''

''சரித்திரத்தில் இல்லா
ல் போகலாம். பூகோளத்
துலும் காணாமல் போகலாம்!
ங்கள் வீட்டில் அப்படிப்
பாயிருக்கிறதே மிஸ்டர்:
ன்ன சொல்கிறீர்கள்?''

பயந்து, கடைக்குஉள்ளே
றுத்தி வைக்கப்பட்டிருந்த
ணியில் இரண்டு மூன்று
படிகள் ஏறிவிட்டான் நாரா
யணன்.

'' நின்று கொல்லும்
தெய்வம் இங்கே வந்து விட்
டது...'' என்ற இன்னிசை
பக்கத்து ஹோட்டலின்
'ஜூக்பாக்'ஸிலிருந்து சூரல்
ழும்பி, நிர்மலாவின் கோலத்தை உணர்ச்சி
மயமானதாக்கிக் கொண்டிருந்தது.

நாராயணனுக்கும்தான் கோபம் வந்தது:
குருகைக்கும் தைரியம் வருமே, அது
போல.

''சரி, புறப்படுங்கள்'' என்றவாறு நாரா
யணன் தன் கோப நிலையிலிருந்தும் ஒரு படி
இறங்கினான்.

''எங்கே?'' என்றாள் நிர்மலா.

''உங்கள் வீட்டுக்குத்தான்.''

''சரி வாருங்கள், போவோம்.''

''மிஸ் நிர்மலா! உங்கள் வீட்டைப் பற்றித்
தெரிந்து கொள்ள வேண்டும். அப்போது
தான் அந்த 'டியூப் ஷெட் பியூஸ்' ஆன கார
ணத்தைக் கண்டுபிடிக்க முடியும்'' என்றான்.

''ஓ! முதலிலேயே சொல்லியிருந்தால்
எங்கள் வீட்டின் போட்டோவைக் கொண்டு
வந்திருப்பேனே... வீடு அழகாக இருந்தால்
ஷெட் பியூஸ் ஆகிவிடுமோ?''

''வீடு புராதனமாக இருந்தால் கூரையி
லிருந்து அடிக்கடி விழும் எதனோடாவது
ஷெட்டும் விழுந்து கெட்டிருக்கும் அல்லவா?''

''ஓஹோ! வந்து பாருங்கள்!'' என்ற
வாறு கன்னி முன்னே நடக்க, காளை அவளைப்
பின்தொடர்ந்தான்.

நாராயணன் பயபக்தியோடு அந்தக்
குழல் விளக்கைப் பார்த்தான். மனிதர்



களின் ஆசையைப் போல் அது எட்டாத
உயரத்தில் கவர்ச்சியாக நின்று கொண்
டிருந்தது.

''மிஸ் நிர்மலா! நான் என்ன நரியா? அது
என்ன திராட்சைப் பழமா?'' என்றான்.

''இரண்டாவது கேள்விக்கு நிச்சயமாகப்
பதில் சொல்ல முடியும். அது திராட்சைப்
பழம் இல்லே; டியூப் ஷெட்'' என்றபடி நிர்
மலா ஓர் உயரமான ஸ்டூலை எடுத்துக்
கொண்டு வந்து போட்டாள்.

ஸ்டூலின் மீது ஏறி நின்று குழல் விளக்கை
நடுக்கத்தோடு தொட்ட நாராயணன்,
அடுத்த விநாடி தான் உலகத்தை விட்டுப்
பல உயரத்துக்கு உயர்ந்து விட்டதாக
உணர்ந்தான். 'ஆமாம்! கீழே பார்த்தவ
னுக்கு எல்லா உயிரினங்களும் சின்னஞ் சிறி
யனவாகத் தெரிந்தன. யானையும், குதிரை
யும் சிங்கமுமாக எல்லாம் சிறிய பொம்மை
போல் தெரிந்தன. 'ஆ! இந்தக் குழல் விளக்



"கடன் வாங்கின ஒரு 'ஆப்டிமிஸ்'டிடம் வாங்கப்படாது. திரும்பி வரும் என்று நினைத்துக் கொண்டே இருப்பான். ஒரு 'பெஸிமிஸ்'டிடம் தான் வாங்கணும். திரும்பி ஒரு நாளும் வராதுன்னு நினைப்பான்."

ருந்தான் அலாவுதீனின் அற்புத விளக்கோ? தொட்டவுடன் மாயாஜாலங்கள் இப்படி நடக்கின்றனவே!' என்று வியந்தான். திடீரென்று பதற்றமடைந்து, "மிஸ் நிர்மலா! நீங்கள் எங்கே மறைந்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று கூறியவனாக எறும்பு அளவுக்கு ஓர் உருவத்தை எதிர்பார்த்துத் தரையைப் பார்வையால் அளந்தான். அவள் தன் சுய உருவத்தில் இருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டான். "இங்கம்!.. யாரோ..... தெத்து.... பெத்து..." என்று உளறினான்.

"ஓ! நீங்கள் ரிப்போர் பண்ணிவிடுங்கள். உங்களுக்கு எல்லாம் வாங்கித் தருகிறேன். அது, நவராத்திரிக் கொலு அடுக்குவதற்காகப் பெட்டியிலிருந்து இறக்கி வைத்த பொம்மைகள்" என்று அவள் சொன்னதில் அவனுக்கு அந்தக் குழல் விளக்கின் மந்திரமில்லாத தன்மையின்மேல் கோபம் வந்தது. ஸ்குருடிரைவர் இன்ன பிற எதுவும் இல்லாமலே படக்கென்று பறித்து இழுத்தான். அதிர்ஷ்டவசமாக குழல் விளக்கு முழுமையாகக் கையோடு வந்துவிட்டது. "ஆஹா! என்ன வெண்மை; என்ன மழமழப்பு!" என்று கொஞ்ச நேரம் ஆச்சரியப்பட்டான் நாராயணன்.

"மிஸ் நிர்மலா! கொஞ்சம் உங்கள் கையை நீட்டுங்கள்!" என்றான்.

"ஏன்?" என்ற கேள்வியோடு அவள் அப்படியே செய்தாள்.

அந்தக் கைக்குப் பக்கத்தில் குழல் விளக்கைப் பிடித்து "ஆஹா!" என்றான் நாராயணன்.

"என்ன ஆஹா?" என்றாள் அவள்.

"என்ன மென்மை! என்ன வெண்மை" என்றான்.

அப்போது அவள் பார்த்த பார்வை முன் அந்த பிழுவான குழல் விளக்கு மட்டும் நாராயணன் நன்றாகப் பிடித்திராவிட்டால், அது பிரமாதமாக எரிந்து, நீறும் போயிருக்கும்.

"மிஸ்டர்! அதை என் தாத்தாவுக்குச் சொல்கிறீர்களா? கூப்பிடுகிறேன்! என் என்னவென்று நினைத்து விட்டீர்?" என இடுப்பில் கையூன்றிக் கேட்டாள்.

"எலி, எலி" என்றான் நாராயணன்.

"என்ன?"

"அதோ பாருங்கள், எவ்வளவு கருகுப்பான எலி!" என்றான்.

பொம்மைகளுக்கு நடுவிலிருந்து ஓர் உருண்ட எலி பாய்ந்து வந்து நிர்மலாவின் முன்னால் நின்று—அவளை ஏறிட்டுப் பார்த்து வாலை ஒரு சுழற்றுச் சுழற்றியது.


அவ்வளவுதான். "ஹாங்ய்...க்" என்று கத்தியபடி நிர்மலா நாராயணன் நின்றிருந்த ஒரே சதுர அடி பரப்புள்ள இடத்துக்குத் தாவினாள்.

இந்த எதிர்பாராத நெருக்கத்தினால் நாராயணனுக்கு உடல் சிலிர்த்தது.


"என்ன நிர்மலா! என்ன இது கலாட்டா? யார் அவன்?" என்று தன் பயங்கர தொண்டையை உலகத்துக்கே கேட்கும் அளவுக்குக் கிழித்துக் காட்டியபடி வந்தது நிர்மலாவின் தாத்தாவே என்று யூகித்ததுதான் நாராயணன் கடைசியாகத் தன் சுய நினைவோடு செய்தது.

ஒரு சின்னக் கனவு. நாராயணன் அழகான குஷன் பொருத்திய கட்டிலில் கிடக்கிறான். வீரத் தழும்புகளும், பெருங் காயங்களும் மார்பையும் மூக்கையும் அணி செய்கின்றன. இளம் ரோஜா இதழ்கள்—இல்லை இல்லை; நிர்மலாவின் மெல்லிய தளிர் விரல்கள் அவன் நெற்றியைத் தொட்டுப் பார்க்கின்றன. பிறகு மார்பில் போடப்பட்டிருந்த கட்டுகளைத் தட்டிப் பார்க்கின்றன. மேற்கு கோதாவரி வெள்ளம் போல் பெருக்கெடுத்த மகிழ்ச்சியின் சூழலில் விழுந்து தத்தளித்தான் நாராயணன். 'கிச்சு கிச்சு' மூட்டப்பட்ட குழந்தை போல் கண்களை மூடிக்கொண்டே சிரித்து நெளிந்தான். "ஐயோ, வலி அதிகமாக ஆகிவிட்டாற்போல் இருக்கிறதே!" என்று அவள் எழுப்பிய வேதனைக் குரல் வீணை நரம்புகளை மீட்டுவது போல் அவன் உடல் நரம்புகளை மீட்டி இன்ப நாதத்தை எழுப்பியது. "கண்ணே! கண்ணே! கலங்காதே" என்று பாடிச் சமாதானப்படுத்த வாயை எடுத்தான்.

"தாத்தா! அவர் வேதனையால் முனகுகிறார் தாத்தா" என்று பிழற்றியது, மூக்கு அடைத்துக் கொண்ட குரல் இல்லை; டான்ஸில் ஆபரேஷன் செய்துகொண்ட கிளி



**சுவைபட ரொட்டி மீது தடவ உகந்தது அமுல் வெண்ணெய்**



அமுல் வெண்ணெய் தடவிய ரொட்டி, சாண்ட்விச்! ஆஹா, தெம்புதரும் சுவையோடு உங்கள் குடும்பத்தினருக்குச் சூரிய ஒளி வைட்டமின்களான ஏ, டி இரண்டின் நன்மைகளேயும் வழங்குவதற்கு அதுவே வழி. ஏடு திரண்ட தூய்மையான புத்தம்புது அமுல் வெண்ணெய், கடைந்தெடுத்த பண்ணைப் புதுமையோடு குத்தே மணி நேரத்தில் பால் பாண்டத்திலிருந்து வெண்ணெய் பொட்டணத்திற்கு மாறிப் பொன் மஞ்சள் நிற வில்லைகளாகப் புதுமை குன்றாமல் வருகிறது உங்கள் கைக்கு.

# அமுல் வெண்ணெய்

லே; சோகத்தால் குரல் கம்மிப் போன நிர்மலாதான்.

''என்னம்மா! அடிபட்ட தடியன் கொஞ்ச நேரம் அப்படித்தான் கிடப்பான். சீக்கிரம் எழுந்து கொள்கிறான். — எப்படி மலைபோல எழுந்து, அழகான சிங்கத்தையும், யானையையும் நொறுக்கிவிட்டான் பார் தடிக் கழுதை...!'' என்று நிர்மலாவின் தாத்தா முழக்கம் செய்தார்.

'சீ! பூனை வேஷத்தில் நுழைந்து கரடிக் கத்தல் கத்தாதீர்' என்று கூவ நினைத்த நாராயணன் அடுத்த நொடி தன்னைச் சுற்றிப் பூகம்பமே ஏற்படுவது போல உணர்ந்தான். வருவது நண்பன் நாகராஜன் அல்லவா!

நாராயணன் விழித்த நாராய்க் கிடந்தான். அவனால் எதுவும் பேச முடியவில்லை.

''வா தம்பி! வா! யார் இவன்? நீ இல்லாத போது கடையில் நுழைந்து வியாபாரம் பண்ணி யிருக்கிறானே!'' என்று தாத்தா கேட்டார்.

''இவனா தாத்தா? எமன்!'' என்றான் நாகராஜன்.

''எமன்?'' என்றபடி தாத்தா ஓரடி பின் வாங்கினார்.

''ஆமாம்!'' என்ற நாகராஜன், அது எப்படி என்று விளக்க ஆரம்பித்தான்: ''உங்கள் பேத்தி ஊரிலிருந்து வரப் போவதாகச் சொன்னீர்களே...''

''ஆமாம். நிர்மலாதானே? அவளும், அவள் தம்பியும் வந்து விட்டார்களே. வந்ததும் வராததுமாகத்தானே இந்தப் பிள்ளையாண்டானோடு சண்டையிட்டுக் கீழே உருட்டித் தள்ளிக் கட்டும் போட்டிருக்கிறாள்!'',

நிர்மலா வெட்கப்பட்டாள், வேதனைப்பட்டாள், துக்கப்பட்டாள், துயரப்பட்டாள்; கோபப்பட்டாள், கூச்சப்பட்டாள்.

''அந்த நிர்மலாவுக்காக நான் ஒருவனைப் பற்றிச் சொல்லவில்லை, என்னோடு படித்தவன், நல்லவன், கெட்டிக்காரன், நல்ல வேலையில் சென்னையில் இருக்கிறான் என்று?'' என்று தொடர்ந்தான் நாகராஜன்.

''ஆமாம், இது சம்பந்தமாக வரச் சொல்லி எழுதுவதாகச் சொன்னாய்...''

''அவனேதான் இந்த நாராயணன் என்ற எமன். எதற்காகச் சொல்வேன் என்றுகூடக் கேட்டுக் கொள்ளப் பொறுமை இல்லை இவனுக்கு. படிக்கும்போதுகூட முந்திரிக் கொட்டைதான். 'எட்டு அடி தாண்டு' என்று சொல்லுங்களேன்...''

''சேச்சே; வேண்டாம். அடிபட்டுப் படுத்துக் கிடக்கிறான்,—பாவம்!''

''ஊஹும்! எட்டு அடி தாண்டச் சொன்னால் பதினாறு அடி தாண்டுவான் என்று சொல்ல வந்தேன்.''

''பையன் நன்றாகத்தான் இருக்கிறான்'' என்றார் தாத்தா.

நிர்மலா பெண் இல்லையா? ஆகையால் அவளுக்கும் நாணம் எக்கச்சக்கமாக வந்ததில் வியப்பில்லை. நாராயணன் முகத்தை ஒயிலாக ஒரு முறை பார்த்து விட்டு மயிலாக வளைந்து உள்ளுக்கு ஓடி விட்டாள்.

அந்தக் கணத்தின் சிறப்பை, திருட்டுத் தனமாகத் திறந்த தன் ஒரு கண்ணால் ரசித்



''புதுப் படத்துக்கு எப்படியோ சிரமப் பட்டு இரண்டு டிக்கட்டுகள் வாங்கி வந்து விட்டேன்!''

''ரொம்ப சந்தோஷம். அப்ப நான் டிரஸ் பண்ணிக்க ஆரம்பிக்கிறேன்!''

''ஆமாம்! இப்பவே பிடிச்சுச் சட்டு புட்டுன்னு டிரஸ் செய்து கொள்ள ஆரம்பி. டிக்கட் நாளைக் காட்சிக்குத் தான் வாங்கி யிருக்கிறேன்!''

தான் நாராயணன்: கனவென்றால் இது வல்லவோ கனவு! நானும் நிர்மலாவும் ராக்கெட்டில் ஏறிக் கொண்டு ஹனி மூனுக்கும் ஹனிசன்னுக்கும் செல்வதும் கூட நடக்கட்டும் என்று மனமார வேண்டிக் கொண்டான் நாராயணன்.

''ஏ நாராய்! எழுந்திரடா தடியா! ஒரு கண் திறந்து பார்த்தால் பாதி மயக்கம் தெளிந்ததாக அர்த்தமா? இரண்டையும் திற!'' என்று இரைந்தபடி நாகராஜன் அவன் முதுகில் அறைந்தான்.

முதுகுத் தோலை மட்டும் சிலிர்த்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான் நாராயணன். ஆ! என்ன இது! இதோ இது உண்மையில் நாகராஜன்தான்? இது உண்மையில் நிர்மலாவின் தாத்தாதான். இது உண்மையில் நிர்மலா போட்ட கட்டுத்தான்!!!

''என்ன தம்பி, இப்போது உடம்பு பரவாயில்லையா? நிர்மலா! சூடாகக் காப்பி கொண்டு வாம்மா!'' என்று அவர் பீரங்கித் தொண்டையிலிருந்து வருவது உண்மையில் தென்றல், தேன், கனிவு, இனிமை, அது, இது!

நிர்மலா தயங்கித் தயங்கி உண்மையிலேயே காப்பி கொண்டு வந்தாள். ஆ! நாராயணனுக்குக் குழல் விளக்கின் வெளிச்சம் போல் பளிச்சென்று விளங்கிற்று. தான் கனவாக நினைத்ததெல்லாம் நிஜம்!

ஒரு முறை தேன் குடித்த நரியே மறு முறையும் குடிக்குமா என்று சொல்ல முடியாது. ஆகவே, இரண்டாம் முறையாகத் தேன் குடித்த நரி எப்படி இருக்கும் என்று தெரிந்து கொள்ள விரும்புபவர்கள் இப்போது நாராயணனின் முகத்தை ஒரு தடவை பார்க்கலாம்!

# நூறும் மூந்நூறும்

இத்தாலி தேசத்தில் ஒரு சமயம் பிரபல சாகித்யகர்த்தாவான வெர்டி என்னும் மேதையைப் பாராட்ட ஒரு விழா நடத்தினார்கள். அந்த விழாவில் பங்கு கொள்ள மற்றும் பிரபலமான டான்காஸினி, மாஸ்காஸினி போன்ற இசை வல்லுநர்களும் மிலான் நகரில் நடக்கவிருக்கும் அந்த விழாவுக்கு அழைக்கப்பட்டார்கள்.

மாஸ்காஸினிக்குத் தாம் டான்காஸினியை விட உயர்ந்தவர் என்ற எண்ணம் உண்டு; பொறாமைதான் காரணம். இருவருமே அப்போது இத்தாலியில் புகழேணியின் உச்சியில் இருப்பவர்கள். தம்மை அழைக்க வந்த விழா நிர்வாகிகளிடம் மாஸ்காஸினி ஒரு நிபந்தனை விதித்தார். தாம் பங்கு கொள்ளத் தயார் என்றும் ஆனால் டான்காஸினிக்குக் கொடுக்கப்படவிருக்கும் சன்மானத் தொகையைக் காட்டிலும் கூட ஒரு 'லீரா' நாணயமாவது தமக்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். நிர்வாகிகள் ஒப்புக் கொண்டார்கள்.

விழா நடந்து முடிந்தது. மாஸ்காஸினிக்குச் சேரவேண்டிய சன்மானத்தை மரியாதையுடன் தட்டில் வைத்து நீட்டினார்கள் நிர்வாகிகள். மாஸ்காஸினி திகைத்தார். தட்டில் ஒரே ஒரு 'லீரா' நாணயம் மாத்திரம் இருந்தது. அவருடைய ரகசிய நிபந்தனையை எப்படியோ தெரிந்துகொண்ட டான்காஸினி சன்மானம் ஏதும் இல்லாமலே தம் நிகழ்ச்சியை நடத்த ஒப்புக்கொண்டு விட்டார். பாவம் மாஸ்காஸினி! அவருடைய போட்டி மனப்பான்மையே அவர் காலை வாரிவிட்டது.

இதுபோன்ற போட்டிப் போராட்டங்களும் எதிர்பாராத திருப்பங்களும் முடிவுகளும் கலையுலகில் எந்தப் பாகங்களிலும் சகஜம் என்பதைத் தமிழ்த் திரைப் படங்களின் ஆரம்ப காலத்து சாகித்ய கர்த்தாவான இரு யானை வைத்தியநாதய்யரைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தபோது தெரிய வந்தது. முதன் முதலாக அவர் இத்துறையில் நுழைந்தபோதே அவர் கூடப் போட்டியும் நுழைந்தது. ஆனால் எதிர்பாராத வகையில் அவருக்குப் போட்டியாக வந்தவரே அவருக்கு நண்பராகி ஒரு மகத்தான உதவியும் செய்தாராம்.

வெளியூரிலிருந்த அவரை அக்கறையுள்ள ஒரு நண்பர் 1935-36ம் ஆண்டு வாக்கில் சென்னைக்கு வரவழைத்துச் சில சங்கீத சிட களுக்கு வழி வகுத்துக் கொடுத்த திரு வைத்தியநாதய்யர் அதுவரை இசை நம்பிப் பிழைப்பு நடத்திக் கொண்டிரு வில்லை. அவர் முறைப்படி யாரிடமும் குலவாசம் செய்து சங்கீதம் கற்றுக்கொ வும் இல்லை. உதவுபடியான சாரீரமும் கே ஞானமும் சேர்ந்து அவரை அவ்வப்போ இனிமையாகப் பாடத் தூண்டியது. கு பாக ஹிந்துஸ்தானி ராகங்களைப் பாடுவ ஆர்வம் அதிகம். அந்த ராகங்களிலும் நாடக மெட்டுக்களிலும் தாமாகவே ப களைக் கோத்துச் சாகித்தியங்களை உற்ப செய்து நண்பர்களிடம் பிருக்காக்களை உதி துப் பாடிக் காட்டுவதிலும் அவருக்கு வி பம் உண்டு. வாழ்க்கை நடத்த காரைக்கு தாவில் நகரத்தார் சமூக இளைஞர்கள் நட வந்த பொழுதுபோக்குக் கிளப்பின் வாகியாகப் பணியாற்றினார். பிர்க்காக்க உதிர்க்காதபோது பில்லியர்ட்ஸும் ஆ ஆடுவதுண்டு.

மதுரை முருகன் டாக்கீஸ் உரிமையாள களில் ஒருவரான புளியடி குப்புசா ஐயர், சென்னைக்கு வைத்தியநாதய்யர் வந் சேர்ந்திருப்பதைக் கேள்விப்பட்டு அவரை தம் இருப்பிடத்துக்கு வரவழைத்தார். இ வரும் ஆதி நாட்களில் மதுரையில் ஒ பள்ளிக்கூடத்தில் படித்தவர்கள்.

''என்ன யானை! நீ பாடுகிறாய்! பாட்டு சொல்லித் தருகிறாய்! ஏன் நீ நம் திரை படம் ஒன்றுக்குப் பாடல்கள் எழுதிக் கொடு க்கக்கூடாது?'' என்று உரிமையுடன் கேட்டார்

வைத்தியநாதய்யருக்கு இந்தத் துறை முற்றிலும் புதிது. ஆனாலும் நண்பர்க கேட்ட விதம் உற்சா மளிக்கக் கூடியதா இருந்தது.

''ஆஹா! அத கென்ன? முயற்சி செய்து பார்க்கலாம்'' என்று அவர் பிடி கொடாத முறையில்.

''முயற்சி செய்வதா வது? இப்போதே செய்! நாங்கள் எடுக்கவிருக்கும் துளசிதாஸ் படத்தில் வரும் நான்கு சந்தர்ப் பங்களைச் சொல்லச் சொல்கிறேன். அதற்குத் தருந்தாற்போல் நான்கு பாடல்கள் எழுதிக் கொண்டு வா! உனக்கு என்ன வேண்டும்?'' என் றார் குப்புசாமி.

''ஒரு பேனா, கொஞ் சம் பேப்பர், நிம்மதி யான இடம், இரண்டு



யானை வைத்தியநாதய்யர்

ளி அவகாசம்'' என்ற பதில் ரோஷத்துடன் வந்தது.

ஒன்றேமுக்கால் மணி நேர அவகாசத்துக்குள்ளாகவே தயாரான நான்கு முழுப் பாடல்களையும் கண்டு படத் தயாரிப்பாளர் குப்புசாமியும் அவருடைய விமரிசக நண்பர்களும் வியப்படைந்தனர். அவைகளை எழுதியவரைக் கொண்டே பாடக் கேட்டுப் பிரமிப்படைந்தனர்.

''யாரே! இந்தப் படத்துக்கான எல்லாப் பாடல்களையுமே நீதான் எழுதப் போகிறாய்'' என்றார் குப்புசாமி உற்சாகத்துடன்.

ஆனால் அவர் வார்த்தைகள் பொய்யாகப் போக வேண்டிய அவசியம் எதிர்பாராமல் ஏற்பட்டு விட்டது. முருகன் டாக்கீஸின் மற்றொரு நிர்வாகி ஏற்கனவே இந்தத் துளசிதாஸ் படத்துக்கான வசனங்களையும் பாடல்களையும் எழுத நாகப்பட்டினம் ஆசாமி ஒருவருக்கு அழைப்பு விட்டிருந்தார். அந்த ஆசாமியும் வந்து சேர்ந்துவிட்டார். அவரைப் படத்துக்கான வசனங்களை மாத்திரம் எழுதித் தரும்படி கேட்டபோது அவர் சீறினார். ''என்னை எதற்காகக் கூப்பிட்டீர்களோ அந்த வேலையை என்னிடம் ஒப்படைத்தாக வேண்டும்! இந்த அரைகுறை வேலைகளுக்கு நான் தயாரில்லை'' என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசி விட்டார். போட்டியை அவர் சகிப்பாரா?

படத் தயாரிப்பாளர்களுக்குத் தர்ம சங்கடமான நிலை. வைத்தியநாதய்யரிடம் வந்து நிலைமையை விளக்கி அவரை மற்றொரு சந்தர்ப்பத்தில் பயன்படுத்திக் கொள்வதாக வேண்டுகோள் விடுத்தார்கள். இருநூறு ரூபாயும் முதன் முதலில் படப் பாடல் எழுதிய பார்க்கர் பேனாவையும் அன்பளிப்பாகக் கொடுத்து அனுப்பினார்கள்.

''இப்படித்தான் என் முதல் முயற்சி. என் உழைப்பு தேவைப்படாத ஊதியத்தைக் கொடுத்தது. பல படங்களுக்குப் பாடல் எழுதி அனுபவம் பெற்று அந்தத் துறையிலிருந்து விலகும்போதும் இதே அனுபவம் எனக்குக் கிடைத்தது. 'பூக்காரி' என்ற படத்துக்குப் பாடல்கள் எழுத என்னை ஏற்பாடு செய்து கொஞ்சம் கணிசமாகவே பணமும் கொடுத்தார்கள். ஆனால் அந்தப் படம் ஆரம்பமாகாமலேயே கைவிடப்பட்டு விட்டது. கடைசியிலும் உழைப்பில்லாத ஊதியத்துக்கு ஒரு சந்தர்ப்பம். இந்தத் துறையில் என் அனுபவம் எப்படி ஆரம்பித்ததோ, அப்படியே முடிந்தது'' என்று குறிப்பிட்டார் வைத்தியநாதய்யர் உணர்ச்சி பொங்க!

முருகன் டாக்கீஸுக்கு வந்த நாகப்பட்டினம் ஆசாமி தம் போட்டியை ஆரம்பத்தில் காட்டினாலும் பிறகு அந்தப் போட்டியை நட்பாக மாற்றினார். திரு முருகதாஸா தயாரிக்கவிருந்த 'சுந்தரமூர்த்தி நாயனார்' என்னும் படத்தில் தமக்குப் பாட்டு எழுதக் கிடைத்த வாய்ப்பைப் பலத்த சிபாரிசுடன் வைத்தியநாதய்யருக்கு மாற்றினார். சுந்தரர் தேவாரத்துக்குத் துணையாகப் பல நல்ல பாடல்கள் எழுத அவருக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் பாடல் எழுதி வெளி



''கவிகள் வர்ணிப்பது போல் நம் நாடெங்கும் பாலும் தேனும் ஆறாக ஓடினால் எப்படி இருக்கும்?''

''ஒரே ஈயும் எறும்புமா பிடுங்கித் தின்னும்!''

வந்த முதல் படம் சுந்தரமூர்த்தி நாயனார் தான். ஆனாலும் இதில் அவர் அமைத்த ஒரு பாட்டின் மெட்டு இந்தக் காலம் போலவே அந்தக் காலத்திலும் எப்படியோ திருட்டுப் போய்ச் சுந்தரமூர்த்தி நாயனாருக்கு முன் அவசரமாக வெளியிடப்பட்ட மற்றொரு படத்தில் ஒலித்து விட்டது.

''பாட்டு எழுதியவருக்கும், பாடியவருக்கும், இந்த மெட்டில் ஏற்கனவே ஒரு பாட்டு 'ரிக்கார்டு' ஆகிவிட்டது என்பது தெரியாது. சுந்தரமூர்த்தி நாயனார் படப் பிடிப்புக்கு அவ்வப்போது வந்து போய்க் கொண்டிருந்த ஓர் ஆசாமி மாண்டு ராகத்தில் 'இன்பமே நிறை இல்லற வாழ்வு இதுவே சுக வாழ்வு' என்ற என் பாட்டைக் கேட்டு விட்டு அந்த மற்றொரு படப்பிடிப்பு நடந்த இடத்தில் போய் முணுமுணுத்திருக்கிறார். 'சந்திர சூரியர் போம் திசை மாறினும் வீழினும் நமக்கென்ன' என்ற புதுப் பாட்டு முன்னால் ஒலித்து விட்டது. நான் அந்த மெட்டைக் காப்பியடித்து விட்டேன் என்ற அவப்பெயர். காரணம் சுந்தரமூர்த்தி நாயனார் கொஞ்சம் கொஞ்சமாகப் பின்தங்கி வந்ததுதான். ஆனால் விவரம் தெரிந்த பிறகு அதைப் பாடியவர் என் பரம நண்பராகி விட்டார். அவர் வேறு யாருமில்லை! காலம் சென்ற திரு எம். கே. தியாகராஜ பாகவதர்தான்'' என்றார்.

அந்த நாட்களில் பாடல்கள் எழுதுபவர்கள் பாட்டுக்களை நன்கு சொல்லிக் கொடுக்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டிய அவசியம் இருந்தது. இப்போதுபோல் பின்னணி பாடும் வழக்கம் அமுலுக்கு வரவில்லை. ஓரளவு பாடத் தெரிந்தவர்களுக்கே நடிக்கவும் வாய்ப்புக் கிடைத்தது. அவர்களை நன்கு பாட வைக்கும் பொறுப்பு இந்த சாகித்ய கர்த்தாக்களை வந்தடையும். பாட்டுக்குத் தகுந்த பின்னணி தானே தவிர இந்த நாட்கள் போல் பின்னணிக்குத் தகுந்த பாட்டுக்கள் இல்லை! இந்த வகையில் சுமார் முப்பது படங்களுக்குப் பாடல்கள் எழுதிய

இவர் முப்பதுக்கு மேற்பட்ட நல்ல பாடக பாடல்களை உருவாக்கி யிருக்கிறார்.

காலம் சென்ற திரு என். எஸ். கிருஷ்ணன் கோவை ஸ்டுடியோ ஒன்றில் தம் 'அலிபாபா' படம் தயாரித்த சமயம். அந்தப் படத்தில் இரண்டு மூன்று பாடல்கள் உடனடியாகத் தேவையாக இருந்தன. குறுகிய அவகாசத்தில் தேவையான பாடல்களை எழுதிக் கொடுப்பவர் என்று சினிமா வட்டாரத்தில் வைத்தியநாதய்யருக்கு நல்ல பெயர். ஆகவே என். எஸ். கே. வைத்தியநாதய்யருக்கு ஆள் அனுப்பினார்.

கோவைக்குப் போய்ச் சேர்ந்த இரண்டு மூன்று நாட்களிலேயே பாடல்களை எழுதிக் கொடுத்தாகி விட்டது. ஊதியமாகப் பேசிய முந்நூறு ரூபாயில் நூறு ரூபாய் பாக்கி வர வேண்டியிருந்தது. அதையும் வாங்கிக் கொண்டு போகலாமே என்று படக் கம்பெனியில் தங்கி யிருந்தார்.

ஒரு நாள் காலை. கம்பெனிச் சிப்பந்தி ஒருவனைக் கூப்பிட்டுக் காப்பி கொண்டு வரும்படி சொன்னார். அவன் தலையை ஆட்டிவிட்டுப் போயே போய் விட்டான்! ஒரு மணி நேரமாயிற்று. ஆளையும் காணோம். காப்பியையும் காணோம். அவருக்குக் கோபம் வந்து விட்டது. அந்தப் பக்கமாக வந்த ஸ்ரீமதி மதுரத்திடம் நடந்ததைச் சொல்லிவிட்டு, ''அவசியத்துக்கு மேலே அதிக நாள் உட்கார்ந்தால் இப்படித்தான் மரியாதை கிடைக்கும் போலிருக்கிறது'' என்றார்.

ஸ்ரீமதி மதுரம் உடனடியாகக் கைகளைத் தட்டி ஒரு வேலையாளைக் கூப்பிட்டுக் காப்பி கொண்டு வரும்படி சொன்னார். இரண்டாவது நிமிடத்தில் காப்பி வந்தது. காப்பிக் குவளையைக் கையில் வாங்கிக் கொண்டு, ''ஏனையா! அந்த மனிதர் காப்பி கேட்டு ஒரு மணி நேரமாகிறது. காப்பி இருக்கிற இடமே தெரியலே! நான் கேட்டதும் பல்லைக் காட்டிக்கொண்டு காப்பியுடன் ஓடி வருகிறாயே, அவர் யார் தெரியுமா? எனக்கே வாத்தியார்! இந்தக் காப்பியை அவர் முன்னாலும் வைத்து விட்டு மன்னிப்புக் கேள்!'' என்று கண்டிப்பாக மாறினார்.

சற்று நேரத்துக்கெல்லாம் இந்த விஷயம் என். எஸ். கே. காதுக்கும் எட்டியது. அவர் அவசரம் அவசரமாக வந்தார். ''வாத்தியார்! மன்னிக்கணும். உங்க விஷயத்தை மறந்து விட்டேன். நான் இப்போது மகிழ்ச்சியுடன் இருக்கிறேன். உங்களுக்கு என்ன வேண்டுமோ கேளுங்கள்!'' என்றார்.

''நூறு ரூபாய் வரணும். கொடுத்தால் பட்டினத்திற்குப் புறப்பட்டு விடுவேன்.''

''என்ன இப்படிப் பிழைக்கத் தெரியாத மனிதர்களாக இருக்கிறீர்கள். நான்தான் ஒரு கோடி காட்டினேனே! நிறையக் கேட்கக் கூடாதோ? ஹூம். என் முன் நூறு கேட்டீர். நான் முந்நூறாகவே கொடுக்கிறேன்'' என்று சிலேடையாகச் சிரித்து முந்நூறு ரூபாய்களைக் கொடுத்து அனுப்பினார்!

மற்றொரு சந்தர்ப்பம். பாதி ராத்திரி வேளை. வாசலில் கார் வந்து நின்றது. திரு தியாகராஜ பாகவதர் 'ரிக்கார்டிங்' அறையில் இருப்பதாகவும் உடனடியாக வைத்தியநாதய்யரை அழைத்து வரச் சொன்னதாகவும் டிரைவர் தெரிவித்தார். 'சாயங்காலம் கூடப் பேசிக் கொண்டிருந்தாரே! ஒன்றும் சொல்லவில்லையே! இப்போது என்ன அவசரம்?' என்று நினைத்துக் கொண்டே அவர் கிளம்பினார் காரில்.

அங்கு போன பிறகுதான் அவசரத்தின் காரணம் புரிந்தது. திருநீலகண்டர் படத்துக்கான 'நீலகண்டா! நீலகண்டா! நித்திய நிர்மல நிரஞ்சன நீலகண்டா' என்ற பாட்டு ஒலிப்பதிவாக வேண்டிய நேரம். அது சிவன் அவர்களின் சாகித்தியம். அதைத் துரித காலத்தில் இரண்டு நாட்களுக்கு முன் பாகவதருக்குப் பாடிக்காண்பித்த சிவன் அவர்கள் இரண்டு சங்கதிகளை அந்த அடியில் புகுத்திப் பாடிக் காண்பித்திருக்கிறார். அவை தியாகராஜ பாகவதரைக் கவர்ந்திருந்தன. ஆனால் ஒலிப் பதிவு நேரத்தில் அந்த முறை மறந்து போய்விட்டது. மீண்டும் பாடிக் காண்பிக்க, தான் அந்த அர்த்தராத்திரி அழைப்பு. அழைப்பின் விளைவு பாட்டுக்கு வெற்றி!

* * *

கே: உங்களை யானை வைத்தியநாதய்யர் என்று அழைக்கிறார்களே! நீங்கள் அப்படி இரட்டைநாடியாகக் கூட இல்லையே!

பதில்: யானைக்கும் என் உருவத்துக்கும் இப்போது சம்பந்தமில்லை. நான் சிறு குழந்தையாக இருந்தபோது யானை மாதிரி தவழ்ந்து விளையாடுவதும் ஈடுபாடு உடையவனும். பெரியவர்கள் செல்லமாக 'யானை யானை' என்று அழைத்தது பெயருக்கு முன் நிரந்தரமாக ஒட்டிக்கொண்டு விட்டது!

கே: முதன் முதலாக முருகன் டாக்கீஸார் உங்களுக்கு அச்சாரம் கொடுத்தார்களே! பிறகு எப்போதாவது பயன்படுத்திக் கொண்டார்களோ?

பதில்: பேஷாய்ப் பயன்படுத்திக் கொண்டார்கள். 'ரம்பையின் காதல்' என்ற அவர்களுடைய படத்தில் முழுக்க முழுக்க எனக்கு வாய்ப்பு அளித்தார்கள். அந்தப் படம் இன்றும் பணம் கொடுக்கிறது தயாரிப்பாளர்களுக்கு.

கே: இந்தத் துறையிலிருந்து நீங்கள் சீக்கிரமே ஓய்வு பெற்றுவிட்டதாகத் தெரிகிறது. ஏன்?

பதில்: கால வளர்ச்சியை அனுசரிக்க வேண்டாமா? இது மின்னணு யுகம். பாடுபவர்களை விடப் பக்க வாத்தியங்கள் பிரதானம் பெறும் யுகம்! நாங்களெல்லாம் சொல்லுக்கும் பொருளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வந்தோம். இப்போது ஒலிக்கும் ஓசைக்கும் மோகம். அதற்கு ஈடு கொடுப்பவர்களால்தானே சமாளிக்க முடியும்?

* * *

அறுபது வயதைக் கடந்த யானை வைத்தியநாதய்யரின் இன்றைய கவனத்தைக் கவர்வது சம்பிரதாயமான பாடல்களும், கலகலப்பான பேரக் குழந்தைகளும். யார் எப்படிப் பாடினாலும் பொறுமையுடன் தவற்றைச் சுட்டிக் காட்டிச் சரியானபடி பாடிக் காட்டுவதும் அவருடைய பொழுதுபோக்கு.

— கோமதி சுவாமிநாதன்

நெருக்கமான நெசவு, நீடித்த உழைப்பு,
பூர்த்தியழகு எல்லாவற்றிலும்

# கோத்தாரி மல்கள்

## மேம்பட்டவை


### லாங்கிளாத்துகளுங் கூட!

...ஏனென்றால்

- கோத்தாரி மல்கள், லாங்கிளாத்துகளை தயாரிக்க பயன்படும் நூல் உயர்ந்தரகக் கோத்தாரி நூலாகும்
- சுயமாக இயங்கும் விசைத்தறியில் நூலிழைகள் நெருக்கமாக நெய்யப்படுகின்றன.

எப்பொழுதும் கோத்தாரி மல் எம். 7 என்றும் லாங்கிளாத் எல். 1 அல்லது எல். 2 என்றும் பெயரைக் குறிப்பிட்டுக் கேளுங்கள்.

இந்த டிரேட் மார்க்கையும் கவனியுங்கள்




தயாரிப்பாளர்கள்:
**கோத்தாரி டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்**
சிங்காநல்லூர், கோயமுத்தூர்
[illegible]
இந்தியன் ஸ்டாண்டர்ட் இன்டஸ்ட்ரீஸ்
மானேஜிங் ஏஜண்டுகள்:
**கோத்தாரி & ஸன்ஸ்**
ஓரியண்டல் பில்டிங்ஸ்,
அரமனைக்காரத் தெரு,
சென்னை-1.

# திரிசங்கு



## கார்த்திகைபாலன்

மானேஜர் என்றால் நிர்வாகி என்று அர்த்தம். அதற்காகவேதான் போலிருக்கிறது. என்னை இந்தக் கம்பெனியின் நிர்வாகி ஆக்கி, அதன் முழுப் பொறுப்புக்களையும் என்மீது சுமத்தினார் செட்டியார்; எங்கள் செட்டியாருக்குப் பூர்வீகம் வல்ல நாடு; மிளகாய் வியாபாரம், அவர் கண்களிலே மிளகாய்ப் பொடி வைத்துத் தூவாமல், அதிர்ஷ்டத்தைத் தூவியது. சீதேவியின் 'ரெண்ட் ஹவுஸ்' ஆனது அவரது மனை. அதனுல் சென்ற வருஷம் இந்த டயர் கம்பெனியை 'ஒட்டிக்கு ரெட்டி' கொடுத்து விலைக்கு வாங்கி என்னை மானேஜர் ஆக்கினார்.

எப்படியோ இந்தக் கம்பெனியை உச்ச நிலைக்குக் கொண்டு வந்து விட வேண்டும் என்ற தீராத ஆசை என் ரத்தத்தில் இரண்டறக் கலந்து விட்டது. என் முதலாளி நல்லவர்; அவர் போட்ட முதலை எடுத்துக் காட்டி விடவேண்டும்! வாங்கும் சம்பளம் ஒட்ட வேண்டாமா? ஆகவே, அல்லும் பகலும் உழைத்தேன். நாணயமான வாடிக்கையாளர்கள் சிலரை ஒப்பந்தம் செய்தேன். ஈரோடு பெரிய பஸ் கம்பெனிகளின் அன்பும் ஆதரவும் கிடைத்தன.

எனக்கு ஊர் நாட்டுச்சாலை. பட்டிக்காட வசதிகள் கூடுதல். பெண்டு பிள்ளைகளைப் பார்த்து விட்டுத் திரும்பினேன், அன்றைக்கு.

போர்மென் கருப்பையாவிடம் கொடுத்து விட்டுப் போயிருந்த ரப்பர் டின் – காஷ் கணக்கு விவரங்களை வாங்கிக் கொண்டு, குளியலை முடித்து விட்டு நாற்காலியில் அமர்ந்தேன். பக்கத்து மாதாகோவிலில் எட்டு மணி அடித்தார்கள். பட்டையை அலைந்து வெண்சாமரம் வீசியது இளங்காலைக் காற்று. மேஜை டிராயரை இழுத்துப் பூட்டிக் கொண்டு கொல்லைப்புற ஷெட்டுக்குப் போனேன்.

கீழ்ப் பகுதியில் ரப்பர் ஒட்டப்பட்டு வந்த டயர்கள் மூன்று கிடந்தன. இப்படி வரும் டயர்களை நாங்கள் கூலிக்குப் புதுப்பித்துக் கொடுப்பதுண்டு. முழு வட்ட அச்சுக்களைக் கொண்ட உயர்ந்த ரக மெஷினில் போட்டு இறக்கும் டயர்களின் 'பட்டன்' எடுப்பாக மின்னும்!

பாய்லர் அடுப்பு காளவாயாக உருக் கொண்டிருந்தது. சொந்த விற்பனைக்கு 'ரெடி டயர்கள் போட்டு விற்பதற்கான அலுவல்களில் தொழிலாளத் தோழர்கள் மும்முரமாக ஈடுபாடு செலுத்தினர். வடக்குப் பக்கத்தில் டயர்களை உரைத்துக் கொண்டிருந்தார்கள் இரு சிறுவர்கள். ஒருவனைப் பார்த்ததும் எனக்கு அதிசயம் தெறித்தது. ''என்ன தம்பி, அதிசயம்! நீயா உழைக்கிறே?'' என்று கேட்டேன்.

பையன் அதிசயம் பணிவுடன் சிரித்து, ''ஆமாங்க ஸார்!'' என்றான்.

அதற்குள் 'போர்மென்' வந்து, ''மூர்த்தி வரவில்லை. மேலுக்குச் சுகமில்லையாம். சலி கொடுத்திட்டதாகச் சொல்லி இவனை அழைச்சேன், ஸார்!'' என்றார். இவர் கொஞ்ச காலம் அக்கரைச் சீமையை நாடிப் போய் வந்தவர்.

பையனைத் தட்டிக் கொடுத்து விட்டுத் திரும்பினேன்.

பையன் அதிசயம் மூன்றாம் கட்டையை வெகு எழிலுடன் – ஆனால் அழுத்தமுடன் பிடித்தவனாக, டயரை உரைத்துக் கொண்டிருந்தான். பக்கத்துச் சந்தில்தான் அவனுக்கு வீடு. கூரைக் கட்டு: ஐந்து ரூபாய் கனிவாக வாடகை கொடுக்கிறார்களாம். ''அம்மா ஒண்டிதான்; அப்பா... அப்பா வந்து மெட்ராஸிலே.... வேறே ஒரு பொம்பிளையோட சாவாசம் வைச்சுக்கிட்டு இருக்காராம்! நான் அவர் முகத்தை விவரம் புரிஞ்ச ஒருவாட்டி கூடப் பார்த்ததில்லேங்க, ஸார்! எங்களைக் கர்த்தர்தான் காப்பாத்தணும்!'' என்றான். கிழிசல் சட்டை முனையை விழி மூலைக்குக் கொண்டு போனான். மூக்கை உறிஞ்சினான்!

என் மனம் கசிந்தது. இந்த ஒரு நிலைதான் என்னுடையது. ஆனால், இந்த ஒரு வாய் வேதாந்தத்துடன் சும்மா இருந்து விட்டேன் என்றுதானே நினைக்கப் போகிறீர்கள்? அதுதான் தவறு. பத்துக் காசு என் பெயரில் பெட்டியில் பற்று எழுதிக் கொண்டு கொடுத்தேன். இந்தப் பத்துக் காசை 'பார்ட்டி காப்பிச் செலவு' என்று சிலர் மாதிரி கம்பெனிக் கணக்கில் எழுதிவிடலாம் ஆனால் இது 'மனிதன்' செய்கிற காரியமா? இன்னே செய்தவர்கள் 'கூலி' பெறும் கதை எனக்குத் தெரியாததா? சரி!

அன்றிலிருந்து அதிசயம் இங்கு வருவான், போவான் – பள்ளி முடிந்த வேளைகளிலே!

நாலு வீடுகளிலே வாசல் பெருக்கி, தண்ணீர் பிடித்துக் கொட்டி, எடுபிடி வேலைகள் செய்து

நல் பிள்ளையைக் காப்பாற்றி வரும் அதிசயத்தின் அன்னை எப்போதும் புகழ்ச்சிக்கு உரியவளே !

இன்று அவனுக்கு மகிழ்ச்சி பொங்கிக் கொண்டிருந்தது. இன்னும் சற்று நேரத்தில் 'வவுச்சர்'ல் கையெழுத்துச் செய்து விட்டு இரண்டு ரூபாய் கூலி வாங்கிக் கொள்ளப் போகிறான் அல்லவா? அவனுடைய பொறுப்பான பாங்கும் கடமை உணர்ச்சியும் எனக்கும் பிடித்திருந்தன. ''அம்மாவுக்கு ரெண்டு நாட்களாக ஜுரம். அதான் நானும் லீவு போட்டுப்புட்டேன். உங்க தயவிலேதான் இன்னிக்குக் கதை ஓட வேணும்!'' நயமான பேச்சு. என் தயவென்ன? என் உரிமையாளர் பணத்தையல்லவா நான் கொடுக்கப் போகிறேன்? உலகம் ரொம்ப வேடிக்கையானது ! இல்லையென்றால், பையன் வைத்த 'ஐஸ்' என் வாயைக் கட்டிப் போட்டிருக்குமா?

திடீரென்று ஏதோ ஞாபகம் மூளவே, மாடிக்கு விரைந்தேன். காலி டப்பாக்கள் சில மொட்டை மாடியின் மேலண்டைப் பக்கம் போடப்பட்டிருந்தன. அவற்றைத் தேடினேன். இல்லை. கீழே போனேன். தொழிலாளர்களின் தலைவர் வேர்வையைத் துடைத்துக் கொண்டு மட்டும் எனக்குப் பொறுமை எவ்வாறுதான் இருந்ததோ ? தனியே அழைத்தேன். விவரம் சொன்னேன். எச்சரித்தேன், இரண்டாம் முறையாக. முறை கெட்ட இந்தச் செயலை எப்படியும் கண்டுபிடித்துக் கொடுப்பதாக வாக்கு மொழிந்தார்.

திரும்பினால் அதிசயத்தின் அம்மா வந்திருந்தாள். நலிவுற்றுக் காணப்பட்டாள்.

''வாங்கம்மா!'' என்றேன்.

என் அன்னையின் ஞாபகம் வந்து விட்டது.

''என் பையனைப் பார்க்கணுமுங்கோ !'' என்றாள்.

அதிசயத்தை விளித்தேன்.

''எனக்கு மேலுக்கு முடியலே. சுக்குக் காப்பி வைச்சேன். அதிலே துளி மகனுக்கும் கொண்டாந்தேன். வேலை செய்த பையன் களைச்சிருப்பானுங்க !''

என் உள்ளம் புல்லரித்தது.

வேர்வைக் கோலம் புனைந்து வந்தான் அதிசயம். பிரசு சொக்காய் தோளில் கிடந்தது. வந்தவன், பெற்றவளைக் கண்டு சிரித்தவாறு, சுக்குக் காப்பியை வாங்கிக் குடித்தான். —''இரும்மா, பணம் வாங்கிட்டு நானும் வந்திடறேன் !''



அந்தி வானத்தின் விந்தைக் கோலங்கள் மலர்ந்திருந்தன.

வசூலுக்குப் போன நான் அப்போதுதான் மீண்டேன். ஆயிரத்து முந்நூறு ரூபாய் பாக்கியை நிறுத்தி வைத்த ஒரு 'புண்ணியவான்' என் பாவத்தை அள்ளிக் கொட்டிக் கொள்ளப் பல முறை அலையவிட்டு, இன்று ஐம்பது ரூபாய் 'பெரிய மனசு' பண்ணிக் கொடுத்திருந்தார். சட்டைப் பையில் போட்டுக் கொண்டு கம்பெனிக்கு வந்தேன். அசதி மிகுதி. ஆகவே மாடிக்குப் போய்ச் சட்டையைக் கழற்றிக் கொடியில் போட்டு விட்டு, பாயை விரித்து முடங்கினேன். வேலை நேரம் முடிந்ததால், எல்லோரும் போய் விட்டார்கள். நடராஜன்தான் மிச்சம். அவன் கீழே காவல்.

நடராஜன் மேலே வந்தான். ''வாத்தியார் ஸார் வந்திருக்காங்க!'' என்றான்.

உடனே படி இறங்கிக் கீழே வந்தேன். ''வாங்க!'' என்று வந்தவரை வரவேற்றேன். அவரோடு அரை நாழிகை பேசிக் கொண்டிருந்து விட்டு மறுபடியும் மேலே சென்றேன்.

சிறிது நேரம் காலாறப் போய் வந்தால் என்ன என்று தோன்றியது. வசூலான ஐம்பது ரூபாய் பணத்தைப் பீரோவில் வைத்துப் பூட்டி விட்டுப் புறப்படுவோம் என்று எண்ணிக் கொடியில் கிடந்த என் சட்டைப் பையைப் பார்த்தேன்! ஐம்பது ரூபாய் இல்லை! என்ன செய்வேன்? நான் இந்த ஐம்பது ரூபாய் நஷ்டத்தைத் தாங்க முடியாதே ! கடவுளே! ஒன்று இரண்டு என்றும் சமாளிக்கலாம்.

எனக்குச் 'சுரீர்' என்றது. கீழே வந்தேன். நடராஜன் உட்கார்ந்திருந்தவன் எழுந்தான். அவன் அரிச்சந்திரன்! எடுத்திருக்க மாட்டான். ஷெட் பக்கம் போனேன். அங்கு டவரைப் பார்த்தபடி அதிசயம் நின்று கொண்டிருந்தான். 'ஒரு வேளை இவன்? சே! எவ்வளவு நல்ல பையன்!..... ஒரு சமயம் நான் தவறவிட்ட நாலணாவைக்கூட எடுத்து என் வசம் ஒப்படைத்தவனாயிற்றே...' கைக் கடிகாரச் சங்கிலியை நெருடிக் கொண்டே எண்ணமிடலானேன்.

''தம்பி!''

''ஸார்!''

''நீ எப்போது வந்தாய்?''

''இப்போதான் ஸார், நீங்க அவசரமா இறங்கி வந்தீங்களே, அப்பத்தான்!''

''அப்படியா? சரி.... சரி!''

''ஏன் ஸார் ?''

''சும்மா தான்!''

''ஸார், நாளைக்கும் வேலை குடுங்க ஸார்!''

''ஓ....!''

''போய் வரேன் ஸார்!''

''சரி !''

அதிசயம் அங்கிருந்து போய் விட்டான்.

நான் பக்கத்திலிருந்த சின்னக் கடையில் சாயா குடித்து விட்டு நடந்து வந்து கொண்டிருந்தேன். எதிர் வீட்டுப் பெரியவர் எதிர்ப்பட்டார். "ஸார்! சாயந்திரம் மொட்டை மாடியிலேயிருந்து ஒரு பையன் ஓங்க வீட்டுக் குள்ளே குதிக்க விருந் தான் ஸார்! மாடி அறை யைத் திறந்தா போட்டி ருந்தீங்க? வெளிப்புறத் துச் சுவர் வழியே அவன் மேலே ஏறினான் ஸார்!" என்றார்.

அப்படியா? வாத்தி யார் வந்திருந்த வேளை யில் நான் கீழே வந்தேன் அல்லவா? அந்த நேரத் தில்தான் இந்தத் திருட்டு நடந்திருக்க வேண்டும்.

பெரியவர் மீசையை முறுக்கி விட்டார். பையன் யார் என்று மெல்ல விசாரித்தேன்.



"என்னடா, தலை மொட்டை அடிச்சிண்ட மாதிரி பாஷன்!"

"பாஷனுமில்லே ஒண்ணுமில்லே. என்னை விக்கிற விலைக்காகத்தான் இந்தத் திடீர் பாஷன்!"

அவர், "அதிசயம்!" என்றார். நான் அசந்து போனேன். என் பற்கள் நற நற வென்று சத்தமிட்டன. 'அட, பாவி!' அவரிடம் சொல்லிக் கொண்டு வழி பிரித்து வழி தொடர்ந்தேன். 'தமிழ்க் கவிசேவ நாத்ரன் திருச்சபை' என்ற பலகையின் அடியில், "இரக்கம் உள்ளோர் பாக்கியவான்கள்! அவர்கள் இரக்கம் பெறுவார்கள்!" என்ற வாசகம் என் மனத்தில் உறுத்தியது.

கம்பெனிக்கு வந்தேன். நெஞ்சில் புகைந் தது; நடராஜனை அனுப்பி அதிசயத்தை அழைத்து வரச் சொன்னேன். கீழ வாசல் கடைக்குப் போயிருப்பதாக அவன் அன்னை தகவல் தெரிவித்திருந்தார்கள். அல்லும் பகலும் ஓய்வின்றி உழைத்து மானமாக வாழ்ந்து வரும் அந்தத் தாய்க்கு இப்படி ஒரு தறுதலைத் திருட்டுப் பிள்ளையா? கடவுளே!

"ஸார்!" என்ற குரல் கேட்டுச் சுயப் பிரக்ஞை கொண்டு திரும்பினேன்.

அதிசயம் நின்று கொண்டிருந்தான் புதிய சட்டையுடன். கையில் ஒரு பை. முழுக் கனம். "கடைக்குப் போயிட்டு இப்பத் தான் வீட்டுக்குப் போறேன். வழியிலே உம்மா பார்த்துட்டுப் போகலாம்னு...."

எனக்கு ஆத்திரம் பற்றியது.

"வா....!"

அதிசயம் கூடத்துக்கு என்னுடன் வந் தான். அவனை ஒன்றும் கேட்கவில்லை. பேசாமல், அவனை நெருங்கி, அவனது சட்டைப் பையில் கையை விட்டேன். ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றும் நயாபைசாக்கள் முப்பதும் இருந்தன.

"கொஞ்ச முந்தி நீதானே நான் இல் லாத போது மாடிக்கு வெளிப்புறச் சுவரில் ஏறி, என் ஷர்ட்டில் இருந்த ஐம்பது ரூபா யைத் திருடினே? சொல், உண்மையை!"

என்று அவன் முடியை பற்றினேன்.

அதிசயம் எதிர்நோ அவன் கண்கள் சிவந்தன "யாரை ஸார், நீ டன்னு சொல்றீங்க?.. என்கிட்டே அந்த பத் பணம் இருக்காதா? இ ஒருவாட்டி இப்படி சொல்லீங்கன்னு....? அவன் வாயை மூ வில்லே.

அவ்வளவுதான்; அவ கண்களில் பழுத்தன.

"சொல்லு. நிஜத்தை இல்லாட்டா, இப்பவே உன்னைப் போலீஸிலே ஒப்படைச்சிடுவேன்!"

"நான் திருடினது தானே?" விம்மினான்.

நடராஜனைக் கூப்பிட்( "இவன் அம்மாவைக்கை யுடன் அழைச்சுக்கிட்( வா!" என்றேன்.

அடுத்த கணம், அதி சயம் என் பாதங்களிலே விழுந்து கதறினான் "ஸார்... ஸார்! நான் தானுங்க உங்க பணத்தைத் திருடினேன் ஆனால் இதை எங்க அம்மாகிட்டே மட்டும் சொல்லிப்பிடாதீங்க ஸார்! இந்த விஷயம் அதுக்குத் தெரிஞ்சா அது உயிரை விட்டுடும் ஸார்......!" என்று கெஞ்சினான்.

என் கோபம் தணியவில்லை. "உன் சட்டையைக் கழற்று!" என்றேன். அவன் கழற்றினான். அதைப் பறித்துக் கொண் டேன். 'ஐந்தும் சொச்சம்' என் உள்ளங் கையில் இருந்தது. "மீதிப் பணம் எங்கே?" என்று அதட்டினேன்.

பத்து ரூபாயில் இந்த மிகுதிப் பணம் போக, மீதத்துக்கு அரிசி முதலியன வாங்கிய தாகவும், பாக்கி ரூபாய் நாற்பதைத் தன் சொந்தக் கடனுக்கு மக் கடைக்குக் கொடுத்ததாகவும், இந்தப் பத்து ரூபாய் நான் வேலைக்கு முன் பணம் தந்ததாகத் தன் தாயிடம் போய் சொன்னதாகவும் அவன் விவரித்தான்.

அந்தப் பயலின் முகத்தை ஏறிட்டு நோக்கக் கூட எனக்குப் பிடிக்கவில்லை. இத்தனை சின்னஞ் சிறு பிராயத்திலே, இவ்வளவு கெட்ட புத்தியா? சே!

அவன் செருமல் அடங்கவில்லை.

என் சினமும் அடங்கவில்லை.

அவனை இப்படியே விட்டு வைக்கக் கூடா தென்று எண்ணி, அவன் அன்னைக்கு ஆள் அனுப்ப நினைத்தேன். நல்ல வேளையாக, நாங்கள் இருந்த இடத்துக்கு அவளே வந்து விட்டாள்!

என்னையும் தன் பிள்ளையாண்டானையும் அந்த அம்மாள் வியப்புடன் மாறி மாறிப் பார்த்தாள். அவள் முகத்தில் சோகம் நிறை விட்டது; துக்கம் தொண்டையை அடைத் தது. அடுத்த கணம் ஏதோ ஒருவிதப் பீதி யும் அவளுக்கு எழுந்தது.

"என்னுங்க ஐயா இவன் செஞ்சான்?" ...ன் குரலில் எவ்வளவுதான் பயங்கரம்!

விவரித்தேன். தன் தவற்றை ஒப்புக் ...ண்டான் சிறுவன்.

பத்ரகாளி ஆனுள் அந்தத் தாய். அதி பத்தின் மண்டையிலும் கன்னத்திலும் நல்ல டி, நல்ல உதை! மறு கணம், அந்த அம்மை ன் தலையிலும் முகத்திலும் ஓங்கி ஓங்கி டித்துக் கொண்டு. "பிதாவே! எங்களை ன்னியுங்கள்! பாவ மன்னிப்பு கொடுங்கள்" ன்று வேண்டினுள்கள்.

மறு ஐந்தாவது நிமிஷம்: வீறுகொண்ட ர்களைப் போல் புதல்வனை நாடி அவன் ராப்பைப் பிடித்துக் கொண்டு இரும்பவும் றைந்தாள்; அடுத்த ஐந்தாவது நிமிஷம் மியில் விழுந்து கதறினுள். மறுபடியும் யல் ஒப்பந்த பாவனை. மகனை நெருங்கியதும், வன் அஞ்சிவனுகப் பின் வாங்கினுன். டவில்லை. அவன் கைகளைப் பற்றிக் கொண் ாள்: "மகனே! நான் உன்னைக் காப் ாற்ற வேண்டியிருக்க, இன்னிக்கு நீ என்னை ம் காப்பாற்றி என் மானத்தையும் காப் ாற்றியிருக்கே. எல்லாம் எனக்குத் தெரி யும்! கர்த்தரே!...."

என்ன விந்தை இது? மீண்டும் வெறிக்கும் பிடித்துவிட்டதா அநிசயத்தின் அம்மைக்கு? "என்டா! நான் உன்னைத் திருடச் சொன்ன தைக் கேட்டு, நீ எதுக்குடா இந்தச் சின்ன வயசிலே திருடினே? நான் நாலைக்கு மண்டை யைப் போட்டதும் உங்க அப்பாரா ஓடியாந்து உனக்குப் புத்தி சொல்லப் போருரு? என்டா இப்படிச் செஞ்சே பாவி! ஐயோ! நான் பாவி! நான் பாவி! உன்னைக் குட்டிச்சுவராக் கிப்புட்டேன்! நான் பாவி!" என்று அலறித் தன்னையும் அடித்துக் கொண்டு, தன் மகனை யும் அடித்தாள்.

அநிசயம் நீர் சொரிந்தோட வைராக் கியத்துடன் அப்படியே நின்றவன், மெல்ல அம்மாவை அண்டி அவள் கைகளைப் பிடித்துத் தடுத்தான்: "அம்மா.... உங்க கை வலிக் கும்மா! நிறுத்தம்மா!" என்று மன்றாடினுன். அதே சமயத்தில் என்னிடம் சரண் புகுந்தான்: "ஸார்! எங்க மானத்தைக் காப்பாத்தி மன்னியுங்க ஸார்!" என் கால் விரல்களில் ஈரம் கொட்டியது!

என் கையில் இருந்த அந்தக் கிழிசல் சட்டை நழுவியது.

நான் பொறி கலங்கி விட்டேன்.

தன் நினைவு மீளர்ந்ததும், தலையைச் சிலுப் பிக் கொண்டு உயர்த்தி நிமிர்ந்தேன். என் காலடியிலே அரிசி. உப்பு – மிளகாய்–காய் கறிகள் சிதறிக் கிடந்தன. அதே குப்பையில், ஒருபுறம் ஐந்து ரூபாய் முப்பதுகாசுகளும், மறு பக்கத்தில் நான்கு பத்து ரூபாய் நோட்டுக்களும் வாகு தப்பிக் கிடந்தன!

அப்பப்பா!

நான் விம்மினேன்! 'தெய்வமே! ஏன் என்னை இப்படி ஆட்டிப் படைத்துச் சோதிக் கிருய்?' என் நெஞ்சு வெடித்து விடும்போல் இருந்தது!......

பரம பிதாவின் திருஉருவத்தின் கீழே இருந்த அநிசயத்தின் வீட்டு அடிப்பு எண்ணத் தொடங்கிய போது நேரம்: இரவு மணி ஒன்பது, நிமிஷம் ஏழு!






# இன்னலிலே இன்பம்

வழிப்போக்கன் ஒருவன் காட்டு வழியே போய்க் கொண்டிருக்கிறுன். காலிலே முள் குத்துகிறது. நொண்டி நடக்கிறுன். பின்னுல் ஒரு புலி துரத்து கிறது. முள் குத்திய காலோடு ஓடி ஒரு மரத்தின் மேல் ஏறுகிறுன். மரக் கிளையிலிருந்த கரடி ஒன்று அவனைப் பார்த்து உறுமுகிறது. மரத்தின் அருகே யிருந்த பாழுங் கிணற்றில் இறங்கலா மென்று பிடித்துக் கொண்டு கொஞ் சம் இறங்கிக் கீழே குனிந்து பார்க் கிறுன். ஒரு பெரிய நாக சர்ப்பம் கிணற்றின் அடியிலிருந்து படமெடுத்துச் சீறுகிறது. அதற்குள் மேலே புலி வரும் சத்தம் கேட்கிறது. இறங்கிய வன் கிணற்றிலிருந்த மரத்தின் வேர் ஒன்றைப் பிடித்துக் கொண்டு தொங்கு கிறுன். இதற்கிடையில் மரத்தின் மேலிருந்த தேனடையைக் கரடி கலைத்து விடவே தேனீக்கள் பறந்து வந்து அவன் கைகளிலும் முகத்திலும் கொட்டுகின்றன. அவன் பிடித்திருந்த வேரை எலி ஒன்று அறுத்துக்கொண் டிருக்கிறது.

அப்போது மேலே யிருந்த தேன் கூட்டிலிருந்து தேன் கீழே சொட்டு கிறது. அவன் தன் நாக்கை நீட்டி அந்தத் தேன் சொட்டைச் சப்புக் கொட்டிக் கொண்டு சுவைக்கிறுன். அவ னைச் சூழ்ந்துகொண்டிருக்கும் பல ஆப த்துக்களினுல் கண நேரத்தில் ஏதாவது ஒன்றினுல் மடியப் போகும் அவன் இதேபோல் வாழ்க்கையிலும் எத்தனை இன்னல்களிருந்தாலும், இன்பத்தை அடைய விழைகிருனே தவிர, இறுதிக் காலம் கண நேரத்தி லிருந்தாலும், இறைவனை நினைக்கவில்லை. காமக் குரோதங்களாலும் அஞ்ஞான மாயை யினுலும், மிருகம் போல் வாழ்ந்து, அல்லல்பட்டு, தன்னையே அவதிக்குள் ளாக்கித் தானே அழிந்து போகிருன்; எங்கிருந்து வந்தோம், எதற்காகப் பிறந்தோம், எங்கே, போகிறோம், இதுவரை என்ன செய்தோம் என்று எண்ணுமலே பிறவிப் பயனை உணரா மலே மனிதன் மடிகிருன். — கஸ்பாரத்

# அப்பாவின் அருமை

அவன் தன் அப்பாவுக்கு அருமந்தப் பிள்ளை. அருமைநாயகம் என்று பெயரிட்டு அவனை அருமையாக வளர்த்து வந்தார் அவர். அவன் அம்மா காலமானபோது அவனுக்கு வயது மூன்று கூட இராது. எனவே, அவரே அம்மையப்பனாக ஆகி — ஆம், உண்மையிலேயே அவர் பெயரே அம்மையப்பன்தான் — அருமைநாயகத்தை ஆளாக்கி விட்டார்.

அந்த அருமைநாயகம் இப்போது ஓர் ஆபீஸ் குமாஸ்தா. காலை ஏழரை மணிக்குப் புறப்பட்டாலும் மாலை ஏழரைக்கு முன் திரும்பி வர முடியாத தூரத்தில் பணியாற்றி வந்தான். அவனுக்குக் கல்யாணமாகாத வரையில் அவரே சோறாக்கிப் போட்டு ஆபீசுக்கு அனுப்பி வந்தார். அவனும் 'அப்பா அப்பா' என்று அவர் மேல் உயிரை வைத்திருந்தான். கல்யாணமான பிள்ளையோ?......



'அப்பா, அப்பா' என எதற்கும் அப்பாவை அழைத்த அருமைநாயகம் இப்பொழுதெல்லாம் அடிக்கொருதரம் 'அடியே, அடியே!' என்று அழைக்கலானான். ஆம். அவனுக்கு மணமாகி இல்லத்துக்கு ஓர் இல்லாள் வந்து விட்டாள். இத்தனை நாட்களும் காரியங்கள் செய்து பழகிய கையாயிற்றே! மருமகளுக்கும் உதவியாக இருக்கட்டுமென்று அம்மையப்பன் வீட்டுக் காரியங்களைத் தாமே வலிய வந்து ஏற்றுச் செய்வார். ஆனால் புது மண மோகத்தில் அருமை நாயகம் தன் தகப்பனாரை — தன்னை ஆளாக்கிவிட்ட தகப்பனாரை — மறந்தான். அன்று அவரது கைக்காரியங்கள் கரும்பாக இனித்தன; இன்று வேம்பாகக் கசந்தன. இந்தக் கிழம் எதற்கு இப்படிக் கழுத்தை அறுக்கிறது? — இப்படித் தொடங்கிய பேச்சு, 'இது போய்த் தொலையாதோ?' என்ற அளவுக்கு முன்னேற்றம் கண்டது. அதற்காக அம்மையப்பன் வருந்தவில்லை. 'இதுதான் உலகம், இதுதான் இல்லறம்' என்று எண்ணினார். கூடியவரையில் வீட்டுக் காரியங்களில் தலையிடுவதை நிறுத்திக்கொண்டார். 'கூப்பிட்டால் உணவருந்தப் போவது, இல்லாவிட்டால் வீட்டுத் திண்ணை' என்ற கொள்கையை வகுத்துக் கொண்டார்.

இப்படியிருக்கும்போதுதான் 'இல்லானை இல்லாளும் வேண்டாள்' என்ற காரியம் நிகழ்ந்தது. சர்க்கரைப் பஞ்சம், காப்பிக் கொட்டைப் பஞ்சத்தோடு நின்ற பஞ்சம் அரிசிப் பஞ்சமாக உருவெடுத்தது. அரிசியா? இல்லை. கோதுமையா? இல்லை. ரவையா? இல்லை. மைதா? இல்லை. இப்படியாக 'இல்லை'ப் பொருள்கள் ஏறின.

அருமைநாயகத்துக்கோ பொழுது அருமையாகத்தான் கிடைத்து வந்தது. காலை ஏழரை மணிக்குப் புறப்படுபவன் மாலை ஏழரை மணிக்கு மேல்தான் திரும்பி வர முடிகிறது என்றால், இரண்டு லிட்டர் அளவும் 'இல்லை'ப் பொருள்களும் வாங்குவது அவனுக்குப் பொழுது எங்கிருந்தது? நடுப் பார்த்தியாக ஒரு 'பிரமுகி'யை நிறுத்தலாம் என்றால், அவன் வாங்கும் சம்பளத்தில் அதற்குச் செலவழிக்கப் பணம் ஏது? கடைக்குக் கடை ஆட்களை நிறுத்தி வாங்கிறார்களே, அவர்களிடமிருந்து இந்தப் பொருள்களைப் பெறலாமென்றால் அதற்குத் தரவேண்டிய கட்டணம் அவன் வாங்கு சம்பளத்துக்குக் கட்டாது. அப்பாவைச் சொல்லலாமென்றாலோ அவரை அரிந்தெடுத்து வீட்டுக்குள் வரவொட்டாமல் செய்தாகி விட்டது. இந்த நிலையில் இல்லானை இல்லாள் எப்படி வேண்டுவாள்?

வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்த அம்மையப்பனுக்கு வீட்டுக்குள் தன் அருமை மகன் அருமைநாயகத்துக்கும் அவன் இல்லாளுக்கும் நடக்கும் இந்த 'இல்லை'ப் போரை, இல்லறப் போரைக் காணப் பொறுக்கவில்லை. மகன் அலுவலகத்துக்குச் சென்றபின், தாமாக வலியச் சென்று உள்ளிருந்து பணத்தையும் பையையும் எடுத்துக் கொண்டு கால் கடுக்க ஒவ்வொரு 'கியூ'வாக நின்று கிடைத்ததை வாங்கி வந்தார்.

இரவு எட்டு மணிக்கு வீட்டுக்கு வந்த அருமைநாயகத்துக்கு ஒரே அதிசயமாக இருந்தது. ஆம், வீட்டில் அடுப்புப் புகைந்தது. எப்படி? — அதிசயம் கலந்த விழிகளோடு தன் மனைவி அதிசயத்தை நோக்கினான். 'மாமா வாங்கி வந்தார்' என்று அவள் குறிப்பால் உணர்த்தினாள்.

'அப்பாவா?' — அப்பாவின் அருமை தெரியாமல் இத்தனை நாளும் கழித்துக் கொட்டினேனே! — அருமைநாயகம் அடுப்பில் சொரிந்துகொண்டிருக்கும் உலைநீரைப் போல மருகினான். 'அப்பா!' என்று கூக்குரலிட்டு அம்மையப்பன் காலடிகளில் போய் விழுந்தான். அவனுக்கு அதற்கு மேல் சொற்கள் வரவில்லை.

''அருமை மகனே! அஞ்சாதே. கால் கடுக்கக் கைசோர இந்த அரிசிக் கியூவில் நின்று எப்படியாவது அரிசி வாங்கி வந்து போடுகிறேன். நீ நிறையக் கவலைப்படாமல் காரியாலயம் போய் வா. அந்தப் பணியை நீ செய்யா விட்டால் இந்தப் பணி என்னுடையதாகாது. பார்!'' என்றார் அம்மையப்பன்.

அவர் விழிகள் பனித்தன. ஒரு வேளை மகனைத் தம்மோடு சேர்த்து வைத்த அரிசிப் பஞ்சத்தை வாழ்த்தி மகிழ்ந்தாரோ? அல்லது அரசு வேண்டுமென்றே வருவித்து மக்களைக் கஷ்டப்படுத்தும் இந்தத் தட்டுப்பாட்டை நினைத்து மனமுருகினாரோ? — அம்மையப்பனைப் பொறுத்தவரை இப்பஞ்சம் எத்தனை அப்பன் — பிள்ளைகளை வாட்டியிருக்குமோ என்ற துயர நினைவாகத்தான் இருக்கும். —ரா. வீ.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

REGISTERED No. M. 4398
Registered as a Newspaper in Ceylon




இன்று
புதிய உறையுடனே
மிளிருகிறது

# லைப்பாய் இருக்குமிடம்:

# அதுவே... ஆரோக்கியம் இருக்குமிடம்

புத்துணர்வு! உற்சாகம்! ஆரோக்கியத்தின் புன்னகை! லைப்பாய் தேய்த்துக் குளித்த நல்லின்பம். அழுக்கிலுள்ள கிருமிகளைக் கழுவிக் களைகிறது லைப்பாய்.
குளித்த உடம்புக்குச் சுத்தம் ... சுறுசுறுப்பு ... சுகம்!
புதிய அழகு மேலுறை அணிந்த லைப்பாய்... கையடக்கமான புதிய வடிவம்: உங்களுக்கென்றே உருவானதல்லவோ. இன்றே பெறுவீர் லைப்பாய் சோப்.

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

L. 67-140 TM